தமிழரசு

Tamilarasu

(Monthly)

கலைஞர் 100
1924 - 2023

ஜூன் 2023 (June 2023)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 53
இதழ் (Issue) : 12

ஜப்பான் டோக்கியோ ஷிமிசு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 03.06.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், ஒடிசா சென்ற தமிழ்நாட்டு குழுவினருடன் காணொலிக்காட்சி வாயிலாக மீட்புப்பணிகளின் நிலவரங்கள் குறித்தும், விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள், 04.06.2023 அன்று, மாண்புமிகு ஒடிசா மாநில முதலமைச்சர் திரு. **நவீன் பட்நாயக்** அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் பாதுகாப்பு, மீட்புப் பணிகள் மற்றும் மருத்துவ உதவிகள் குறித்து கலந்துரையாடினார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம்
வைகாசி - ஆனி
ஜூன் 2023

மலர் : 53 விலை ரூ.30 இதழ் : 12

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசரு ளேறு. (குறள்: 381)

ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடிமக்கள், குறையாவளம், குறையற்ற அமைச்சு, முரிபடாத நட்பு, மோதியழிக்க முடியாத அரண் ஆகிய ஆறு சிறப்புகளும் உடையதே அரசுகளுக்கிடையே ஆண் சிங்கம் போன்ற அரசாகும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா 6

★ ரூ.125 கோடிச் செலவில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் 17

★ ரூ.762.30 கோடிச் செலவில் 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 4.0 தொழில்நுட்ப மையங்கள் 23

★ இரண்டாண்டுகளில் 5 ஜப்பானிய நிறுவனங்களுடன் ரூ.5,596 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 32

★ சிங்கப்பூரில் அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான "வேர்களைத் தேடி திட்டம்" 41

★ ரூ.2,003 கோடிச் செலவில் 16 புதிய துணை மின் நிலையங்கள் 53

★ சென்னை, கொளத்தூரில் ரூ.116.48 கோடியில் புதிய திட்டப்பணிகள், ரூ.61.98 கோடியில் "மேயர் சிட்டி பாபு மேம்பாலம்" 61

★ ரூ.92.50 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்கா 70

★ பகுப்பாய்வு செய்யப்பட்ட "செழிப்பு" இயற்கை உரம் விற்பனை ..71

★ ரூ.20,000 கோடி முதலீட்டில் தொழிற்சாலை நவீனமயமாக்கல், நவீன வகை கார்கள் உருவாக்குதல் போன்ற திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 74

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 29.05.2023 அன்று டோக்கியோவில், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஷிமிசு நிறுவனத்திற்கும் இடையே, கட்டுமானம், கட்டுமான பொறியியல் மற்றும் அதன் தொடர்புடைய வணிகத்தைத் தமிழ்நாட்டில் மேற்கொள்வதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

கோபாலபுரம் இல்லம்,
சென்னை.

முத்தமிழறிஞர் கலைஞர்
நினைவிடம்,
மெரினா கடற்கரை.

பேரறிஞர் அண்ணா நினைவிடம்,
மெரினா கடற்கரை.

ஜூன்: 03

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100ஆவது பிறந்த நாள்

ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகம், சென்னை.

ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகம், சென்னை.

முரசொலி வளாகம், சென்னை.

தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 02.06.2023 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர் திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டார். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக ஆற்றிய பணிகள், நிறைவேற்றியத் திட்டங்கள் குறித்த குறும்படத்தையும் வெளியிட்டார்.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தவரும், 13 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, 13 முறையும் வெற்றி பெற்றவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாட்டின் அரசியல் தலைவராக மட்டுமல்லாமல், இந்திய அரசியலின் திசையைத் தீர்மானிப்பவராகவும் திகழ்ந்த நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முக ஆற்றலையும், அவர் படைத்தளித்த மக்கள் நலத் திட்டங்களையும் தமிழ்நாட்டின் வருங்காலத் தலைமுறையினர் என்றென்றும் நினைவில் போற்றும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாநிலம்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வெளியிட்டு ஆற்றிய உரை - 02.06.2023

முழுவதும் தமிழ்நாடு அரசால் கொண்டாட முடிவு செய்யப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 22.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களைப் பெருமைப்படுத்தும் விழாக்களாக மட்டுமல்லாமல், அவர் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக அறிவித்து, நிறைவேற்றியத் திட்டங்களை இளைய சமுதாயத்தினர் அறிந்து கொள்ளும் வகையில்



இந்த விழாக்கள் அமைய வேண்டும் என்றும், மாதந்தோறும் ஒவ்வொரு பொருளின் அடிப்படையில் இந்த விழாக்களை நடத்திட வேண்டும் என்றும், பெரிய அளவிலான விழாக்களாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பினரும் பங்கெடுக்கும் விழாக்களாக இவற்றை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், அரசு நடத்துவதாக மட்டுமல்லாமல் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், மாணவர்கள், பெண்கள், அரசு ஊழியர்கள், பயனடைந்த மக்கள் ஆகியோர் இணைந்து கொண்டாடுவதாக அமைய வேண்டும் என்று தெரிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, 02.06.2023 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை வெளியிட்டார்.

அதனைத் தொடர்ந்து, தமிழினத் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் நலனிற்காக ஆற்றிய பணிகள், நிறைவேற்றியத் திட்டங்கள் குறித்த குறும்படத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

முன்னதாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார். இப்புகைப்படக் கண்காட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், சாதனைகள், அவற்றால் மக்கள் பெற்றப் பயன்கள், இளமைக் காலம் முதல் அவர் மேற்கொண்ட அரசியல் பயணம், பல்வேறு அரசியல் மற்றும் முக்கியத் தலைவர்களுடனான சந்திப்புகள் போன்றவை குறித்துக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இப்புகைப்படக் கண்காட்சி ஜூன் மாதம் முழுவதும் மக்கள் பார்வையிட்டுப் பயன்பெறும் வகையில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

பாலர் இல்லமாக இருந்த இந்த இடத்தைத் தலைவர் கலைஞர் அவர்களால் கலைவாணர் அரங்கமாக ஆக்கப்பட்டு, அந்தக் கலைவாணர் அரங்கத்தில் நடைபெறும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு இலச்சினை, அதாவது, லோகோ வெளியீட்டு விழாவிற்குச் சிறப்புச் சேர்க்கக்கூடிய வகையில் நம்முடைய பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் வருகை தந்திருக்கிறார்கள். தந்தைப் பெரியாரின் கொள்கை வாரிசான தலைவர் கலைஞரை வாழ்த்துவதற்காக மகாத்மா காந்தியின் பேரன் அவர்கள் இங்கே வருகை தந்திருக்கிறார்.

திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக நாங்கள் இருந்தாலும், அண்ணல் காந்தியடிகளுக்கும் எங்கள் இயக்கத்துக்குமான தொடர்பை மரியாதைக்குரிய

திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் நன்கு அறிவார்.

தந்தைப் பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்குவதற்கு முன்பு காங்கிரஸ் இயக்கத்தில் அண்ணல் காந்தியடிகளின் தொண்டராகத்தான் இருந்தார். கதராடை உடுத்தினார். கதர்த் துணிகளோடு நாடு முழுவதும் சுற்றினார். கள்ளுக்கடை மறியல் நடத்தினார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இருந்தார். வகுப்புரிமையைக் காக்க தனி இயக்கம் தேவை என்பதால் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார் தந்தைப் பெரியார் அவர்கள்.

மதவெறியன் கோட்ஸே-வால் மகாத்மா காந்தி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோது, தந்தைப் பெரியார் அடைந்த வேதனை என்பது வார்த்தைகளால் விவரிக்க முடியாதது. "இருந்த காந்தி, அவர்கள் காந்தி! இறந்த காந்தி, எங்கள் காந்தி!" என்றார்.

அதேபோல், பேரறிஞர் அண்ணா அவர்களும் அண்ணல் காந்தியடிகள் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள். 'உலகப் பெரியார் காந்தி' என்ற தலைப்பில் 1948ஆம் ஆண்டு ஒரு புத்தகம் எழுதினார் பேரறிஞர் அண்ணா. அண்ணல் காந்தி அவர்கள் கொல்லப்பட்ட போது,

"காந்தியாரின் புகழொளியை அல்ல,
அவரது உழைத்து அலுத்த உடலைத்தான்
வெறியன் சுட்டு வீழ்த்தினான்" - என்று

தனது 'திராவிட நாடு' இதழில் எழுதினார்.

அந்த வரிசையில்தான் கலைஞர் அவர்களும் அண்ணல் காந்தியடிகள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். நாங்கள் எப்படி அண்ணல் காந்தியடிகள் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறோமோ, அதைப்போல தந்தைப் பெரியார் – பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – திராவிட இயக்கம் மீது மதிப்புக் கொண்டவர்தான் நம்முடைய திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள்.

'திராவிடக் கப்பல் சென்றடைய வேண்டியது கூட்டாட்சித் துறைமுகம்' என்றும் சொன்னார். 'தந்தைப் பெரியாரின் இலட்சிய அரசியலை, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் செல்வாக்கு, ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியது' என்றும் எழுதியவர் திரு.கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள். மேலும், 'பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரின் அரசியல் என்பது ஏழைகளுக்கு ஆதரவான, உழவர்களுக்கு ஆதரவான,

சாமானிய மக்களுக்கு ஆதரவான, சாதியத்துக்கு எதிரான, மதவாதத்துக்கு எதிரான கொள்கைகளின் வழியே ஆட்சியதிகாரத்தை அணுகுவது' என்றும் எழுதியிருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் கனரகச் சலவை இயந்திரங்கள் வழங்கியபோது அதனை திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்கள் மனந்திறந்து பாராட்டினார்.

அண்ணல் காந்தியடிகளின் பேரனான அவர் இங்கு வருகை தந்து, கலைஞரையும், எங்களது ஆட்சியையும் பாராட்டிப் பேசியது எனக்கு வாழ்நாளில் கிடைத்தற்கரிய மாபெரும் பேறு! இந்தப் பெயரைக் காப்பாற்றும் வகையில் நான் நடந்து கொள்வேன் என்று மரியாதைக்குரிய திரு. கோபாலகிருஷ்ண காந்தி அவர்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

நாளை ஜூன் 3ஆம் நாள்!

வீழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்துக்கு விடிவெள்ளியாய்த் தோன்றி – வாழும் காலத்தில் ஒளிதரும் உதயசூரியனாக வாழ்ந்து – நிறைந்த பின்பும் கலங்கரை விளக்கமாக வழிகாட்டிக் கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தோன்றிய நாள். அவரது பிறந்த நாள் என்பதைவிட, தமிழ்ச் சமுதாயத்திற்கு உயிராக – உணர்வாக இருந்தவர் – உதயமான நாள் என்றே சொல்ல வேண்டும்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவைத் தமிழ்நாடு அரசு ஓராண்டு காலம் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது. ஏனென்றால், அவர்களே தமிழ்நாடு அரசு ஆவார். என் தலைமையிலான இந்தத் திராவிட மாடல் அரசையே அவருக்கும் அவரது புகழுக்கும் நான் காணிக்கை ஆக்குகிறேன். இந்த நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி என்றால் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அவர் தொடாத துறையும் இல்லை – தொட்டுத் துலங்காத துறையும் இல்லை என்ற வகையில் அனைத்துத் துறையிலும் முத்திரை பதித்தவர்.

அவர் போட்டுக் கொடுத்த பாதையில்தான் அனைத்துத் துறைகளும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பொதுநலனும் தொலைநோக்குப் பார்வையும் கொண்ட அரசாங்கத்தைக் கலைஞர் அவர்கள் நடத்தினார். அதனால்தான் ஐந்து முறை இந்த மாநிலத்தை ஆட்சி செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது.

விடுதலை இந்தியாவில் நடந்த 13 சட்டமன்றத் தேர்தல்களில் நின்று – வென்று காட்டிய வெற்றி வீரராக அவர் இருந்ததற்கு இதுதான் காரணம் – மக்களோடு மக்களாக இருந்ததுதான். அவர் மக்களின் மனங்களில் என்றும் ஆட்சி செய்கிறார், இன்றும் வாழ்கிறார் கலைஞர். இலக்கியவாதிகளுக்கு எல்லாம்

இலக்கியவாதியாக - கவிஞர்களுக்கு எல்லாம் கவிஞராக - அரசியல் தலைவர்களுக்கு எல்லாம் தலைவராக - முதலமைச்சர்களுக்கு எல்லாம் முதல்வராகத் திகழ்ந்த தலைவர் கலைஞருடைய நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாடத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. அதுகுறித்த இலச்சினையை வெளியிட்டு இருக்கிறோம்.

கலைஞர் பெயரால் மாபெரும் நூலகம் மதுரையில் அமைய இருக்கிறது. சென்னையில் அவரது நூற்றாண்டு நினைவு மருத்துவமனை அமைய இருக்கிறது. அரசின் சார்பில் மாதம்தோறும் – மாவட்டம்தோறும் விழாக்களை நடத்த இருக்கிறோம். இவை புகழ்பாடும் விழாக்களாக மட்டுமல்ல – கலைஞர் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்குச் செய்த சாதனைகளை விளக்கும் விழாக்களாக அமைய இருக்கின்றது. பயன்பெற்றோர் பங்கேற்கும் விழாக்களாக அமைய இருக்கின்றது.

கடந்த ஐம்பது ஆண்டுகாலத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் அடித்தளம் அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். தொலைநோக்குப் பார்வையும் மிகச் சரியான திட்டமிடுதலும் மக்கள் மீது உண்மையான பற்றும் கொண்ட தலைவரால்தான் இப்படிச் செயல்பட முடியும் என்பதைத் தலைவர் கலைஞர் அவர்கள் மெய்ப்பித்துக் காட்டினார்கள்.

அவர் உருவாக்கிய பள்ளிகள் – கல்லூரிகள் – நிறுவனங்கள் – தொழிற்சாலைகள் – நகரங்கள் – மிகப்பெரிய வளர்ச்சியைத்தான் நாம் இப்போது பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அவரால் பள்ளிப்படிப்பைப் படித்தவர்கள் – கல்லூரிக் கல்வியைத் தொட்டவர்கள் – பொருளாதார விடுதலை அடைந்த மகளிர் – வேலைவாய்ப்பைப் பெற்ற அரசு ஊழியர்கள் – பணியாற்ற இடம்பெற்ற தொழிலாளர்கள் – இப்படிக் கோடிக்கணக்கான மக்களின் நல்வாழ்க்கையோடு தொடர்புடையவர் நம்முடைய தலைவர் கலைஞர்.

இன்றைய சென்னையிலும், சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய திருவள்ளூர் – காஞ்சிபுரம் மாவட்டங்களில் இந்தளவுக்குத் தொழில் நிறுவனங்கள் உதயமாகி இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் கலைஞர் ஆட்சிக்காலம் தான் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது. அதேபோன்ற தொழில் புரட்சியைத்தான் இன்று நமது திராவிட மாடல் அரசும் உருவாக்கி வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னால் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டை நோக்கி ஏராளமான தொழில் முதலீடுகளை ஈர்த்து வந்துள்ளேன். ரூ.3,233 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்களும் கையெழுத்தாகி இருக்கின்றன.

வருகிற ஜனவரி மாதம் சென்னையில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்த இருக்கிறோம். அந்த மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்று சிங்கப்பூர், ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு நான் அழைப்பு விடுத்திருக்கிறேன். தமிழ்நாட்டின் மீதும் திராவிட முன்னேற்றக் கழக அரசு மீதும் அவர்கள் வைத்திருக்கக்கூடிய மதிப்பையும் மரியாதையையும் அப்போது நான் அறிந்து கொண்டேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் சிங்கப்பூர், ஜப்பான் தொழில் நிறுவனங்கள் அறிந்து வைத்திருக்கின்றன. இந்தியாவில் முதலீடு செய்யும்போது நிச்சயமாகத் தமிழ்நாட்டில்தான் எங்களது நிறுவனங்களைத் தொடங்குவோம் என்று அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், தலைவர் கலைஞர் போட்டுக் கொடுத்த அடித்தளம் தான்.

சிங்கப்பூர் மக்களிடத்திலே, தமிழர்களிடத்திலே நான் உரையாற்றும்போது தலைவர் கலைஞர் அவர்கள் பெயரைச் சொன்னாலே கைதட்டுகிறார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமல்ல – உலகெங்கும் வாழக்கூடிய தமிழினத்தின் தலைவராகத் தலைவர் கலைஞர் அவர்கள் செயல்பட்டார் என்பதை அவர்கள் பெருமிதத்தோடு சொல்கிறார்கள். அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடே கொண்டாட இருக்கிறது. உலகெங்கும் வாழும் தமிழர்கள் கொண்டாட இருக்கிறார்கள்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய நூற்றாண்டு விழாக்களை முன்னெடுக்க அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள், பல்வேறு துறையைச் சார்ந்த வல்லுநர்கள் கொண்ட குழுக்கள் விரைவில் அமைக்கப்படும், இரண்டொரு நாட்களில் அது வெளியிடப்படும். அந்தக் குழுக்கள் முத்தமிழறிஞர் கலைஞருடைய பன்முக ஆற்றலால் நிகழ்த்தப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள், மக்கள் பணிகளைக் கொண்டாடும் விதமாக நிகழ்ச்சிகளை

ஏற்பாடு செய்து இந்த ஆண்டு முழுவதும் தமிழ்நாடு முழுக்க மிகச் சிறப்பான வகையில் எழுச்சியோடு நடத்தப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் அறிவிக்கிறேன்.

தலைவர் கலைஞர் என்பவர் தனிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சொத்து அல்ல; தமிழ்நாட்டின் சொத்து! உலகத் தமிழர்களின் சொத்து!

தலைவர் கலைஞர் அவர்களுக்கு மாபெரும் கனவு இருந்தது – உலகில் தலைசிறந்தவர்களாகத் தமிழர்கள் வலம் வர வேண்டும் என்று அவர் நினைத்தார். அதைப்போலவே, உலகத்தவர் அனைவரும் வலம் வரும் இடமாகத் தமிழ்நாட்டை ஆக்கிக் காட்ட வேண்டும் என்றும் நினைத்தார்.

இந்தியாவில் எந்த மாநிலமும் முன்னெடுக்காதபோது, 1997ஆம் ஆண்டே டைடல் பார்க்கை உருவாக்கித் தகவல் தொழில்நுட்பத் துறையில் புரட்சியை ஏற்படுத்தியவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அந்தத் துறையில் தமிழ்நாடு மாபெரும் சாதனையை நிகழ்த்துவதற்கும்– உலக நிறுவனங்கள் அனைத்தும் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கும் வாசலைத் திறந்து வைத்தது கலைஞர் உருவாக்கிய அந்த டைடல் பார்க்தான்.

அந்த வகையில் – நவீனத் தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான தலைவர் கலைஞரின் நூற்றாண்டு தொடங்குவதை ஒட்டி அவருக்கு, அவருடைய புகழுக்கு மேலும் மேலும் புகழ் சேர்க்கும் வகையில், ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

தலைநகர் சென்னையில் உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு அரங்கம் அமைக்கப்படும். உலகளவில் உள்ள கூட்ட அரங்கங்களில் மகத்தான "BEST IN CLASS" Convention Centre–ஆக இது அமைய வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

உலகளாவிய தொழில் கண்காட்சிகள் – வர்த்தக மாநாடுகள் – தொழில்நுட்பக் கூட்டங்கள் – உலக நிறுவனங்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் – உலகத் திரைப்பட விழாக்கள் – போன்றவை நடக்கும் இடமாகக் 'கலைஞர் Convention Centre' அமைய வேண்டும் என எண்ணுகிறேன். இது, சிங்கப்பூர், ஜப்பான் பயணத்தின்போது எனக்கு ஏற்பட்ட எண்ணம்!

மிகப்பெரிய Convention Centre-கள் உலகின் பல நாடுகளில் இருப்பதுபோல தமிழ்நாட்டில் – சென்னையில் இருக்கிறது – அதுவும் கலைஞர் பெயரால் இருக்கிறது என்பதுதான் மாபெரும் பெருமையாக இருக்கும். Convention Centre போன்ற பயன்பாட்டுச் சின்னங்கள் கலைஞர் புகழை நூற்றாண்டுகள் கடந்தும் – உலகமெங்கும் எடுத்துச் செல்லும்.

ஏற்கெனவே, தற்போது சென்னை நந்தம்பாக்கத்தில் 10 ஆயிரம் சதுர மீட்டர் பரப்பளவில் வர்த்தக மையம் அமைந்திருந்தாலும், கூடுதலாகக் கட்டப்பட்டு வரும் வர்த்தக மையம் சுமார் 12 ஆயிரம் சதுர மீட்டர் அளவில் அது இருந்தாலும், இது வளர்ந்து வரும் தேவைக்கும், எதிர்காலத் தேவைக்கும் போதுமானதாக இல்லை. எனவே, இதனைக் கருத்தில் கொண்டு அமையவுள்ள இந்தக் 'கலைஞர் Convention Centre' சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் 5 ஆயிரம் நபர்கள் அமரக்கூடிய - உலகத்தரத்திலான மாநாட்டு அரங்கம், கண்காட்சி அரங்கங்கள், நட்சத்திரத் தரத்திலான தங்கும் விடுதிகள், உணவகங்கள், ஊடக அரங்கங்கள், பூங்காக்கள், பன்னடுக்கு வாகன நிறுத்தம் - ஆகியவற்றை உள்ளடக்கி மிகப்பிரம்மாண்டமாக உலகத் தரத்தில் சென்னையில் அமைக்கப்படும் என்பதைப் பெருமையோடும், மகிழ்ச்சியோடும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'கலைஞர் convention centre' என்பது தமிழ்நாட்டு இளைய சக்தியை – அறிவு சக்தியை பூமிப்பந்தில் உள்ள அனைத்து இடங்களுக்கும் அழைத்துச் செல்வதாக அமையும்.

'நான் முதல்வன்' என்ற திட்டத்தின் மூலமாகப் பயிற்சி பெற்று வரும் இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு மாணவர்களுடைய, இளைஞர்களுடைய அறிவுக்குடியிருப்பாகக் 'கலைஞர் convention centre' அமையுமானால் காலமெல்லாம் கலைஞர் வாழ்வார்! அதுவே நம்மை ஆளாக்கிய தலைவருக்கு நாம் செய்யக்கூடிய சிறப்பான, உண்மையான புகழாக இருக்கும்.

கலைஞரின் முகம்தான் நமது இலச்சினை!

கலைஞரின் கொள்கைகள்தான் நமது இலட்சியங்கள்!

கலைஞரின் கனவுகளை நிறைவேற்றுவதுதான் நமது வாழ்நாள் கடமை என்பதைச் சொல்லி முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் இன்னும் பல நூறாண்டுகள் கடந்து, வாழ்க, வாழ்க, வாழ்க.

விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்ட காவிரி பாசனப் பகுதிகளில் ரூ.90 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் தூர்வாரும் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 09.06.2023 அன்று, காவிரி டெல்டா மாவட்டங்களான திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தஞ்சாவூர் சுற்றுலா மாளிகையில், இவ்வாண்டு காவிரி பாசனப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு, தூர்வாரும் பணிகள் குறித்த குறும்படத்தைப் பார்வையிட்டார்.

2023-2024ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், நீர்வளத்துறையின் மூலம் கால்வாய்கள் சீரமைப்பு, ஏரிகள் புனரமைப்பு, அணைக்கட்டுகள் புதுப்பித்தல், மழைநீர் சேகரிப்பு போன்ற எண்ணற்ற திட்டங்கள் உழவர்களையும் உள்ளடக்கிச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டில் காவிரி பாசனப் பகுதிகளில் உள்ள ஆறுகள், வாய்க்கால்கள், வடிகால்களில் தூர்வாரும் பணிகள் ரூ.90 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2023–2024ஆம் ஆண்டு திருச்சி மண்டலத்தைச் சார்ந்த பாசன ஆதாரங்களில் தூர்வாரப்படுகின்ற பணிகளின் விவரம்.

சேலம் மாவட்டத்தில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் 31 பணிகளும், நாமக்கல் மாவட்டத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 5 பணிகளும், திருச்சி மாவட்டத்தில் ரூ.15.88 கோடி மதிப்பீட்டில் 100 பணிகளும், கரூர் மாவட்டத்தில் ரூ.6.48 கோடி மதிப்பீட்டில் 38 பணிகளும், அரியலூர் மாவட்டத்தில் ரூ.3.13 கோடி மதிப்பீட்டில் 13 பணிகளும், பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் 39 பணிகளும், தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.20.45 கோடி மதிப்பீட்டில் 189 பணிகளும், திருவாரூர் மாவட்டத்தில் ரூ.12.83 கோடி மதிப்பீட்டில் 111 பணிகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.3.98 கோடி மதிப்பீட்டில் 28 பணிகளும், மயிலாடுதுறை மாவட்டத்தில்

ரூ.8.06 கோடி மதிப்பீட்டில் 51 பணிகளும், புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.2.69 கோடி மதிப்பீட்டில் 31 பணிகளும், கடலூர் மாவட்டத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் 55 பணிகளும் என மொத்தம் ரூ.90 கோடி மதிப்பீட்டில் 4,773.13 கிலோ மீட்டர் தூரத்திற்கு, 691 பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு, நிகர சாகுபடிப் பரப்பினை உயர்த்தவும், நீர் ஆதாரங்களைச் சிறந்த முறையில் மேம்படுத்தவும், கால்வாய்கள், வாய்க்கால்கள், ஏரிகள் போன்றவற்றைப் புனரமைத்து பாதுகாக்கும் பணிகளை ஆண்டுதோறும் நேரில் ஆய்வு செய்து வருகிறார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வேளாண் துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் நடத்தும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாயப் பெருமக்கள் கோரும் இடங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவிரி டெல்டா மாவட்டங்களில் தூர்வார ஆணையிட்டு, அப்பணிகள் நடைபெறும் இடங்களில் நேரில் ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடியில் உள்ள முதலை முத்துவாரி மற்றும் விண்ணமங்கலத்தில் உள்ள "சி" பிரிவு வாய்க்காலில் மேற்கொள்ளப்பட்ட தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு :

தஞ்சாவூர் மாவட்டம், ஆலக்குடி கிராமத்திலுள்ள முதலைமுத்துவாரி வடிகால் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் 3.50 கி.மீ. தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். இத்தூர்வாரும் பணி மேற்கொள்வதால் சென்னம்பட்டி, குருவாடிப்பட்டி, நாட்டாணி கிராமங்களில் மழையினால் ஏற்படும் வெள்ளச் சேதங்கள் தடுக்கப்படுவதோடு வண்ணாரப்பேட்டை கிராமத்திலுள்ள சுமார் 2,042 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் விண்ணமங்கலத்தில் உள்ள "இ" பிரிவு வாய்க்காலின் வேளாண்பொறியியல் துறை மூலம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் 2.50 கி.மீட்டர் தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இத்தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதால் பூதராயநல்லூர், விண்ணமங்கலம், தீச்சசமுத்திரம், வெங்கடசமுத்திரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 450 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் உள்ள கூழையாறு வடிகால், ஆலத்தூர், இலால்குடி வட்டங்களில் உள்ள இருதயபுரம், வெள்ளனூரில் நந்தியாறு வடிகாலில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள கூழையாற்றில் ரூ.194.80 இலட்சம் மதிப்பீட்டில் 7.79 கி.மீ. தூரம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் ஆய்வு செய்தார். இவ்வடிகால் தூர்வாரும் பணிகளை மேற்கொள்வதால் மேட்டுப்பட்டி, திண்ணியம், செங்கரையூர் மற்றும் டி.கல்விக்குடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நிலங்கள் வெள்ள பாதிப்பில் இருந்து தடுக்கப்படும்.

தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆலத்தூர், இலால்குடி வட்டங்களில் அமைந்துள்ள இருதயபுரம், வெள்ளனூர் கிராமங்களில் நந்தியாற்றின் நீரோட்டப் பாதையில் உள்ள முட்செடிகளை முழுவதுமாக அகற்றி அதனை 5.90 கி.மீ. நீளம் தூர்வாரி இருபக்கக் கரைகளையும் பலப்படுத்திட ரூ.194.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார். இதன் மூலம், ஊட்டத்தூர், நம்புக்குறிச்சி, பெருவளப்பூர், காணக்கிளியநல்லூர், வந்தலைக் கூடலூர், சங்கேந்தி, வெள்ளனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5,777 ஏக்கர் பாசனப் பரப்புகள் வெள்ள பாதிப்பிலிருந்து தடுக்கப்படும்.

இந்தத் தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டால், மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பாசன வாய்க்கால்களில் உரிய நேரத்தில் கடைமடை வரை தங்குதடையின்றிச் சென்றடையவும், வெள்ளகாலங்களில் விரைவில் தண்ணீர் வடியவும் ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆலங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ்ப் பணிபுரிபவர்களிடம் கலந்துரையாடி அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்த இடங்களில் விவசாயப் பெருமக்கள், பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். மேலும், கோரிக்கை மனுக்களை அளித்துத் தங்களது தேவைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகள் அனைவரும் சென்னை வந்தடைவதை உறுதிசெய்திட வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
காணொலிக் காட்சி வாயிலாக மீட்புப் பணிகளின் விவரங்கள் குறித்துக் கேட்டறிந்தார் - 03.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தலைமைச் செயலகத்தில் 03.06.2023 அன்று மாலை ஒடிசா சென்ற தமிழ்நாட்டுக் குழுவினருடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார். அப்போது, ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்டுள்ளோர் குறித்தும், மீட்புப் பணிகளின் நிலவரங்கள் குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

ஒடிசா இரயில் விபத்தில் காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளுக்குத் தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளைச் செய்திடவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்திடவும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் அவர்கள், போக்குவரத்துத் துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., மற்றும் ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், இ.ஆ.ப., ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டு உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் ஒடிசா அனுப்பி வைக்கப்பட்டனர்.

மாண்புமிகு அமைச்சர்கள், போக்குவரத்துத் துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் ஆகியோர் விபத்து நடந்த பாலசோர் என்ற இடத்தில் நடைபெற்று

வரும் மீட்புப் பணிகளைக் கண்காணித்து உதவி வருகின்றனர். மற்றொரு குழுவான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் ஆகியோர் ஒடிசாவில் இதற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில் இரயில் விபத்தில் உயிரிழந்த, காயமடைந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் விவரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

இந்நிலையில், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான குழுவினர், பாலசோர் அரசு மருத்துவமனைக்குச் சென்று, விபத்தினால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களைப் பார்த்து வந்ததாகவும், ஆனால் அந்த மருத்துவமனையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த எவரும் இதுவரை சிகிச்சைக்காக அனுமதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

மேலும், ஒடிசா தலைநகர் கட்டாக்கில் உள்ள எஸ்.வி.பி. மருத்துவமனையில், விபத்தில் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை அவர்கள் சேகரித்து வருவதாகவும், தற்போது வரை அந்த மருத்துவமனையில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை எனத் தெரிய வந்துள்ளதாகவும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

பாலசோர் நகரத்தில் உள்ள 4 இடங்களில், விபத்தில் இறந்த 237 நபர்களின் உடல்கள் வைக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், தற்போதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள சுமார் 70 சடலங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை என்று அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாகவும், மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர்அவர்களிடம், குழுவினர் தெரிவித்தனர்.

தென்னக இரயில்வேயின் பயணிகளின் முன்பதிவுப் பட்டியல்படி, விபத்தில் சிக்கிய இரயில்களில் பயணம் செய்தவர்களின் விவரங்கள், அவர்களது உறவினர்களிடம் சரிபார்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர்கள் தலைமையில் ஒடிசா சென்றுள்ள குழுவினர், மேலும் சில தினங்கள் அங்கு தங்கியிருந்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகள் அனைவரும் பாதுகாப்பாகச் சென்னை வந்தடைவதை உறுதி செய்திட வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

இக்கூட்டத்தில், சென்னையில் உள்ள மாநில அவசர காலச் செயல்பாட்டு மையத்தில், இதுவரை பெறப்பட்ட விவரங்கள் குறித்தும், அதன் செயல்பாடு குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு உயர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும், ஒடிசா இரயில் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வகையில், சென்னையில் உள்ள மூன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் தயார் நிலையில் உள்ளதாகவும் அரசு அலுவலர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தனர்.

03.06.2023 அன்று மாலை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஆகியோர், மாண்புமிகு ஒடிசா மாநில முதலமைச்சர் திரு.நவீன் பட்நாயக் அவர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளின் பாதுகாப்பு, மீட்புப் பணிகள், மருத்துவ உதவிகள் குறித்துக் கலந்துரையாடினர். ●

ரூ.125 கோடிச் செலவில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்து ஆற்றிய உரை - 06.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 06.06.2023 அன்று, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் சென்னை, தேனாம்பேட்டை, விஜயராகவா சாலையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் நடைபெற்ற விழாவில் முதற்கட்டமாகத் தலா ரூ.25 இலட்சம் செலவில் மொத்தம் ரூ.125 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்களைக் கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினைச் செயல்படுத்தும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம்" சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளைத் தடுக்கும் வகையில் "இன்னுயிர் காப்போம்-நம்மைக் காக்கும்-48" போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாகத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி, 07.05.2022 அன்று, சட்டப்பேரவை 110 விதியின்கீழ், தமிழ்நாடு மக்களின் சுகாதாரத் தேவைகளை மென்மேலும் மேம்படுத்திடும் விதத்தில் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணைச் சுகாதார நிலையங்கள் இருப்பதைப் போல நகர்ப்புறங்களில் மக்கள் அரசுப் பொது மருத்துவமனையை நோக்கி வரும்போது மருத்துவமனைகளில் கூட்டம் அதிகமாகி வருகிறது. இந்நிலையை மாற்றி, ஒருங்கிணைந்த, தரமான மருத்துவச் சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் நோக்கில், பெருநகரச் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள், 63 நகராட்சிப் பகுதிகளில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதியதாக அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி முதற்கட்டமாக, பெருநகரச் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள், நகராட்சிப் பகுதிகளில் ரூ.125 கோடிச் செலவில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தலா ரூ.25 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஒவ்வொரு நகர்ப்புற நலவாழ்வு மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு தூய்மைப் பணியாளர் என 500 மருத்துவர்கள், 500 செவிலியர்கள், 500 சுகாதார ஆய்வாளர்கள், 500 தூய்மைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் இம்மையம் செயல்படும். இந்நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம் இப்பகுதியில் வாழும் சுமார் 25 ஆயிரம் மக்கள் பயன்பெறுவர்.

புதியதாக அமைக்கப்பட்டுள்ள இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம், மகப்பேறு நலச் சேவைகள், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை நலச் சேவைகள், வளர் இளம் பருவத்தினருக்கான சேவைகள், குடும்பக் கட்டுப்பாடு சேவைகள், தொற்று நோய்களுக்கான சேவைகள், தொற்றா நோய்களுக்கான சேவைகள், கண், காது, மூக்கு, பல், வாய், தொண்டை நோய்களுக்கான சேவைகள், முதியோர், நோய் ஆதரவு நலச் சேவைகள், அவசர மருத்துவ சிகிச்சை சேவைகள், மனநலச் சேவைகள் மற்றும் யோகா போன்ற பல்வேறு நலவாழ்வு சேவைகள் நகர்ப்புற மக்கள் குறிப்பாக, குடிசைவாழ், நலிந்த மக்களுக்கு தரமான முறையில் மருத்துவ வசதி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களின் துணை மையங்களாகச் செயல்பட்டு அனைத்து அத்தியாவசியமான ஆரம்பச் சுகாதாரச் சேவைகளை மக்கள் எவ்வித பொருட்செலவின்றி அவர்களின் வசிப்பிடத்திற்கு அருகாமையிலேயே பெறுவதோடு அல்லாமல் அரசு மருத்துவமனை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார தேவைகளுக்காக மக்கள் தேவையின்றி அணுகும் சூழ்நிலையையும் குறைக்கிறது.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

வரவேற்புரை என்கிற பெயரில் இந்த துறையினுடைய அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு சிறப்புரையை ஆற்றியிருக்கிறார். அவர் பேசியதற்குப் பிறகு வேறு எதுவும் பேசுவதற்கு இல்லை. அவ்வளவு தெளிவாக, அழுத்தம் திருத்தமாக இந்த அரசின் சார்பில், குறிப்பாக மருத்துவத் துறையின் சார்பில் ஆற்றிக் கொண்டிருக்கக்கூடிய, ஆற்றயிருக்கின்ற பல்வேறு பணிகளை, சாதனைகளை எல்லாம் இங்கே உங்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்.

நம்முடைய ஆட்சியைப் பொறுத்தவரை, குறிப்பாகத் திராவிட மாடல் ஆட்சியைப் பொறுத்தவரைக்கும், கல்வி - மருத்துவம் ஆகிய இரண்டையும் திராவிட மாடல் அரசு இரண்டு கண்களாக நினைத்துப் போற்றி வருகிறோம் - செயல்படுத்தி வருகிறோம்.

கல்வியில் சிறந்த தமிழ்நாடாகவும் மக்கள் நலம் பேணுவதில் மிகச் சிறந்த தமிழ்நாடாகவும் நம்முடைய மாநிலம் இன்றைக்குத் தலைநிமிர்ந்து நிற்கிறது. ஆனால் இப்படி தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய நம்முடைய மாநிலத்தின் வளர்ச்சி, மாநிலத்திலே மிகப் பெரிய பொறுப்பில் இருக்கக்கூடிய ஒருவருக்கு மட்டும் அது புலப்படவில்லை. அவர் திராவிட மாடல் ஆட்சியை ஏற்றுக்கொள்ளாத நிலையில் அந்த கருத்துக்களை எல்லாம் விமர்சனங்களாக்கி தொடர்ந்து தினந்தோறும் ஏதாவது ஒரு செய்தியை மக்களைக் குழப்பக்கூடிய வகையிலே அவர் செய்து கொண்டிருக்கிறார். அதைப் பற்றியெல்லாம் மக்கள் கொஞ்சம்கூட கவலைப்பட மாட்டார்கள். அதையெல்லாம் மக்கள் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை அவர் தொடர்ந்து அப்படிச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் நமக்கு ஒரு எழுச்சி ஏற்படும். மக்களும் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்.

நம்மை ஆளாக்கிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டு விழா ஜுன் 3ஆம் தேதியிலிருந்து நாம் கொண்டாடத் தொடங்கியிருக்கிறோம். இந்த ஆண்டு முழுவதும்

கொண்டாடுவதற்காகத் திட்டமிட்டு, நம்முடைய அரசின் சார்பிலே ஏனென்றால் இந்த அரசே அவருடைய அரசு, ஐந்து முறை தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலிருந்து தமிழ்நாட்டு மக்களுக்கு எண்ணற்றத் திட்டங்களைச் செய்து காட்டியிருக்கக்கூடியவர். அதிலும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்காக,

- கண்ணொளி காப்போம் திட்டம்,
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்,
- வருமுன் காப்போம் திட்டம்,
- கலைஞர் காப்பீட்டுத் திட்டம்,
- 108 இலவச ஆம்புலன்ஸ் திட்டம் - போன்ற எண்ணற்ற சுகாதாரத் திட்டங்கள் நம்முடைய நாட்டில் முன்னோடித் திட்டங்களாகக் கொண்டு வரப்பட்டு, இன்றளவும் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் பாதையில்தான் நமது அரசின் நல்வாழ்வுத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இதுநாள் வரையில் தொழில்துறை நிகழ்ச்சிகளில்தான் அதிகம் கலந்து கொண்டிருக்கிறேன். அதற்கு அடுத்தபடியாக நான் அதிகமாகக் கலந்துகொண்டது மக்கள் நல்வாழ்வுத் துறை நிகழ்ச்சிகள்தான். அந்த அளவிற்கு இன்றைக்கு இத்துறையில் பல முன்னேற்றங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எத்தகைய சூழலில் நாம் பொறுப்பேற்றோம் என்பது, உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கொரோனா என்ற கொடிய தொற்று நோய், அந்த அலை தீவிரமாக இருந்த காலத்தில், ஆட்சிக்கு வந்தோம். ஆட்சிக்கு வந்தபிறகு அதனைக் கட்டுப்படுத்தினோம். அன்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியம் அவர்கள் எந்த அளவிற்குப் பணியாற்றினார். அவர் மாரத்தான் வீரர் மட்டுமல்ல பணியாற்றுவதிலும் ஒரு மாரத்தான் வீரராக இருந்து பணியாற்றினார் என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும்.

நான் பலமுறை சொன்னது உண்டு. ஆட்சிக்கு வந்தபிறகு நான் முதலமைச்சர் மற்றவர்கள் எல்லாம் துறையின் அமைச்சர்களாகப் பொறுப்பேற்று இருந்தாலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் அமைச்சராக இருந்தவர் திரு. மா.சு. அவர்கள்தான். ஆனால்

திரு. மா.சு. அவர்கள் மட்டுமல்ல, முதலமைச்சர் உட்பட எல்லா அமைச்சர்களும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக மாறினோம். அதனால்தான் கொரோனாவை கட்டுப்படுத்தும் முயற்சியிலே ஒரு பெரிய வெற்றியைப் பெற்றோம். அதற்கு நம்முடைய அதிகாரிகள் எந்த அளவிற்கு எல்லாம் துணை நின்றார்கள் இன்றைக்கும் நான் எண்ணிப் பார்க்கின்றபோது மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்திய அளவில் பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் முதல் மூன்று மாநிலங்களின் வரிசையில் தமிழ்நாடு உள்ளது. இதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும். எவர் என்று உங்களுக்குத் தெரியும். பொதுவாக ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கான குறியீடுகளில் ஒன்றாக மக்கள் நல்வாழ்வு விளங்கி வருவதுடன் தனிநபருக்கான சிகிச்சை செலவுகள் குறைவாக இருப்பதும் நம் மாநிலத்தின் மருத்துவத் துறையின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

அந்த அடிப்படையில்தான் 05.08.2021 அன்று, "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற மகத்தான திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். தொடர்ந்து மாநிலம் முழுவதும் விரிவாக்கப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் இதுவரை 1.51 கோடி பயனாளிகளுக்கு முதன்முறை சேவைகளும், 3.04 கோடி நபர்களுக்குத் தொடர் சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டிற்கே முன்னோடியான இந்தத் திட்டத்தைப் புகழ்ந்து உலகச் சுகாதார அமைப்பே தனது வலைத்தளத்தில் ஒரு பாராட்டுக் கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அதாவது பயனாளிகளுக்கு அவர்கள் வீட்டைவிட்டே வெளியே வரத் தேவையில்லாமல், மருத்துவப் பணியாளர்கள் பரிசோதனை மேற்கொள்வது, நோய் கண்டறிவது, சிகிச்சை தருவது, மருந்துகளைத் தருவது பற்றி எழுதப்பட்டுள்ளது. அதை தயவுசெய்து குறை சொல்கின்ற அவர் படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் பெண் மருத்துவப் பணியாளர்கள் எப்படி இந்தத் திட்டத்தின் முதுகெலும்பாகச் செயல்படுகிறார்கள் என்பது பற்றியும் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். உலக அமைப்பே பாராட்டும் வகையில் நாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்.

தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை அனைவரும் போற்றுகிறார்கள். நான் அண்மையில் ஜப்பான், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காகச் சென்றேன். அதைக்கூட இங்கே இருக்கக்கூடிய எதிர்கட்சித் தலைவர் எப்படி விமர்சித்தார் என்பது உங்களுக்குத் தெரியும். முதலீட்டை ஈர்க்கப் போகவில்லை, முதலீடு செய்யப் போயிருக்கிறார் என்று சொல்கிறார் இது அவர் புத்தி. எனவே, அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை.

'இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் – 48' திட்டத்தின்கீழ்ச் சாலை விபத்துக்குள்ளானவர்கள் எந்த மாநிலத்தவர்களாக இருந்தாலும், தமிழ்நாடு மட்டுமல்ல எந்த மாநிலத்தவராக இருந்தாலும் 48 மணி நேரத்திற்குள் அவசர அறுவை சிகிச்சை இலவசமாகச் செய்யப்படும் ஒரு மாநிலம் இருக்கிறது என்றால் அது தமிழ்நாடு மட்டும்தான். 18.12.2021 முதல் 31.05.2023 வரை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 1.65 இலட்சம் பேர் இந்தத் திட்டத்தின்கீழ் ரூ.145.27 கோடிச் செலவில் சிகிச்சை பெற்று இன்னுயிர் மீட்கப்பட்டுள்ளனர்.

இங்கே நம்முடைய துறையினுடைய அமைச்சர் திரு. மா.சு. அவர்கள் சொன்னதைப் போல, சென்னையிலே, கிண்டி பகுதியிலே, கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி, கலைஞர் நூற்றாண்டு நினைவுப் பன்னோக்கு மருத்துவமனை மிகப் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. வருகிற 15ஆம் தேதி அதனுடைய திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெறவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையானது மாரத்தான் ஓட்டம் போல மிகப் பெரிய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது.

கொரோனா அலையையும் எதிர்கொண்டு, மக்களைக் காத்து, மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பையும் வளர்த்தெடுத்தோம். இதற்குக் காரணமான அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அத்தோடு அவருக்குத் துணை நிற்கக்கூடிய அனைத்து அதிகாரிகளையும் பணியாளர்களையும் இந்த நேரத்தில் நான் பாராட்டுகிறேன்.

இந்த வரிசையில்தான் இன்னொரு மகத்தான திட்டமாக நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. இது தொடர்பான முறையான அறிவிப்பை, "கிராமப்புறங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் அமைந்திருப்பதைப்போல நகர்ப்புறங்களில் நகர்ப்புற நலவாழ்வு மையங்களை அமைக்க இருக்கிறோம்" எனச் சட்டமன்றத்தில் நான் 110 விதியின்கீழ் அறிவித்தேன்.

708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை, ரூ.177 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சி, நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைத்திட உத்தரவிட்டேன்.

கடந்த 01.04.2022 அன்று, மாண்புமிகு டெல்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் அழைப்பிற்கிணங்க அங்கு நகர்ப்புறங்களில் இயங்கி வரும் 'மொகல்லா கிளினிக்' எனப்படும் நகர்ப்புற நலவாழ்வு மையத்தை நான் பார்வையிட்டேன். நம்முடைய துறையினுடைய அமைச்சரும், அதிகாரிகளும் வந்தார்கள்.

அப்போது, ஏற்கெனவே தமிழ்நாட்டில் கிராமப்புறச் சுகாதார நிலையங்களின் கட்டமைப்பை வலுப்படுத்தியுள்ள நாம், அதனை நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கம் செய்ய வேண்டும் என நினைத்தோம். அந்த அடிப்படையில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்த 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் உட்கட்டமைப்பு ஏற்படுத்துவதற்கான அனுமதி 2021-2022ஆம் ஆண்டு 593 மையங்களுக்கும் 2022-2023ஆம் ஆண்டு 115 மையங்களுக்கும் அளிக்கப்பட்டது. இவற்றுக்கான கட்டடப்பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இதில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் இன்றைய நாள் திறக்கப்பட்டு இருக்கின்றன. இதன் மொத்த மதிப்பு ரூ.125 கோடி. இந்த மையங்களைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்களிலும் ரூ.66 கோடி மதிப்பீட்டில் 172 வகை முக்கியமான மருந்துகளும், 64 வகை அவசியமான ஆய்வகச் சேவைகளும் ஆண்டு முழுவதும் தங்குதடையின்றிக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. "அனைவருக்கும் நலவாழ்வுத் திட்டம்" என்பது இந்தியாவுக்கே முன்னோடியான திட்டமாக அமையப் போகிறது என்பதில் சந்தேகமில்லை.

புதியதாக அமைக்கப்பட்டுள்ள இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம், நகர்ப்புற மக்களுக்கு, குறிப்பாக - குடிசை வாழ் மற்றும் நலிந்த மக்களுக்கும் தரமான முறையில் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையங்களின் துணை மையங்களாகச் செயல்படும்.

அனைத்து ஆரம்பச் சுகாதார சேவைகளையும் மக்கள் எந்தவித பொருட்செலவின்றி அவர்களின் வசிப்பிடத்திற்குப் பக்கத்திலேயே எளிதில் தடையின்றிப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சுவர் இருந்தால்தான் சித்திரம் என்பதைப் போல மக்களது உடல்நலத்தில்தான் அனைத்தும் அடங்கி இருக்கிறது. அந்த உடல்நலத்தைப் பேணிக் காப்பதில் தமிழ்நாடு அரசு உறுதியாக இருக்கிறது. அதனால் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை ஏராளமாக அமல்படுத்துகிறோம். நல்வாழ்வுத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் தருகிறோம்.

மருத்துவம் நவீனமயமாக வேண்டும். புதிய நோய்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் கொண்டவர்களாக நமது மருத்துவர்கள் செயல்பட வேண்டும். மருத்துவ ஆராய்ச்சிகள் நிறைய நடக்க வேண்டும். மருத்துவர்கள் மட்டுமல்ல, மருத்துவ வல்லுநர்களையும் உருவாக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் எப்படி ஏழை, எளியோரின் நம்பிக்கையாக இருக்கிறதோ, அதைப் போலவே நகர்ப்புற நலவாழ்வு மையங்களும் செயல்பட வேண்டும்.

இன்று 500 மையங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. இது ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகிக் கொண்டே வரும் என்பதில் ஐயமில்லை. வாழ்விடத்துக்கு அருகிலேயே பள்ளிகள் இருப்பதைப்போல, அருகிலேயே மருத்துவமனைகள், நிரந்தர மருத்துவ மையங்கள் என்ற சூழலை நிச்சயமாக விரைவில் உருவாக்குவோம். அதை மக்களும் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்கள் அத்தனை பேரையும் கேட்டு, இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கக்கூடிய அமைச்சர் அவர்களுக்கும், துறையினுடைய அதிகாரிகளுக்கும் மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மரக்கன்று நட்டு வைத்துத் தொடங்கி வைத்தார் - 07.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 07.06.2023 அன்று, சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை, மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

"மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்" என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சொல்லிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டுத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் 5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும் என்றும், இதனால் மாநில நெடுஞ்சாலைகளில் இடைவெளி இல்லாமல் மரங்கள் வளர்க்கப்படும் என்ற இலக்கு எட்டப்படும் என்றும் 2023-2024ஆம் ஆண்டு நெடுஞ்சாலைகள், சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்க நாளான 07.06.2023 அன்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை மரக்கன்று நட்டு வைத்துத் தொடங்கி வைத்தார்.

07.06.2023 அன்று, தமிழகமெங்கும் நெடுஞ்சாலைத் துறையின் 340 சாலைகளில் நடப்படவுள்ள மகிழம், வேம்பு, புளியன், புங்கன், நாவல், சரக்கொன்றை போன்ற வகையைச் சார்ந்த சுமார் 46,410 மரக்கன்றுகள், 24 மாத காலம் வளர்ச்சி கொண்டவையாகும். மேலும், பருவமழைக்கு முன்பாகவே 5 இலட்சம் மரக்கன்றுகளையும் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரூ.762.30 கோடிச் செலவில் 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 4.0 தொழில்நுட்ப மையங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்து ஆற்றிய உரை - 08.06.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 08.06.2023 அன்று, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் ஒரகடத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.762.30 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களைத் திறந்து வைத்து மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின்கீழ், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித் தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின்கீழ் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் ஐந்து மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Cards) வழங்கி, அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குத் தமிழ் வழி பாடப்புத்தகங்களை வழங்கினார்.

தமிழ்நாட்டில் பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கும், இளைஞர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான திறன்மிக்க மனிதவளத்தைத் தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (ITIs) முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 330 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஃபிட்டர், டர்னர், மெசினிஸ்ட், எலக்ட்ரிசியன், வெல்டர், ஏசி மெக்கானிக் போன்ற

78 தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் 2021-2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், ஐ.டி.ஐ. முடித்துச் செல்லும் பயிற்சியாளர்கள், தொழில் நிறுவனங்களில் உடனடி வேலைவாய்ப்புப் பெறும் வகையில், பயிற்சியின் தரம் உயர்த்திட, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களையும், மாறிவரும் தொழிற்சாலைகளின் தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு மாற்றிட முன்னணி தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப எதிர்கால வேலைவாய்ப்புகளைத் தமிழ்நாட்டின் இளைஞர்கள் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கில், தமிழ்நாடு அரசு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை ரூ.2,877.43 கோடிச் செலவில் தொழில் 4.0 தரத்திலான திறன் பயிற்சிகளை வழங்கும் வகையில், தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இது தமிழ்நாட்டின் தொழிற்பயிற்சி நிலையங்களின் வளர்ச்சியில் ஒரு சிறப்புமிக்க நிகழ்வாகும்.

இந்த மையங்களில், டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0 தரத்திலான புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள், மென்பொருட்கள் நிறுவப்பட்டு, ரோபோட்டிக்ஸ், இண்டஸ்ட்டிரியல் ஆட்டோமேஷன், மேனுஃபேக்சரிங் பிராசஸ் கண்ட்ரோல், அட்வான்ஸ்டு மேனுஃபேக்சரிங், மெக்கானிக் மின்சார வாகனங்கள், இண்டர்நெட் ஆஃப் திங்க்ஸ், அடிட்டிவ் மேனுஃபேக்சரிங், இண்டஸ்ட்டிரியல் பெயிண்டிங், அட்வான்ஸ்டு பிளம்பிங், அட்வான்ஸ்டு ஆட்டோமொபைல் டெக்னாலஜி போன்ற நவீனத் திறன் பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளன. டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்தின் தலைமையிலான 20 சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் 87.5 : 12.5 என்ற விகிதத்தில் டாடா டெக்னாலஜிஸ் நிறுவனமும், தமிழ்நாடு அரசும் முதலீடு செய்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும்.

அதன்படி, 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 30.06.2023க்கு முன்னதாகத் தொழில்நுட்ப மையங்கள் உருவாக்கப்பட வேண்டும் என தமிழ்நாடு அரசு, டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் 14.06.2022 அன்று

புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதில், முதற்கட்டப் பணிகள் முடிக்கப்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம் – ஒரகடம், செங்கல்பட்டு மாவட்டம் – செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மாவட்டம் – இராணிப்பேட்டை, அரக்கோணம், விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம், கடலூர் மாவட்டம் – கடலூர், சிதம்பரம், ஈரோடு மாவட்டம் – ஈரோடு, திருப்பூர் மாவட்டம் – தாராபுரம், நாமக்கல் மாவட்டம் - நாமக்கல், சேலம் மாவட்டம் – சேலம், மதுரை மாவட்டம் – மதுரை, தேனி மாவட்டம் – தேனி, போடி, திண்டுக்கல் மாவட்டம் – திண்டுக்கல், தூத்துக்குடி மாவட்டம் – தூத்துக்குடி, திருச்சி மாவட்டம் – திருச்சி, மணிகண்டம், விருதுநகர் மாவட்டம் – சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் – திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.762.30 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இதன்மூலம், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒவ்வொரு வருடமும் 5,140 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு பயனடைவர். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த வழக்கொழிந்த பழைய தொழிற்பிரிவுகள் நீக்கப்பட்டுப் புதிய தொழிற்பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படுவதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் 10,040 மாணவர்கள் இந்த 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெறுவர். இதுதவிர, பட்டயம், பட்டப்படிப்புப் படித்தோரும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளில் பணிபுரிவோரும் இங்கு வழங்கப்படக்கூடிய குறுகிய காலப் பயிற்சிகளில் சேர்ந்து தற்போதைய தொழில் துறைக்குத் தேவையான அதிநவீன தொழில்நுட்பங்களைக் கற்றுப் பயனடையலாம்.

மேலும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் பயன்படுத்தும் பாடப் புத்தகங்கள் இதுவரை ஆங்கில மொழியில் இருந்து வந்தது. 2022-2023ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையில், திறன் பயிற்சிகளை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில்அனைத்துப்பயிற்சியாளர்களுக்கும் ரூ.6.80 கோடிச் செலவில் தமிழில் பாடப் புத்தகங்கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பிற்கிணங்க, தமிழில் பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்!

டாடா குழுமத்தின் தலைவர் மரியாதைக்குரிய திரு. என்.சந்திரசேகரன் அவர்கள் இங்கே வருகை தந்திருப்பதில் நமக்கெல்லாம் பெரிய மகிழ்ச்சி!

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு தமிழர், உலகின் தலைசிறந்த டாடா குழுமத்தின் தலைமைப் பொறுப்பில் அமர்ந்திருப்பதும் - நாமக்கல் மாவட்டம் மோகனூரில் பிறந்து - அரசுப் பள்ளிக்கூடத்தில் படித்து இந்தளவு முன்னேறி இருக்கிறார் என்பதும், தமிழ்நாட்டிற்கும் நமக்கும் மிகப்பெரிய பெருமையாக அமைந்திருக்கிறது. அறிவாற்றலும் - திறமையும் இருந்தால் எத்தகைய உயரத்தையும் அடையலாம் என்பதற்கு இந்த மேடையில் அமர்ந்திருக்கும் திரு. என்.சந்திரசேகரன் அவர்களே சாட்சியாக இங்கே நமக்குக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

தொழில் - வர்த்தகம் - நிறுவனம் ஆகியவற்றோடு தன்னுடைய ஆர்வத்தை நிறுத்திக் கொள்ளாமல் இசை, புகைப்படம் எடுத்தல் ஆகிய தனித்திறமைகளிலும் சிறந்தவராக அவர் இருக்கிறார். அனைத்தையும் விட, நியூயார்க் நகரத்தில் மாரத்தானில் கலந்து கொண்டு சாதனையும் படைத்தவர் அவர்.

வேகம் - விவேகம் - துடிதுடிப்பு ஆகிய தனது குணத்தை, தான் பங்கெடுக்கும் அனைத்துத் துறைகளிலும் முன்னேறிக் காட்டிய மரியாதைக்குரிய திரு.என்.சந்திரசேகரன் அவர்களை இந்த நிகழ்ச்சியின் மூலமாக உங்கள் அனைவரின் சார்பில் நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

தமிழ்நாட்டு இளைஞர்கள், மரியாதைக்குரிய திரு. என். சந்திரசேகரன் அவர்களை எடுத்துக்காட்டாக எடுத்துக்கொண்டு முன்னேற்றம் காண வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களையெல்லாம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

யார் ஒப்புக் கொண்டாலும் - ஒப்புக்கொள்ளாவிட்டாலும், யார் மறைத்தாலும் தமிழ்நாடு என்பது அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக - தலை நிமிர்ந்து, ஏன் கம்பீரமாக இன்றைக்கு நின்று கொண்டு இருக்கிறது.

அனைத்துத் தொழில்களிலும் சிறந்த மாநிலமாக விளங்கும் நம்முடைய தமிழ்நாடு, தொழிற்சாலைகள் நிறைந்த பல்வகை பொருளாதாரத்துடன் கூடிய மாநிலம்!

✶ ஆட்டோமொபைல், மின்னணு சாதனங்கள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள், நிதிச் சேவைகள், அது தொடர்பான நிறுவனம் (Fintech), மின்னணு வாகனங்கள், தோல் சார்ந்த காலணி மற்றும் தோல்சாரா உற்பத்தித் தொழில்கள், வங்கி, நிதி, காப்பீடு மற்றும் சேவை நிறுவனங்கள், வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி, பொறியியல், டெக்ஸ்டைல்ஸ், ஆடைகள் உற்பத்தி, பிளாஸ்டிக் மற்றும் இரசாயன உற்பத்தி ஆகிய துறைகளிலும் தமிழ்நாடு இப்போது முன்னணியில் உள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட தொழிற்துறை ஆண்டறிக்கையின்படி நம்முடைய இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிக அளவில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. பணிபுரியும் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். வளர்ந்து வரும் புதியத் துறைகளிலும் தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது.

✶ விண்வெளி மற்றும் பாதுகாப்பு,

✶ வேளாண்மை மற்றும் உணவு பதப்படுத்துதல்,

✶ புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வழிமுறைகள்,

✶ மின்னணு வடிவமைப்பு,

✶ மருத்துவ மின்னணு சாதனங்கள், மின்சாரப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு அபரிவிதமான வளர்ச்சியை கண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளின் மூலமாக உலகளாவிய வர்த்தகத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாடு அரசின் Guidance Tamil Nadu அலுவலகத்தின் மூலமாக ஜனவரி 2022 முதல் மே 2023 வரை 110 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம், ரூ.2,03,279 கோடி முதலீடு பெறப்பட்டு 1,96,596 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த முதலீடுகள் தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றும் எனப் பெருமிதத்துடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

2021-2022ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பதிவு செய்துள்ள தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 4,79,613 ஆகவும்; உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை 3,66,393 ஆகவும் இருந்தது.

நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலமாக, 2022-2023ஆம் ஆண்டில் நிறுவனங்களின் எண்ணிக்கை 7,33,296 ஆகவும், உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை 47,14,148 ஆகவும் உயர்ந்துள்ளது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப் புதிய புதிய நிறுவனங்கள் உருவாக்கப்படுகின்றன என்றால், புதியதாக

தொழில்கள் தொடங்கப்படுகின்றன என்றால் என்ன பொருள்?

தமிழ்நாட்டில் அதற்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளும், சூழ்நிலையும் இருக்கிறது என்று பொருள்!

தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான மனித ஆற்றல், இளைய சக்தி தமிழ்நாட்டில் இருக்கிறது என்று பொருள்!

தமிழ்நாடு அமைதி மாநிலமாக இருக்கிறது என்று பொருள்!

அதனால்தான், முதலீட்டை ஈர்க்கும் மாநிலமாகத் தமிழ்நாடு அமைந்துள்ளது. இதனை மேலும் வலுப்படுத்தவே இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நாம் நடத்தி வருகிறோம்.

எனது கனவுத் திட்டங்களில் ஒன்று, நான் முதல்வன் திட்டம்!

மாநிலத்தின் முதன்மைத் திறன் மேம்பாட்டுத் திட்டமான - "நான் முதல்வன்" திட்டம் தொடங்கப்பட்டதன் வாயிலாக தொழிற்சாலைகளுக்குத் தேவையான வருங்காலப் பணியாளர் தேவை வளத்தை மேம்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. திறன்மிக்க மனிதவளம் தொழிற்சாலைகளுக்குத் தொடர்ந்து கிடைத்திடவும் தமிழ்நாட்டு இளைஞர்கள் உலக அளவில் சிறந்த வேலைவாய்ப்புகளைப் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்திலும் இந்த அரசு, தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாகப் பல்வேறு தொழிற்பிரிவுகளில் திறன் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

மாறிவரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப எதிர்கால வேலைவாய்ப்புகளைத் தமிழ்நாட்டு இளைஞர்கள் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், தமிழ்நாடு அரசு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை ரூ.2,877.43 கோடிச் செலவில் திறன் பயிற்சிகளை வழங்கும் வகையில், தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்த விரைந்து செயல்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டுத் தொழிற்பயிற்சி நிலையங்களின் வளர்ச்சியில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது.

இந்த மையங்களில் டாடா டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து தொழில் 4.0 தரத்திலான புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய நவீன திறன் பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளன.

71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இத்தகைய தொழில்நுட்ப மையங்கள் உருவாக்கப்பட வேண்டும் எனப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதில், முதற்கட்டமாக 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில்நுட்ப மையங்களைத் துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தகைய திட்டத்தினைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கும் டாடா குழுமத்தினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்மூலம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒவ்வொரு ஆண்டும் 5,140 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டு பயனடையப் போகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 10,040 மாணவர்கள் தொழில் 4.0 தரத்திலான தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெறுவார்கள். இதுபோன்ற நவீன தொழில்நுட்பப் பிரிவுகளில் பயிற்சி பெறுவோருக்கு உள்நாடு, வெளிநாடுகளில் முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெறும். இந்த சிறப்புமிக்க நிகழ்வு இந்த அரசின் ஒரு டிரில்லியன் பொருளாதாரத்தை நோக்கிய பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்!

அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் மட்டுமல்லாமல் இதர பட்டயம், பட்டப்படிப்புப் படித்தோரும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோரும் இங்கு வழங்கப்படக் கூடிய குறுகிய காலப் பயிற்சிகளில் சேர்ந்து தற்போதைய தொழில் துறைக்குத் தேவையான அதிநவீன தொழில்நுட்பங்களைக் கற்றுப் பயனடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரிய வாய்ப்பினைத் தமிழ்நாட்டு மாணவ, மாணவியர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தி, வளமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளுமாறு உளமாற வாழ்த்துகிறேன்.

எல்லார்க்கும் எல்லாம் என்பதை அடிப்படையாகக் கொண்டு திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

அனைத்துத்திறமைகளையும்கொண்டவர்களாக மாணவர்களை, இளைஞர்களை உருவாக்க வேண்டும். தமிழ்நாட்டு இளைய சக்தியை உலக நிறுவனங்கள் அனைத்தும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நோக்கத்துடன்தான் பல்வேறு திட்டங்களை நாங்கள் தீட்டி வருகிறோம்.

டாடா போன்ற நிறுவனங்கள் தொழில் உற்பத்தியை மட்டுமல்ல, மனித ஆற்றலை உற்பத்தி செய்து பெருக்கும் நிறுவனங்களாகச் செயல்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

'எல்லோருக்கும் ஒரே மாதிரியான திறமைகள் இருப்பது இல்லை - ஆனால் எல்லோருக்கும் திறமை வளர்ப்பதற்கான வாய்ப்பு ஒரே மாதிரிதான் இருக்கும்' என்று பெருமதிப்பிற்குரிய ரத்தன் டாடா அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

அனைவருக்கும் திறமை வளர்ப்பதற்கான ஒரே மாதிரியான வாய்ப்பைத் தமிழ்நாடு அரசு வழங்கும். எங்களது எண்ணத்திற்கு வலுசேர்த்து உதவ அனைத்து நிறுவனங்களும் முன்வர வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டு, இந்த நல்ல வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

படமும்/ செய்தியும்

ரூ.1,000 கோடி மதிப்பிலான 115 கிரவுண்ட் நிலம் சட்டப்போராட்டத்தின் மூலம் மீட்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை, 06.06.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு. ஜெ. ரவீந்திரன் அவர்கள் சந்தித்து, சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான, ரூ.1,000 கோடி மதிப்பிலான, 115 கிரவுண்ட் நிலம் சட்டப்போராட்டம் நடத்தி மீட்கப்பட்டதையொட்டி வாழ்த்துப் பெற்றார். உடன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை தலைமைச் செயலாளர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., நில வருவாய் ஆணையர் திரு. எஸ். நாகராஜன், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

ஜப்பான் நாட்டின் டோக்கியோவில் வர்த்தக அமைப்புடன் இணைந்து முதலீட்டாளர்கள் மாநாடு

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில்
கலந்து கொண்டு, ஜப்பானிய நிறுவனங்கள்
தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடுகள்
மேற்கொள்ள அழைப்பு விடுத்து
ஆற்றிய உரை – 29.05.2023

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார். 23.05.2023 அன்று சிங்கப்பூர் சென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு பின்னர் ஜப்பானில் அரசு முறைப் பயணம் மேற்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, 29.05.2023 அன்று டோக்கியோவில் நடைபெற்ற ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (Japan External Trade Organization - JETRO) இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, ஜப்பானிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் கேட்டு அழைப்பு விடுத்தார். இம்மாநாட்டில் சுமார் 200 ஜப்பானிய நிறுவனங்களின் மூத்த மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

எங்களுடைய ஜப்பான் பயணத்தில் இன்று தலைநகரான டோக்கியோவுக்கு வந்துள்ளோம். டோக்கியோவில் நிலநடுக்கம் ஏற்பட்ட செய்தியறிந்து, அதிர்ச்சியாகப் பலரும் என்னிடம் நிலைமை என்ன என்று கேட்டார்கள். "டோக்கியோவைப் பொறுத்தவரை இது சாதாரணச் செய்தி! இங்கே நிலநடுக்கம் – எரிமலை வெடிப்புகள் என்பவை அடிக்கடி நடப்பவை, அதற்கிடையேதான் துணிச்சலோடு மக்கள் வாழ்கிறார்கள், செயல்படுகிறார்கள், வெற்றியும் பெற்றுக் காட்டுகிறார்கள்" என்றேன்.

இயற்கை நெருக்கடியாக இருந்தாலும் – செயற்கை நெருக்கடிகளாக இருந்தாலும் அதனை வென்று காட்டுபவர்கள் ஜப்பானியர்கள்!

இரண்டு நாட்கள் சிங்கப்பூரிலும் – மூன்று நாட்களாக ஜப்பானிலும் இருக்கிறேன். இங்கு பார்க்கும் நிறுவனங்களின் அதிபர்கள் – தலைவர்கள் – பணியாளர்கள் – அலுவலர்கள் ஆகியோர் முகத்தில் நான் பார்க்கும் உற்சாகம் என்பது எனக்கு மிகப்பெரிய நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் உருவாக்கி இருக்கிறது.

ஜப்பான் நாட்டின் தலைநகராக – உலகின் மிகப்பெரிய பொருளாதார நகரங்களில் ஒன்றாக – உலகப் புகழ்பெற்ற 500 நிறுவனங்களில் 51 நிறுவனங்களின் தலைமையகங்கள் இயங்கும் நகராக டோக்கியோ விளங்குகிறது.

இரண்டாம் உலகப் போரில் தாக்குதலுக்கு உள்ளானாலும், உழைப்பும் செயல்திறனும் கொண்டு உயர்ந்து நிற்கும் டோக்கியோ நகருக்கு வந்திருப்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

- நாடு தழுவிய போக்குவரத்து,
- பெரும் கடைகள் மற்றும் உணவகங்கள்,
- உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்கள்,
- புத்துணர்ச்சி ஊட்டும் இயற்கை இடங்கள்,
- வரலாற்று நினைவுச் சின்னங்கள்,
- உயரமான வானளாவியக் கட்டடங்கள்,
- தனித்துவமான அருங்காட்சியகங்கள் – என அமைந்து ஒரு நகரம் எப்படி அமைய வேண்டும் என்பதை டோக்கியோ எடுத்துக் காட்டுகிறது.

நகரத்தின் அனைத்து எரிசக்தித் தேவைகளும், ஹைட்ரஜன், காற்றாலை மின்சாரம், சூரியஒளி எரிசக்தி போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தியால் பூர்த்தி செய்யப்படுவதைக் கண்டு நான் வியந்து போகிறேன். இது எனது கனவுகளின் அகலத்தைப் பெரிதாக்குகிறது. எங்கள் தமிழ்நாட்டை எப்படி உருவாக்க நினைக்கிறோமோ – அந்த கனவுப் பரப்பை நான் இங்கு பார்க்கும் காட்சிகள் அதிகப்படுத்தி இருக்கின்றன. இதனை எனது வாழ்நாளில் எப்போதும் மறக்க முடியாது.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம், நாங்கள் உலக முதலீட்டாளர்கள் மாநாடு ஒன்றை மிகப் பெரிய அளவில் தமிழ்நாட்டில் – சென்னையில் நடத்திட திட்டமிட்டு இருக்கிறோம்.

உங்களை அந்த மாநாட்டிற்கு வரவேற்றிடவும், முதலீடுகளைப் பெருமளவில் எங்கள் மாநிலத்திற்கு அளித்திடவும் உங்களைக் கேட்டுக் கொள்ளும் விதமாக, இன்று நான் உரையாற்றுகிறேன்.

இந்தியாவும் ஜப்பானும் ஆசியாவின் இரண்டு பெரிய மற்றும் பழம்பெரும் ஜனநாயக நாடுகள். குறிப்பாகச் சொல்லப்போனால், ஜப்பான் நாட்டின் அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவியை (Official Development Assistance – ODA) அதிகம் பெறும் நாடு இந்தியாதான்.

இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகள், சமீப காலங்களில் மிகப்பெரும் எழுச்சி கண்டுள்ளது. இந்திய சந்தைக்குள் நுழையும் ஜப்பானிய நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்தியாவுக்குள், தமிழ்நாடுதான் ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த முன்னணி மாநிலமாக விளங்குகிறது. தெற்காசியாவிலேயே, முதலீடுகளை ஈர்த்திட உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திட நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

நிசான், தோஷிபா, யமஹா, கோமாட்ஸு, ஹிட்டாச்சி போன்ற மிகப்பெரும் நிறுவனங்கள், தங்கள் உற்பத்தித் திட்டங்களைத் தமிழ்நாட்டில் அமைத்துள்ளது.

அது மட்டுமல்ல. ஜப்பான் – இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், எப்போதுமே, ஜப்பான் நாட்டின் உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்கு முயற்சிகள் தொடர்ச்சியாக எடுத்து வருகிறது. பொருளாதார, வர்த்தக, தொழில் அமைச்சகத்துடன் (METI) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம், JETRO நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம், ஜப்பான் வணிக மற்றும் தொழில் பேரவை (JCCI) ஆகிய நிறுவன ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு அல்லாமல், கனகாவா, ஹிரோஷிமா மாகாணங்களுடன் பொருளாதாரப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. ஜப்பான் நாட்டின் மிகப் பெரும் வங்கிகளான, பேங்க் ஆஃப் டோக்கியோ - மிட்சுபிஷி, மிசுஹோ வங்கி போன்ற வங்கிகளுடன் புரிந்துணர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பல மாகாணங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கியப் பங்கு ஆற்றிடும் விதமாக, 2030-2031ஆம் நிதியாண்டிற்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான ஒரு இலட்சிய இலக்கினை நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், பல்வேறு துறை சார்ந்த முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளை நடத்தி, இதுவரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு உள்ளன. 2 இலட்சத்து 95 ஆயிரத்து 339 கோடி ரூபாய் என்ற அளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே ரூ.5,596 கோடி முதலீடு மற்றும் 4,244 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 5 ஜப்பானிய நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.

ஜப்பானிய நிறுவனங்களுக்கு என்னுடைய சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன்...

- ❖ ஜப்பானிய நிறுவனங்கள் பெரும்பாலும் உற்பத்தி சார்ந்த துறைகளில் மட்டுமே முதலீடுகளை மேற்கொள்கின்றன. இந்நிலையை சற்றே விரிவுபடுத்தி, உட்கட்டமைப்பு மேம்பாடு திட்டங்களிலும் முதலீடு மேற்கொள்ள வருமாறு, இந்தத் தருணத்தில் உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன்.
- ❖ உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு செய்வது என்பது உங்களது உற்பத்தித் திட்டங்களை மேம்படுத்தவும் உதவிகரமாக அமையும்.
- ❖ புதிய தொழில் பூங்காக்களை நாங்கள் அமைத்து வருகிறோம். அதிலும் உங்களது மேலான முதலீடுகளை வரவேற்கிறோம்.
- ❖ உங்களது தொழிற்சாலைகளை - எங்கள் மாநிலத்தில் அமைக்கும்போது அது தொடர்பான தலைமை அலுவலகத்தையும் எங்கள் மாநிலத்திலேயே அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் இளைய சக்தியை வளமிக்கதாக நாங்கள் மாற்றிக் கொண்டிருக்கிறோம். 'நான் முதல்வன்' என்ற எனது கனவுத் திட்டத்தின் மூலமாக மாணவர்கள், இளைஞர்கள் அனைவரையும் பள்ளி, கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே பல்துறை வல்லுநர்களாக வளர்த்து வருகிறோம். பெண்களைத் தொழில்நுட்ப வல்லுநர்களாக உயர்த்தி வருகிறோம். எனவே, உங்களது நிறுவனங்களுக்கு மிகச்சிறந்த திறமைசாலிகள் அதிகம் இருக்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது.

தமிழ்நாடு அரசும், திறந்த மனதோடு அனைத்துத் தொழில் நிறுவனங்களையும் ஊக்குவிக்கும் அரசாக இருக்கிறது.

நிருவாக உதவி - மனித ஆற்றல் ஆகிய இரண்டும் இணைந்து கிடைக்கும் மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டை ஜப்பானிய நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை 2024 ஜனவரி 10, 11 ஆகிய நாட்களில் சென்னையில் நடத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்த மாபெரும் நிகழ்வுக்கு நீங்கள் அனைவரும் வர வேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி! வணக்கம்!

முதலீட்டாளர்கள் மாநாட்டைத் தொடர்ந்து, ஜப்பான் நாட்டின் முக்கிய நிறுவனங்களின் தலைவர்களுடனான மதிய உணவு சந்திப்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு உரையாடினார்.

இரண்டாண்டுகளில் 5 ஜப்பானிய நிறுவனங்களுடன் ரூ.5,596 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுடன் தமிழ்நாட்டிற்கு உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும், சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணமாக 23.05.2023 அன்று சிங்கப்பூர் சென்றார். தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 24.05.2023, 25.05.2023 ஆகிய தேதிகளில் சிங்கப்பூர் நாட்டின் தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அலுவலர்களையும், சிங்கப்பூர் நாட்டின் அமைச்சர்களையும் சந்தித்துப் பேசியதுடன், அங்கு நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்வதற்கும், சென்னையில் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்து ஆற்றிய உரை – 26.05.2023

அதனைத் தொடர்ந்து, 25.05.2023 அன்று காலை சிங்கப்பூரிலிருந்து புறப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இரவு ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரத்திற்கு வந்தடைந்தார்.

அதன் தொடர்ச்சியாக, 26.05.2023 அன்று, ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (Japan External Trade Organization – JETRO) இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டார். இம்மாநாட்டில் சுமார் 80 ஜப்பானிய நிறுவனங்களின் மூத்த மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விவரம்

தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்திற்கும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டைசல் சேஃப்டி சிஸ்டம்ஸ் (Daicel Safety Systems) நிறுவனத்திற்கும் இடையே, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூரில் உள்ள டைசல் நிறுவனத்தின் Airbag Inflator தயாரிப்புத் தொழிற்சாலையை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கானப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் டைசல் நிறுவனத்தின் வணிக இயக்கப் பிரிவுத் தலைவர் திரு. கென் பாண்டோ அவர்களும், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. வே.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்களும் கையொப்பமிட்டனர். டைசல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. சிஹிரோ அவோகி அவர்கள் உடனிருந்தார்.

முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

பரந்து விரிந்த இந்திய நாட்டின், தமிழ்நாடு என்ற தனிப்பெரும் மாநிலத்தின் முதலமைச்சராக, ஜப்பானின் ஒசாகா நகரத்துக்கு நான் வருகை தந்துள்ளேன். மிக அழகான - கம்பீரமான - கட்டடக் கலை மிளிரும் நகரம், ஒசாகா! அற்புதமான உணவுகள் கிடைக்கும் நகரம். நட்பைப் பேணக்கூடிய மக்கள் வாழும் நகரம். எனக்கு ஜப்பான் புதிதல்ல. உங்களுக்கு நானும் புதியவனல்ல.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்துக்காக ஜப்பான் நாட்டு நிதி உதவியைப் பெறுவதற்காக 2008ஆம் ஆண்டு நான் டோக்கியோ நகருக்கு வருகை தந்ததை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன். மெட்ரோ இரயில் திட்டமாக இருந்தாலும், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டமாக இருந்தாலும் தமிழ்நாட்டு மக்களுக்கு மிக மிக முக்கியமான திட்டங்கள்.

அப்போது ஜப்பானை நம்பி உதவிகள் கேட்டோம். ஜப்பான் நாடு எங்களைக் கைவிடவில்லை.

2010ஆம் ஆண்டு ஜப்பான் மற்றும் தமிழ்நாடு தொழில் துறை கூட்டுக் கூட்டம் சென்னையில் நடந்தது. அப்போது நான் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக இருந்தேன். ஜப்பான் நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் மாண்புமிகு மசாயூகி நாஷிமா அவர்கள் அப்போது சென்னைக்கு வருகை தந்து அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின் அலுவலகத்தை அப்போது அவர்கள் திறந்து வைத்தார்கள். இப்படி ஒரு அலுவலகத்தைச் சென்னையில் நீங்கள் திறக்க வேண்டும் என்று முதன்முதலாக கோரிக்கை வைத்தவர் அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். அதனை ஏற்று அந்த அலுவலகம் சென்னையில் திறந்து வைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 840 நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்கி நிறுவனங்களை நடத்தி வந்தன.

அதில், தமிழ்நாட்டில் மட்டும் 170 நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலையை நடத்தி வந்தன. அதற்கு ஒரு அலுவலகமாக அப்போது திறந்து வைக்கப்பட்டது. அதில் பேசும்போது, ஜப்பான் நாட்டைச் சேர்ந்த தனியார் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டேன். அப்போது பேசிய ஜப்பான் அமைச்சர் மாண்புமிகு மசாயூகி நாஷிமா அவர்கள், “சென்னை என்பது ஆசிய நாடுகளின் நுழைவாயிலாக அமைந்துள்ளது” என்று குறிப்பிட்டார்கள்.

அதே, ஆசிய நாடுகளின் நுழைவாயிலான சென்னையில் இருந்து நான் வருகை தந்துள்ளேன். ‘உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை 2024’ ஜனவரி 10, 11 ஆகிய தேதிகளில் சென்னையில் நடத்த தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. அந்த, உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024 நிகழ்வுக்கு, கூட்டாளர் நாடாக ஒத்துழைப்பு அளித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உலக முதலீட்டாளர் மாநாட்டுக்கு அழைப்பு விடுப்பதற்காக எங்கள் மாநிலத்தில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு நாங்கள் பயணம் மேற்கொண்டு வருகிறோம். அந்த வரிசையில், முதல் சுற்றுப்பயணமாகச் சிங்கப்பூர், ஜப்பானுக்கு வந்துள்ளேன். இந்தியாவும், ஜப்பானும் ஆசியாவின் இரண்டு பெரிய மற்றும் பழம்பெரும் ஜனநாயக நாடுகள். குறிப்பாகச் சொல்லப்போனால், ஜப்பான் நாட்டின் அதிகாரப்பூர்வ மேம்பாட்டு உதவியை (Official Development Assistance - ODA) அதிகம் பெறும் நாடு இந்தியாதான்.

இரு நாடுகளுக்கு இடையேயான, பொருளாதார உறவுகள், சமீப காலங்களில் மிகப் பெரும் எழுச்சி கண்டுள்ளது. இந்திய சந்தைக்குள் நுழையும் ஜப்பானிய நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தியாவுக்குள், தமிழ்நாடுதான் ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக முன்னணியில் விளங்குகிறது.

தெற்காசியாவிலேயே, முதலீடுகளை ஈர்த்திட உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்திட நாங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றோம். எண்ணற்ற ஜப்பான் நிறுவனங்கள், தமிழ்நாட்டைத்தேர்ந்தெடுத்து,தங்கள் திட்டங்களை இங்கு நிறுவியுள்ளனர்.

- நிசான்,
- தோஷிபா,
- யமஹா,
- கோமேட்ஸு,
- யோரோசு,
- யமஹா
- ஹிட்டாச்சி மற்றும்
- யூனிப்ரெஸ் – போன்ற மிகப் பெரும் நிறுவனங்கள், தங்கள் உற்பத்தித் திட்டங்களைத் தமிழ்நாட்டில் அமைத்துள்ளன. இது நீண்டு கொண்டே போகும் பட்டியல்.
- ஜப்பான் - இந்தியா முதலீடு மேம்பாட்டுக் கூட்டாண்மைத் திட்டத்தின் கீழ் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரியங்களில், 3 நகரியங்கள் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.
- தமிழ்நாட்டில், அதிக அளவில் ஜப்பானியர்கள் வசித்து வருகின்றனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.
- பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்துடன் (METI) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் - JETRO நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் - ஜப்பான் வணிக, தொழில் பேரவை (JCCI) ஆகிய நிறுவன ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- கனகாவா, ஹிரோஷி மாகாணங்களுடன் பொருளாதாரப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.
- ஜப்பானிய நாட்டின் மிகப் பெரும் வங்கிகளான, பேங்க் ஆஃப் டோக்கியோ, உள்ளிட்ட மூன்று வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மேலும், பல மாகாணங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைத்திடுவதில் முக்கியப் பங்காற்றிடும் விதமாக, 2030ஆம் நிதியாண்டிற்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற்றுவதற்கான ஒரு இலட்சிய இலக்கினை நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே இதுவரை ரூ.5,596 கோடி முதலீடு மற்றும் 4,244 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 5 ஜப்பானிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளது.

- டைசல் கார்ப்பரேஷன்,
- மிட்சுபிஷி,
- மதர்சன் ஆட்டோ சொல்யூஷன்ஸ்,
- ரெனோ-நிஸ்ஸான் விரிவாக்கத் திட்டம் மற்றும்
- மக்கினோ போன்ற பல நிறுவனங்கள் தங்கள் திட்டங்களை நிறுவுவதற்காக, சமீபத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளன.

இன்னும் பல நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குத் தேவையான பல்வேறு தொழிற் கொள்கைகளையும் நாங்கள் வெளியிட்டுள்ளோம்.

- நிதிநுட்பக்கொள்கை,
- ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை,
- உயிர் அறிவியல் கொள்கை,
- ஆராய்ச்சி & மேம்பாட்டுக் கொள்கை,
- விண்வெளி & பாதுகாப்புக் கொள்கை,
- காலணி மற்றும் தோல்பொருட்கள் கொள்கை மற்றும்
- தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான ஒரு சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம் என்று பல கொள்கைகளை வெளியிட்டு இருக்கிறோம்.
- ஒவ்வொரு திட்டத்திற்கும் தேவைப்படும் அனுமதிகளை விரைவாகப் பெற்றிடும் பொருட்டு, Single Window Portal 2.0, TNSWP App ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தி இருக்கிறோம்.

இதன் பொருட்டே, முதலீட்டாளர்கள் விரும்பும் மாநிலமாகத் தமிழ்நாடு சிறந்து விளங்கி வருகிறது. அதனால்தான் எங்களுடன் இணைந்திடுமாறு, உங்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். ஜப்பானிய நிறுவனங்கள் பெரும்பாலும் உற்பத்தி சார்ந்த துறைகளில் மட்டுமே முதலீடு மேற்கொள்ள விழைகின்றன.

இந்நிலையை சற்றே விரிவுபடுத்தி, மேம்பாட்டுத் திட்டங்களிலும் முதலீடு மேற்கொள்ள வருமாறு, இத்தருணத்தில் உங்களுக்கு நான் அழைப்பு விடுக்கிறேன். மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், புதிய தொழில் பூங்காக்களை அமைத்து வருகிறோம்.

மேலும்,

- மருத்துவ சாதனங்கள் பூங்கா,
- உணவுப் பூங்காக்கள்,
- மின் வாகனங்களுக்கான பூங்கா மற்றும் வருங்கால நகர் திறன் பூங்கா,
- மின்னணுவியல் உற்பத்தித் தொகுப்புகள்,
- ஒருங்கிணைந்த ஆடை மற்றும் ஜவுளிப் பூங்கா,
- தோல் காலணிகள், உப பொருட்களின் உற்பத்தித் தொகுப்புகள், நிதிநுட்ப நகரம் என்று பல்வேறு துறை சார்ந்த உட்கட்டமைப்புகளை நாங்கள் வலுப்படுத்தி வருகிறோம்.

இத்துறைகளில், உங்களின் மேலான முதலீடுகளை நாங்கள் வரவேற்கிறோம். உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக ஜப்பான் இன்று திகழ்ந்து வருகிறது.

இன்று உலக நாடுகள் தனித்து வளர்ந்துவிட முடியாது. பரஸ்பர நட்பின் மூலமாக நல்லுறவின் மூலமாகத்தான் வளர முடியும். இந்தியாவுடன் உள்ள அந்த நல்லுறவை, குறிப்பாகத் தமிழ்நாட்டு முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உயர்ந்த மனித வாழ்வியல் நெறியைக் கொண்ட நாடு ஜப்பான். அந்த அடிப்படையோடு தமிழ்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு நீங்கள் பங்களிக்க முதலீட்டாளர்களைச் சிவப்புக் கம்பளம் விரித்துத் தமிழ்நாடும், வரவேற்கிறது என்று சொல்லி விடை பெறுகிறேன். நன்றி! வணக்கம்!

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஜப்பான் நாட்டின் பல்வேறு நிறுவனங்களின் முதன்மை அலுவலர்களுடனான மதிய உணவுடன் கூடிய சந்திப்பு நிகழ்வில், ஒசாகா மாகாணத்தின் துணை ஆளுநர் திரு. நோபுஹிகோ யமாகுஜி அவர்களை (Osaka Province Vice Governor Mr. Nobuhiko Yamaguchi) மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார்.

கடந்த இரண்டாண்டுகளில் சிங்கப்பூர் நிறுவனங்களுடன் ரூ.4,800 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

சிங்கப்பூரில் நடைபெற்ற
முதலீட்டாளர்கள் மாநாட்டில்
ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
முன்னிலையில்
மேற்கொள்ளப்பட்டு
ஆற்றிய உரை - 24.05.2023

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை வடிவமைப்பதில் முக்கியப் பங்காற்றிடும் விதமாக, 2030-2031ஆம் நிதியாண்டிற்குள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மேம்படச் செய்வதை ஒரு இலட்சிய இலக்காகக் கொண்டு தமிழ்நாடு அரசு செயலாற்றி வருகிறது.

தமிழ்நாட்டிற்குப் புதிய முதலீடுகளை ஈர்த்திடவும், புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு வரவும், வரும் ஜனவரி 2024இல் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கவும் அரசு முறைப் பயணமாக, சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 23.05.2023 அன்று பயணம் மேற்கொண்டார்.

சிங்கப்பூரில் 24.05.2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், Temasek, Sembcorp, CapitaLand ஆகிய நிறுவனங்களின் தலைமைச் செயல் அலுவலர்கள், சிங்கப்பூர் நாட்டின் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு. எஸ்.ஈஸ்வரன் அவர்களையும் சந்தித்துப் பேசினார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

உலகின் மிக அழகான மிகச் சிறந்த நாடுகளில் ஒன்றான சிங்கப்பூருக்கு வந்து உங்களையெல்லாம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அழகிலும், அமைதியிலும் தலைசிறந்த நாடு, சிங்கப்பூர்! எதிலும் ஒரு ஒழுங்கு; நேர்த்தி; சுத்தம்! அதுதான் சிங்கப்பூர். நகர நிருவாகத்தில் அதிகபட்ச தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி திறமையாகப் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு மற்ற உலக நாடுகளுக்கு, சிங்கப்பூர் ஒரு தர அளவுகோலாகத் திகழ்கிறது.

இத்தகைய சிறப்புகள் பெற்ற சிங்கப்பூரின் கட்டமைப்பில் பல்வேறு வகைகளில் அங்கம் வகிக்கும் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிங்கப்பூரை நாங்கள் வெளிநாடாக நினைப்பது இல்லை. ஏனென்றால் எங்களது தாய்மொழியாம் தமிழ் மொழி, ஆட்சி மொழியாக இருக்கும் நாடு சிங்கப்பூர். சிங்கப்பூருக்கும், தமிழ்நாட்டிற்கும் தொன்று தொட்டே சிறப்பான உறவு உள்ளது.

சிங்கப்பூரின் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தொடக்கநிலை முதல் இளநிலைக் கல்லூரி நிலை வரை தமிழ் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப்படுகிறது என்பது தமிழ்ப்பேச்சே எங்கள் மூச்சு என்று வாழ்ந்து வரும் எங்களுக்குத் ‘தேன் வந்து பாயுது எங்கள் காதினிலே’ என்பதைப் போன்ற இனிய செய்தி!

I need not explain much about Tamil Nadu. You know about Tamil Nadu, like we know about Singapore. The Government of Tamil Nadu is taking major initiatives in many fields like Science and Technology, Higher Education and so on. This is to further increase the growth of our state and to transform our economy.

As a part of such efforts, we have planned to host a Global Investors Meet in January 2024 on a large scale. We are visiting many countries to invite investors to Tamil Nadu. I have come here to invite you to my state.

சிங்கப்பூர் நாட்டின் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு.ஈஸ்வரன் அவர்கள் சென்னை வந்தபோது, என்னைச் சந்தித்தார். அவரது பண்பினால் மகிழ்ந்து போன நான், அடுத்த பயணமாகச் சிங்கப்பூர் செல்ல வேண்டும் என்று திட்டமிட்டேன். அவர் என்னைச் சந்தித்தபோது தமிழ்நாடு மற்றும் சிங்கப்பூர் இடையிலான பொருளாதார உறவுகள், பண்பாடு மற்றும் வர்த்தகம் பற்றி மிக விரிவாகப் பேசினோம்.

தமிழ்நாட்டின் முக்கிய முதலீட்டாளர்களில் சிங்கப்பூரும் ஒன்று என்பதை, நீங்கள் அனைவரும் அறிவீர்கள். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 30 சிங்கப்பூர் நிறுவனங்கள் உள்ளன. அசெண்டாஸ் நிறுவனம், தரமணியில் ஒரு மிகப் பெரும் IT Park நிறுவியுள்ளது. டமாசெக், DBS வங்கி, சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், MAPLE TREE போன்ற பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் வணிகம் புரிந்து வருகின்றன.

In order to play a vital role in shaping the economy of India, we in Tamil Nadu, have set ourselves the target of becoming One Trillion Dollar Economy by the year 2030. We are taking all efforts to achieve our target.

On this occasion, I appeal to you to invest on a large scale in Tamil Nadu which will be mutually beneficial to both Tamil Nadu and Singapore.

சிங்கப்பூரை மையமாகக் கொண்ட நிறுவனங்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். கடந்த இரண்டு வருடங்களில், தமிழ்நாட்டில் பல்வேறு துறை சார்ந்த முதலீட்டு ஊக்குவிப்பு நிகழ்வுகளை நடத்தி, இதுவரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

இதன்மூலம், ரூ.2,95,339 கோடி அளவிற்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. 4,12,565 நபர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே ரூ.4,800 கோடி முதலீட்டில் 4 சிங்கப்பூர் நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. இதன்மூலம், 6,200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்னும் பல திட்டங்களுக்கு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் சிறப்பு என்னவென்றால், பல்வேறு வகைப்பட்ட நிறுவனங்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதுதான்.

Electronics, Auto spare parts, Free trade economic zones, IT, Food Processing, ஃபார்மா, Textiles போன்ற பல்வேறு நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வந்துள்ளன.

மின் வாகனங்களுக்கான Charging stations போன்ற புதிய துறைகளிலும் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எங்கள் மாநிலத்தின் சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை உறுதிசெய்யும் விதமாக, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

நாங்கள் ஒவ்வொரு துறையையும் நன்கு ஆராய்ந்து, அத்துறைகள் சார்ந்து முதலீடு செய்யும் நிறுவனங்களுடன் ஆலோசனைகள் மேற்கொண்டு, அவர்கள் தேவைகளைக் கண்டறிந்து நிறைவு செய்திடும் வகையில், பல்வேறு துறைகளுக்கான கொள்கைகளை வெளியிடுகிறோம்.

Fintech policy, R&D Policy, Aerospace and defence policy, Footwear and Leather product policy, Special scheme for Tech Textiles எனப் பல கொள்கைகளை வெளியிட்டு இருக்கிறோம். எங்கள் மாநிலத்தில் Fintech city அமைப்பது போன்ற திட்டங்களைச் செயல்படுத்திட, உங்களின் இந்த ஆற்றலும், அனுபவமும் எங்களுக்கு மிகவும் தேவை.

அதேசமயம் உங்களது வர்த்தக வரம்புகளும் விரிந்து பரவும்; பெருகும். தொழில் பூங்காக்கள் மேம்பாடு, தொழில் நகரியங்கள், தொழில் பெருவழித் தடங்கள், துறைமுகங்களை மேம்படுத்துதல், நகர்ப்புற உள்கட்டமைப்பு, கழிவுநீர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை, கடல்நீரை நன்னீராக்கும் திட்டம், சுற்றுலா தொடர்பான திட்டங்கள் ஆகியவற்றில், சிங்கப்பூரின் ஒத்துழைப்புத் தமிழ்நாட்டிற்கு மிக அவசியம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எங்களது முன்னேற்றப் பயணத்தில் இணைந்து, அதற்கான திட்டங்களைச் செயல்படுத்த சிறப்பான பங்குதாரராகச் சிங்கப்பூர் கைகோர்த்திட வேண்டும் என்றும் உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்போது தமிழ்நாட்டில் முதலீட்டிற்கு உகந்த சூழ்நிலை மிகப் பிரகாசமாக இருக்கிறது. வளர்ந்த நாடுகள் மட்டுமல்ல, வளர்ந்து வரும் நாடுகளும் இந்தியாவில் முதலீடு செய்ய முன் வருகின்றன. இத்துறைகளில், உங்களின் மேலான முதலீடுகளை நாங்கள் வரவேற்கிறோம். இன்றைய தினம், சிப்காட் மற்றும் சிங்கப்பூர் இந்தியா கூட்டுத் திட்டம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமாகி உள்ளது.

இதன்மூலம், தரமான உள்கட்டமைப்புக்கான கொள்கைகள் மற்றும் அளவுகோல்களை உருவாக்குதல், சுற்றுச்சூழல் தூய்மைப்படுத்துதல், கழிவுநீர் மேலாண்மை, மலிவு விலையில் இல்லங்கள், உள்கட்டமைப்பு அமைப்பதற்கான நிதி வசதி, பசுமைமயமாக்கல், பசுமைக் கட்டடங்கள் போன்றவற்றை மேம்படுத்தி, அதன்மூலம், தொழில் பூங்காக்களின் தரத்தினை வெகுவாக மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

I hope I have explained to some level about our expectations. As I informed already, we are hosting a Global Investors Meet in Chennai, the capital of Tamil Nadu, on January 10 and 11 of 2024. I take great pleasure in inviting you all to take part in the event and be a partner country.

வந்தாரை வாழவைத்த சிங்கப்பூர் எங்கள் தமிழ்நாட்டுக்கு வந்தும் வளப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி! வணக்கம்!

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள்

- ❖ தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், சிங்கப்பூர் நாட்டைச்

சேர்ந்த Singapore Indian Chamber of Commerce and Industries (SICCI) நிறுவனத்திற்கும் இடையே, ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, பல்கலைக்கழக ஒத்துழைப்பு, அரசு நிறுவனங்கள், தனியார் துறைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு, தமிழ்நாட்டில் தொழில்துறைகளின் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு ஆதரவு போன்றவற்றில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

- சிங்கப்பூர் இந்தியா கூட்டாண்மை அலுவலகம் (Singapore India Partnership Office – SIPO), தமிழ்நாடு அரசின் சிப்காட் நிறுவனத்திற்கும் இடையே, பொருளாதார நடவடிக்கைகள், வளர்ச்சியில் ஒத்துழைப்பை ஏற்படுத்துதல் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- சிங்கப்பூர் இந்தியா கூட்டாண்மை அலுவலகத்திற்கும் (Singapore India Partnership Office – SIPO), தமிழ்நாட்டின் FameTN, TANSIM ஆகிய நிறுவனங்களுக்கும் இடையே, தொழிற்கல்வி, தொழில்நுட்ப தொடர் கல்விக்கான திறன் மேம்பாடு, StartupTN மூலம் ஸ்டார்ட்-அப் பொருளாதார செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு கூட்டாண்மைகளை எளிதாக்குதல் போன்றவற்றிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த Hi-P International Pvt Ltd., நிறுவனத்திற்கும் இடையே ரூ.312 கோடி முதலீடு மற்றும் 700 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் மின்னணு பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், Singapore University of Technology & Design (SUTD) நிறுவனத்திற்கும் இடையே, தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பில் எதிர்கால மற்றும் தொழில்துறைக்குத் தேவையான பாடத்திட்டம், பாட மேம்பாட்டிற்கான அறிவுப் பங்குதாரராக நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கும், சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த ITE Education Services நிறுவனத்திற்கும் இடையே, தொழில்நுட்ப, தொழிற்கல்வி பயிற்சித் துறையில் நீண்டகாலக் கூட்டாண்மையை நிறுவுதல், தமிழ்நாட்டில் தொழிற்சாலைத் திறன் பள்ளிகளை அமைத்தல், மேலாண்மை செய்தல் போன்றவற்றிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

சிங்கப்பூரில் அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான “வேர்களைத் தேடி” திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 24.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.05.2023 அன்று, சிங்கப்பூரில், சிங்கப்பூர் தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து நடைபெற்ற தமிழ் கலை பண்பாட்டு நிகழ்ச்சியில், “வேர்களைத் தேடி” என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

“வேர்களைத் தேடி” என்று புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்களைத் தாய்த் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பைப் புதுப்பிக்கும் வண்ணமும், தமிழ் கலை பண்பாடு, கலாச்சாரத்தினை அயலகத் தமிழர்களிடையே பரிமாற்றம் செய்யும் வகையிலும், ஆண்டுதோறும் 200 இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து பண்டைய தமிழர்களின் கட்டடம்/சிற்பக்கலை, நீர் மேலாண்மை, ஆடைகள், ஆபரணங்கள், கலை இலக்கியப் பண்பாடு, தொல்லியல் ஆய்வுகள், அறிஞர்கள், சான்றோர்களுடன் கலந்துரையாடல் என்ற கலாச்சார பரிமாற்ற சுற்றுலாத் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, இத்திட்டத்திற்காகச் சிங்கப்பூரில் தெரிவு செய்யப்பட்ட 10 இளைஞர்களுக்குச் சான்றிதழ்களையும் வழங்கினார்.

சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்திய கலாச்சார சந்திப்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் சார்பில் மிகுந்த எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று மிகுந்த உணர்ச்சியோடு நாமெல்லாம் மகிழத்தக்க வகையில் உரையாற்றி அமர்ந்திருக்கக்கூடிய சிங்கப்பூர் நாட்டின் மாண்புமிகு உள்துறை சட்ட அமைச்சர் மரியாதைக்குரிய திரு. கா. சண்முகம் அவர்களே,

தமிழ்நாட்டின் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி.ராஜா அவர்களே,

தமிழ்நாடு தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களே,

அரசு உயர் அலுவலர்களே,

அயலர் தமிழர் நலவாரிய உறுப்பினர் திரு. ராம் அவர்களே,

துவக்கத்தில் வரவேற்புரையாற்றியிருக்கக் கூடிய இந்த நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்களே,

சிங்கப்பூருக்கான இந்தியத் தூதர் திரு. பி.குமரன் அவர்களே,

சிங்கை தமிழ் அமைப்புக்களைச் சார்ந்த நிர்வாகிகளே,

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய சிங்கப்பூர் தமிழ் உடன்பிறப்புக்களே,

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தமிழைப்பற்றி சொல்லுகிறபோது அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வார்.

உளங்கவர் ஓவியமே! உற்சாகக் காவியமே!

ஓடை நறுமலரே! ஒளியுமிழ்ப் புது நிலவே!

அன்பே! அழகே! அமுதே! உயிரே!

இன்பமே! இனிய தென்றலே! பனியே!

கனியே! பசுந்தோகை மயிலே! பழரசச் சுவையே!

மரகத மணியே! மாணிக்கச்சுடரே! மன்பதை விளக்கே!

என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் தமிழைத் தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் இருக்க முடியாது. அப்படிப்பட்ட அந்தத் தமிழ் உணர்வோடு இந்த சிங்கப்பூரில் செயலாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய அருமை நண்பர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழ் அமைப்புகளின் சார்பில் இந்த விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த விழாவிலே நானும் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்தித்து உரையாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். வாய்ப்பினை வழங்கிய இந்த அமைப்புகளின் நண்பர்களுக்கும் இங்கு வந்திருக்கக்கூடிய உங்களுக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களைப் பார்க்கும்போது நான் மிகுந்த உற்சாகம் அடைகிறேன், பூரிப்படைகிறேன், புலகாங்கித உணர்வோடு உங்கள் முன்னால் நின்றுகொண்டிருக்கிறேன். கடல் கடந்து சிங்கப்பூருக்கு வந்திருப்பதாக நான் நினைக்கவில்லை. தமிழ்நாட்டுக்குள்ளே இருப்பதாகத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அந்தளவுக்குச் சிங்கப்பூர் என்பது என் சிந்தைக்கு இதமான ஊராக அமைந்திருக்கிறது.

தமிழ்மொழியில் ஏற்பட்ட எழுத்துச் சீர்திருத்தத்தை முதன்முதலில் ஏற்றுக்கொண்டு செயற்படுத்திய நாடு சிங்கப்பூர். சிங்கப்பூரில் தமிழ் நாளிதழ்தான் முதலில் தோன்றியது! சிங்கப்பூர் நாணயத்திலும் தமிழ் இடம்பெற்றுள்ளது. இப்படி சிங்கப்பூரில் தமிழ் நீக்கமற நிறைந்திருக்க அடிப்படைக் காரணமாக இருந்த முதல் பிரதமர் லீ குவான் யூ அவர்களுக்குத் தமிழர்கள் சார்பாக நான் இந்த நேரத்தில் இந்த விழாவின் மூலமாக நன்றி செலுத்துகிறேன்.

ஒரு சிறிய தீவாக இருந்த சிங்கப்பூரை மிகக் குறுகிய காலத்தில் பொருளாதார வளர்ச்சி, தொழில் முன்னேற்றம், கட்டுமானம், கப்பல்துறை, விமானப் போக்குவரத்து முதலிய பலவற்றில் உலகமே வியக்கும் வகையில் முன்னேற்றத்துக்கு வித்திட்டவர் சிங்கப்பூரின் முதல் பிரதமர் மாண்புமிகு லீ குவான் யூ அவர்கள். சிங்கப்பூரில் தமிழர் ஒருவர் இந்த நாட்டின் அதிபராக, அதாவது குடியரசுத் தலைவராக 12 ஆண்டுகள் சேவையாற்றி இருக்கிறார். அவர் காலஞ்சென்ற பெரும் மதிப்புக்குரிய திரு. எஸ்.ஆர்.நாதன் அவர்கள்.

இது உலகெல்லாம் வாழும் தமிழர்களுக்குப் பெருமைதரக்கூடிய ஒன்று. அதேபோல், சிங்கப்பூரில் தமிழும் - தமிழர்களும் சிறப்பாக வாழ்வதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் தந்தைப் பெரியாரின் சீடராக இருந்த 'தமிழவேள்' கோ.சாரங்கபாணி அவர்கள். தமிழர்கள் முன்னேற சீர்திருத்தச் சங்கத்தைத் தொடங்கியவர் அவர்.

தமிழர் திருநாளுக்கு ஒருமுறை நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை இங்கே வரவழைத்து லீ குவான் யூ அவர்களுடன் அமரவைத்துச் சொற்பொழிவு ஆற்றச் செய்தவர் அவர். தமிழர்கள் பலர் இந்நாட்டின் குடிமக்களாகத் தலைநிமிர்ந்து வாழத் 'தமிழவேள்' கோ.சாரங்கபாணி அவர்கள்தான் காரணம் என்பதை யாரும் மறக்க முடியாது.

தமிழர் வாழாத நாடு இந்தப் பூமிப்பந்தில் இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்குப் பரந்து விரிந்து வாழும் தமிழர் அனைவருக்கும் நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பது திராவிட இயக்கம்தான். 'பகுத்தறிவுப் பகலவன்' தந்தைப் பெரியார் அவர்கள் இரண்டு முறை சிங்கப்பூருக்கு வருகை தந்து தன்னுடைய சீர்திருத்தக் கருத்துகளைத் தமிழர்களிடையே விதைத்தார். பேரறிஞர் அண்ணா

அவர்களும் - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களும் இங்கு வருகை தந்து அந்த உணர்வை வளர்த்தெடுத்தார்கள்.

இப்படித் திராவிட இயக்க உணர்வால் வளர்ந்த திராவிட விழுதுகளான உங்களைக் காண்பதற்காகத்தான் நானும் இங்கே வந்திருக்கிறேன். தமிழும் - தமிழ்நாடும் - திராவிட இயக்கக் கொள்கைகளும் இணைக்கும் நம்மை மதமோ, சாதியோ பிளவுபடுத்திவிட முடியாது. நம் தமிழின உணர்வுக்கு அடிப்படையான பெருமைகள் அனைத்துக்கும் இப்போது தொல்லியல் ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன.

கி.மு. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியில்,

- வைகை ஆற்றங்கரையில் நகரமயமாக்கல் இருந்ததை,
- தமிழர்கள் கல்வியறிவும் எழுத்தறிவும் பெற்றிருந்தனர் என்பதை அறிவியல் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை நிலைநிறுத்தியுள்ளது.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை உலகத் தமிழர்கள், பொதுமக்கள் கண்டுகளிக்கும் வகையில் கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு அதனை, சில மாதங்களுக்கு முன்பு நான் திறந்து வைத்தேன்.

இதேபோல், திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை அருங்காட்சியகத்தை அமைப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். இந்தியாவின் வரலாறு தமிழ்நாட்டில் இருந்துதான் தொடங்கப்பட வேண்டும் என்று நான் சொல்லி வருகிறேன். தமிழினத்தின் பெருமையை மீட்கும் அரசாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்துள்ளது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் எழுதிய "ஒரு பண்பாட்டின் பயணம்" என்ற நூலை அண்மையில் வெளியிட்டேன்.

தமிழன் என்று சொல்லிக் கொள்வதில் நாம் எத்தகைய பெருமையை அடைய வேண்டும் என்பதற்கு அடிப்படையான நூல் அது.

சிந்துப் பண்பாடு என்பது 5,000 ஆண்டுகள் பழமையானது. அங்கு வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய மொழி தமிழ் மொழி. வாழ்ந்த மக்கள் சங்ககாலத் தமிழரின் மூதாதையர் என்பதை நிறுவி இருக்கிறார். தமிழினத்தின் வேர்கள் என்பவை தமிழ்நாட்டுடன் முடிகிறவை அல்ல. உலகின் பலநாடுகளுக்கும் பரவி இருந்தவை என்பதை அறிய முடிகிறது. அத்தகைய பாரம்பரியத்தின் சின்னமாகச் சிங்கப்பூர் தமிழர்களாகிய நீங்களும் இருக்கிறீர்கள்.

சிங்கப்பூருக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையே உள்ள தொடர்பு என்பது, ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டது. சிங்கப்பூரில் கண்டெடுக்கப்பட்ட பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டில் தமிழ்ப் பெயர் இருக்கிறது என்று சமீபத்தில் ஒரு ஆய்வு நூல் வெளியாகி உள்ளது. சர் ஸ்டாம்ஃபோர்டு இராபிள்ஸ் (Sir Stamford Raffles) காலத்தில் சிங்கப்பூரின் வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடங்கள், சாலைகள், வழிபாட்டு இடங்கள் ஆகியவற்றின் உருவாக்கத்திலும் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் பங்கு இருந்திருக்கிறது.

இப்போதும் தங்கள் உழைப்பின் மூலமாக இந்த நாட்டை உயர்த்தி வருகிறீர்கள். அதன்மூலமாக நீங்களும் உயர்ந்து வருகிறீர்கள். கல்வியும் உழைப்பும்தான் தமிழர்களின் இந்த உயர்வுக்குக் காரணம். தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் பலர் சிங்கப்பூரில் பல்வகைப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் நலன் காக்கும் பணியிலும் திராவிட மாடல் அரசு பெரும்பங்காற்றி வருகிறது.

சிங்கப்பூர் குடிமக்களாகிய தமிழ் மக்கள், அமைச்சர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் முதலிய பல்வேறு பொறுப்புகளில் இருந்து வருவதும் எனக்குப் பெரு மகிழ்ச்சி தருகிறது. இத்தகைய அமைதியான வாழ்க்கை உங்கள் அனைவர்க்கும் தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன். சாதாரண நிலையில் இருந்த சிங்கப்பூரை உலகம் போற்றும் நாடாக மாற்றிக் காட்டியவர்கள் இந்த நாட்டின் பிரதமர்கள்.

லீ குவான் யூ அவர்களின் புகழ் இன்று வரை நீடித்து நிலைத்து இருக்கிறது. இந்தியாவுடனான வணிகத் தொடர்பையும் அவர் வளர்த்தார். இந்திய வணிகத் தொடர்பை வளர்த்ததில் முந்தைய பிரதமர் கோ சோக் தோங் (Goh Chok Tong) அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. இன்றைய பிரதமர் லீயும் தொடர்ந்து அதனை நிலைக்கச் செய்கிறார். இதன் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை நோக்கி சிங்கப்பூர் நிறுவனங்களை ஈர்ப்பதற்காக நான் வருகை தந்துள்ளேன்.

புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கின்றன. வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தமிழ்நாட்டில் உலக முதலீட்டாளர் மாநாடு நடைபெற இருக்கிறது. அதில் பங்கெடுக்க சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுப்பதற்காகவும் நான் இங்கே வருகை தந்திருக்கிறேன். தொழில் முனைவோராக இருக்கக்கூடிய தமிழர்கள் இதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தது முதல் தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள தமிழர்களுக்கும் கலங்கரை விளக்கமாக நாம் ஆட்சியை நடத்தி வருகிறோம். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளப்பூர்வமான மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் கழக அரசால் இயற்றப்பட்டது.

வெளிநாடு வாழ் தமிழர் நலவாரியம் ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்று அறிவிக்கப்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக அமைக்க முடியவில்லை. அடுத்து வந்த ஆட்சியாளர்களும் அதனைப்பற்றிக் கவலைப்படவில்லை. இந்த நிலையில், 'வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்' என்ற அமைப்பை மறக்காமல் நாங்கள் அமைத்துள்ளோம். அதுமட்டுமல்ல, அயலகத் தமிழர் நலத்துறை உருவாக்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான்.

- வெளிநாடு வாழ் தமிழர் நலநிதி உருவாக்கப்பட்டுள்ளது.
- வெளிநாடு வாழ் தமிழர் குறித்த தரவுத் தளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- நிதி உதவிகள் வழங்கப்படுகிறது.
- சட்ட உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு திரும்பியவர்களுக்கு குறு தொழில்கள் செய்திட மானியத்துடன் கடனுதவி வழங்கப்படுகின்றன.
- புலம் பெயர்ந்தோர் பிள்ளைகள் தமிழ் கற்றுக்கொள்ள வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுகின்றன.
- புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.
- வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் உலகத்தமிழர் புலம்பெயர்ந்தோர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இன்னும் பல கோரிக்கைகளை வைத்துள்ளீர்கள். அதனை முறைப்படி தமிழ்நாட்டில்தான் அறிவிக்க முடியும்.

- ❖ சிங்கப்பூர், மலேசியா, இலங்கை உள்ளிட்ட புலம்பெயர் நாடுகளில் உள்ள எழுத்தாளர்கள் எழுதும் நூல்களை வாங்கி, தமிழ்நாட்டு நூல் நிலையங்களில் வைப்பது.
- ❖ புலம்பெயர் நாடுகளில் உள்ள இளைஞர்களைத் தமிழ்நாட்டுக்கு சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.
- ❖ புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழ்ச் சான்றோர்களை - அறிஞர்களை - பேராசிரியர்களை மதித்து விருது வழங்குதல்.
- ❖ கலைகள், பண்பாட்டுப் பரிமாற்றம், நாட்டுப்புறக் கலைஞர்களைப் புலம்பெயர் நாடுகளுக்கு அனுப்பி ஊக்குவித்தல்.
- ❖ பண்பாட்டுப் பரிமாற்றம் பெருக பல கண்காட்சிகளை நடத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை வைத்துள்ளீர்கள்.

இவை குறித்துத் தமிழ்நாடு சென்ற பின்பு ஆலோசித்து, முறையான அறிவிப்பை வெளியிடுவேன் என்ற உறுதிமொழியை நான் இங்கே தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். எனது அன்பு வேண்டுகோள் என்பது, இங்குள்ள தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு வந்து அவர்களின் வணிக வளத்தைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான வசதிகள், அனுமதிகள் அனைத்தையும் தமிழ்நாடு அரசு செய்துகொடுக்கும் என்று உறுதி கூறுகிறேன்.

தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறி வருகிறது. 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உன்னதமான திராவிடக் கோட்பாடு அடிப்படையிலான ஆட்சியை நடத்தி வருகிறோம். 2030ஆம் நிதியாண்டிற்குள், 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாகத் தமிழ்நாட்டை மாற்றுவதற்கான ஒரு இலட்சிய இலக்கினை அரசு நிர்ணயித்துள்ளது.

எனவேதான், பல்வேறு தொழில்துறை முதலீட்டு மாநாடுகளை நடத்தியுள்ளோம். அடுத்த ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாடு வரும்போது அதில் சிங்கப்பூர் முதலீட்டாளர்களும் அதிகமாக இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறேன்.

அடுத்து, சிங்கப்பூரின் தந்தை என்று போற்றப்படும் லீ குவான் யூ அவர்களால்தான் தமிழர்களும் தமிழும் இங்கு உயர்வை அடைந்தது. நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களின் பேச்சால் ஈர்க்கப்பட்டவர் லீ குவான் யூ அவர்கள். சிங்கப்பூரில் அண்ணாவின் உரையைக் கேட்ட லீ குவான் யூ அவர்கள் தனது மூத்த சகோதரர் என்று பாசத்தோடு குறிப்பிட்டார். அதுமட்டுமல்ல, தனது அலுவலகத்துக்கு அண்ணா அவர்களை அழைத்து விருந்து கொடுத்தார். அதனால்தான் லீ குவான் யூ அவர்கள் இறந்தபோது சிங்கப்பூரின் நாயகன் என்று போற்றினார் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஆகவே, ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். லீ குவான் யூ அவர்களுக்குத் தமிழ்நாட்டில் நினைவுச் சின்னம் எழுப்ப நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம். இது தமிழ்நாட்டில் மன்னார்குடியில் அமைய இருக்கிறது. சிங்கப்பூரில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பகுதியினர் மன்னார்குடி, பட்டுக்கோட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அங்குள்ள பரவாக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை, திருமக்கோட்டை, உள்ளிக்கோட்டை, மேலத்திருப்பாலக்குடி, கீழத்திருப்பாலக்குடி, ஆலங்கோட்டை நெடுவாக்கோட்டை, மேலவாசல் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சிங்கப்பூருடன் தொடர்பு உண்டு என்பதை நான் நன்றாக அறிவேன். இந்தக் கிராமங்களிலிருந்து வந்தவர்கள்தான் அதிகம். எனவே, லீ குவான் யூ பெயரால் நூலகமும் சிலையும் மன்னார்குடியில் அமையும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களை உயர்த்தும் தமிழ்நாட்டை உயர்த்த நீங்கள் அனைவரும் கைகோர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இந்த அன்புமிகு வரவேற்பை நல்கிய உங்கள் அனைவருக்கும் உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் வாழ்வில் அனைத்து நலமும் வளமும் கிடைக்க தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் மட்டுமல்ல, உங்களின் ஒருவனாக - உங்கள் அன்பு உடன்பிறப்பாக எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

ஜப்பான் நாட்டில் ஆறு நிறுவனங்களுடன் ரூ.818.90 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன - 23.05.2023

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். 23.05.2023 அன்று சிங்கப்பூர் சென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தனது இரண்டு நாள் சிங்கப்பூர் பயணத்தை முடித்துக்கொண்டு தற்போது ஜப்பானில் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக, 29.05.2023 அன்று காலை டோக்கியோவில், ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் (Japan External Trade Organization - JETRO) இணைந்து நடத்தப்பட்ட மாபெரும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் கேட்டு அழைப்பு விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து மாலை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஜப்பான் நாட்டைச் சார்ந்த ஆறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள்

1. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், கியோகுட்டோ சாட்ராக் (KyoKuto Satrac) நிறுவனத்திற்கும் இடையே, காஞ்சிபுரம் மாவட்டம், மாம்பாக்கத்தில் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 13 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.113.90 கோடி முதலீட்டில் டிரக் வாகனங்களுக்கான பாகங்கள் உற்பத்தி செய்வதற்கான புதிய ஆலை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

2. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், மிட்சுபா (Mitsuba) நிறுவனத்திற்கும் இடையே, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பூங்காவில் அமைந்துள்ள நான்கு மற்றும் இரண்டு சக்கர வாகனங்களுக்கான உதிரி பாகங்களைத் தயாரிக்கும் மிட்சுபா இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத் தொழிற்சாலையை ரூ.155 கோடி முதலீட்டில் விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

3. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், ஷிமிசு (Shimizu Corporation) நிறுவனத்திற்கும் இடையே, கட்டுமானம், கட்டுமானப் பொறியியல் மற்றும் அதன் தொடர்புடைய வணிகத்தைத் தமிழ்நாட்டில் மேற்கொள்வதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

4. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், கோயீ (Kohyei) நிறுவனத்திற்கும் இடையே, ரூ.200 கோடி முதலீட்டில், பாலிகார்பனேட் தாள் தயாரித்தல், கூரை அமைப்புகள் தயாரித்தல், கட்டுமானத் துறையில் பயன்படுத்த எலக்ட்ரானிக் கூறுகளுக்கான எக்ஸ்ட்ருஷன் லைன்கள் (extrusion lines for electronic components for use in construction industry) ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலை நிறுவுவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

5. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், சடோ-ஷோஜி மெட்டல் வர்க்ஸ் (Sato-Shoji Metal Works) நிறுவனத்திற்கும் இடையே, ரூ.200 கோடி முதலீட்டில் விண்வெளி, பாதுகாப்பு மற்றும் கட்டுமான உபகரணங்கள் துறையில் பயன்படுத்தப்படும் உயர்தர எஃகு பாகங்கள் உற்பத்திசெய்வதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

6. தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், டஃப்ல் (Tofle) நிறுவனத்திற்கும் இடையே, ரூ.150 கோடி முதலீட்டில் சோலார், எஃகு ஆலைகள், விண்வெளி மற்றும் குறைக்கடத்தி தொழில்களுக்கான துருப்பிடிக்காத எஃகு சிறப்பு நெகிழ்வான குழல்களை உற்பத்தி (stainless steel specialized flexible hoses) செய்வதற்கான தொழிற்சாலையை நிறுவுவதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

என மொத்தம், ரூ.818.90 கோடி முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாட்டின் பல்வேறு முன்னணி நிறுவனங்களுடன் ரூ.3,233 கோடி முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளில் தனது அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு, 31.05.2023 அன்று இரவு சென்னைக்கு வருகை தந்து சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் ஆற்றிய உரை



உங்கள் வாழ்த்துக்களோடு நான் மேற்கொண்ட சிங்கப்பூர் - ஜப்பான் பயணம் வெற்றிகரமாக அமைந்தது. அந்தப் பயணத்தைப் பற்றிச் சுருக்கமாக உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டிற்கும் ஜப்பானுக்கும், கடந்த சில ஆண்டுகளில் பொருளாதார ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் நல்லுறவைப் பெறக்கூடிய வகையில் இந்தப் பயணம் அமைந்தது. குறிப்பாக, தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட மிகப்பெரிய திட்டங்களான மெட்ரோ இரயில் திட்டம், ஒகேனக்கல்

கூட்டுக் குடிநீர் திட்டம் போன்றவற்றை செயல்படுத்தியிருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் ஜப்பானின் பங்கும் அதில் இருக்கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

உற்பத்தித் துறையில் உலகிற்கே முன்னோடியாக விளங்குவது ஜப்பான் நாடு. அதே நேரத்தில் ஆசியாவின் மிகப்பெரும் உற்பத்தி தொழில் மையமாகத் தமிழ்நாடு உருவெடுக்க வேண்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய குறிக்கோள். இதற்காகத் தொழில் முதலீடுகளை ஈர்த்திடக்கூடிய வகையில் ஏற்கெனவே மாண்புமிகு தொழில்துறை அமைச்சராக இருந்த திரு. தங்கம் தென்னரசு அவர்களும் ஜப்பான் நாட்டிற்குச் சென்று ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகளை அவர் நடத்தினார். குறைந்தபட்சம் ரூ.3,000 கோடி முதலீடுகளை ஈர்த்திட வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்பட்டோம்.

அந்த வகையில், முந்தைய தொழில்துறை அமைச்சர் நம்முடைய திரு. தங்கம் தென்னரசு அவர்களும், இன்றைய தொழில்துறை அமைச்சராக இருக்கக்கூடிய திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்களும், தொழில்துறை அலுவலர்களும் முனைப்போடு செயல்பட்டு, பல ஜப்பான் நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தைகளை நடத்தி, அதில் முக்கியத் திட்டமாகிய, ரூ.1,891 கோடி முதலீட்டில் குளிர்சாதனக் கருவிகள் உற்பத்தி செய்வதற்கான புதிய தொழிற்சாலையை மிட்சுபிஷி நிறுவனம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்கெனவே சென்னையில் என் முன்பு கையெழுத்திடப்பட்டது. அதையொட்டி,

ஹை-பி நிறுவனம் - ரூ. 312 கோடி
டைசெல் நிறுவனம் - ரூ. 83 கோடி
கியோகுட்டோ நிறுவனம் - ரூ. 113.9 கோடி
மிட்சுபா இந்தியா - ரூ. 155 கோடி
பாலிஹோஸ் டோஃபில் - ரூ.150 கோடி
பாலிஹோஸ் கோஹ்யேய் - ரூ. 200 கோடி
பாலிஹோஸ் சட்டோ-ஷோஜி - ரூ.200 கோடி
ஓம்ரான் ஹெல்த்கேர் - ரூ.128 கோடி

என மொத்தம் ரூ.3,233 கோடி மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன. இதன்மூலமாக, நேரடியாகவும் மறைமுகமாகவும் 5,000க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு நான் உங்களிடத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இவை மட்டுமல்லாமல், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் மேம்பாட்டிற்கும் தொழிற்கல்வி வளர்ச்சிக்கும், உயர்கல்வித் திறன் பயிற்சிக்கும் தேவையான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பல்வேறு துறைகளுடைய பல முன்னணி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் அடுத்தகட்ட தொழில் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் இந்தத் தொழிற்சாலைகள் தூண்டுகோலாக இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். மேலும் சிங்கப்பூரிலும், ஜப்பானில் ஒஸாகா நகரத்திலும், டோக்கியோ நகரத்திலும் இருக்கக்கூடிய பல்வேறு முன்னணித் தொழில் நிறுவனங்களினுடைய தலைவர்களையெல்லாம் சந்தித்தேன். சிங்கப்பூர் நாட்டினுடைய சட்டம் மற்றும் உள்துறை அமைச்சரையும், தொழில் வர்த்தகத்துறை அமைச்சரையும் சந்தித்துத் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு எதிர்கால திட்டங்கள் குறித்தும், இந்தியாவில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள உகந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது என்பதையும் நான் எடுத்துரைத்திருக்கிறேன்.

இந்தச் சந்திப்பின்போது, மேலும் பல முதலீடுகளைத் தமிழ்நாட்டில் மேற்கொள்ள சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பல நிறுவனங்கள் மிகவும் முனைப்போடு இருப்பது எங்களுக்குத் தெரியவந்தது.

மேலும், தொடர்ந்து முயற்சி செய்து, இந்த நிறுவனங்களின் தொழில் முதலீடுகளையும் தமிழ்நாட்டுக்கு ஈர்த்திடத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு தொழில்துறை அமைச்சரையும், தொழில்துறை அலுவலர்களையும் நான் வலியுறுத்தியிருக்கிறேன். இதையொட்டி, வருகிற 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10, 11 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறவிருக்கக்கூடிய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கும் நீங்களெல்லாம் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு நான் அழைப்பு விடுத்திருக்கிறேன்.

இந்த அழைப்பினை ஏற்றுப் பெரும் தொழில் நிறுவனங்களின் தலைவர்கள் பலரும் அதில் கலந்து கொள்வதாக உறுதி தந்திருக்கிறார்கள். இந்த மாநாட்டைச் சிறப்பாக நம்முடைய தமிழக அரசு நடத்த இருக்கிறது என்பதையும் உங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எண்ணற்ற சமூகநலத் திட்டங்களால் நவீன தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பி

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட தமிழ்ச்சமூகம் சனாதனப் பண்பாட்டு ஆதிக்கத்தை எதிர்த்து உறுதியாய் எழுந்து நின்றது. இந்த மண்ணுக்கான - மக்களுக்கான திராவிட இயக்கம் தோன்றியது. புத்தர் முதல் வள்ளலார் வரை இந்த மண்ணில் விதைத்த புரட்சியின் அடித்தளத்தில் திராவிட இயக்கம் வேரூன்றியது.

அத்திப்பாக்கம் வெங்கடாசலனார் - பண்டித அயோத்திதாசர் - தாத்தா ரெட்டைமலை சீனிவாசன் - பிட்டி தியாகராயர் - நடேசனார் - டி.எம்.நாயர் - ஏ.பி.பாத்ரோ - எம்.சி.இராஜா - பனகல் அரசர் - தந்தைப் பெரியார் - பேரறிஞர் அண்ணா என தமிழினத்தின் இனமான - பகுத்தறிவு - சுயமரியாதை உணர்வைக் காத்திட உருவான தலைவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து - தலைமை தாங்கியவர் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள்!

எண்ணற்ற சமூகநலத் திட்டங்களால் இன்றைய நவீன தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பி அவர்!

தமிழ்நாட்டின் அடையாளமாக விளங்கும் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடங்கும் இந்நாளில், அவரது புகழைப் போற்றி, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காத்து, நம் இயக்க இலக்குகளை அடைய உறுதியோடு அவர் வழி நடப்போம்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100ஆவது பிறந்த நாளையொட்டி
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்*
சமூக வலைதளப் பதிவு - 03.06.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 22.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"க்குத் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டு தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகராக மாற்ற வேண்டும் என்ற இலட்சியத்தோடு, மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் விளையாட்டு வசதிகளை ஏற்படுத்தவும்,விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் விளையாட்டுச் சூழலை உருவாக்கிடவும், அரசிற்கும், பங்குதாரர்களுக்கும் இடையில் தடையற்ற ஒருங்கிணைப்பை அடைவதற்கும், பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து பெறக்கூடிய நன்மைகளைப் பயன்படுத்துவதற்கும், "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை" (Tamil Nadu Champions Foundation) என்ற அறக்கட்டளை உருவாக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.05.2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வழங்கினார் – 22.05.2023

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் உருவாக்கம், உறுப்பினர்கள், இயக்குநர் குழுவின் செயல்பாடுகள் ஆகியவை தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட ஏழு பேர் அடங்கிய நிருவாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் நிருவாக நடைமுறைகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்குத் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாட்டின் குழந்தைகள் திடமானவர்களாக வளர ஊட்டச்சத்தை உறுதிசெய்திடுவோம்

2021ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற இரு மாதங்களில் சமூக நலத்துறைச் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாட்டை ஊட்டச்சத்துக் குறைபாடில்லாத மாநிலமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியிருந்தேன்.

தொடர்ந்து எடுக்கப்பட்ட புள்ளிவிவரம் எனக்கு மனவேதனை அளித்தது. தமிழ்நாட்டில் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் பலர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் வயதுக்கேற்ற எடை, உயரமில்லாமல் மெலிந்து இருப்பது தெரியவந்தது. இதையடுத்து தமிழ்நாட்டின் குழந்தைகளைத் திடமானவர்களாக ஆக்கவேண்டும் என்ற உறுதியுடன் சிறப்பு ஊட்டச்சத்துத் திட்டத்தைக் கழக அரசு பொறுப்பேற்று இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நாளில் அறிவித்தேன்.

சில வாரங்களில், ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளைக் கண்டறிய சிறப்பு மருத்துவ முகாமினை நீலகிரி மாவட்டம், முத்தோரை குழந்தைகள் மையத்தில் மே 21 அன்று தொடங்கி வைத்தேன்.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு பிப்ரவரி 28 அன்று ஏற்றமிகு ஏழு திட்டங்களில் ஒன்றாக ஊட்டச்சத்தை உறுதிசெய் திட்டத்தின்கீழ், 6 வயதுக்குட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 1,11,216 குழந்தைகளுக்குச் சிறப்பு உணவாக RUTF உணவு அளிப்பதையும், 6 மாதத்துக்குட்பட்ட கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய 11,917 குழந்தைகளுக்குத் தேவையான தாய்ப்பால் கிடைப்பதை உறுதிசெய்ய தாய்மார்களுக்கு ஊட்டச்சத்துப் பெட்டகங்கள் வழங்குவதையும் தொடங்கிவைத்தேன்.

இதன்படி, ஊட்டச்சத்து உணவு, மருத்துவ உதவி வழங்கி இத்தகைய குழந்தைகளின் வளர்ச்சி கண்காணிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் எந்த அளவுக்கு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை எழுத்தாளர் சரவணன் சந்திரனின் இந்தப் பதிவு படம்பிடித்துக் காட்டுகிறது.

இதற்குக் காரணமான அமைச்சர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி. தமிழ்நாட்டின் குழந்தைகள் அறிவார்ந்தவர்களாக - திடமானவர்களாக வளர அவர்களின் ஊட்டச்சத்தை உறுதிசெய்திடுவோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 19.05.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

ரூ.2,003 கோடிச் செலவில் 16 புதிய துணை மின் நிலையங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் - 19.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 19.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் சார்பில், ரூ.1,859.12 கோடிச் செலவில் நிறுவப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களையும், ரூ.143.88 கோடிச் செலவில் 65 துணை மின் நிலையங்களில் 853 எம்.வி.ஏ. அளவிற்குத் திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட்டினையும் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழிற்துறை, விவசாயம், வணிகம், தகவல் தொழில்நுட்ப மையங்கள், மெட்ரோ இரயில் திட்டங்கள், மின்சார வாகன மின்னூட்ட நிலையங்கள் ஆகியவற்றினைக் கருத்திற்கொண்டு, வளர்ச்சிக்குத் தேவையான மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்கிடவும், மேலும், காற்று மற்றும் சூரியசக்தி மூலம் பெறப்படும் பசுமை மின்சாரத்தை முழுமையாகப் பயன்படுத்திடவும், புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல், துணை மின் நிலையங்களின் தரம் உயர்த்துதல், இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் புதிய விகிதாச்சார அறிமுகம் மற்றும் இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் கூடுதல் திறனுள்ள மின் மாற்றிகள் நிறுவுதல் போன்ற பணிகளைத் தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

புதியதாக நிறுவப்பட்டுள்ள 16 துணை மின் நிலையங்களைத் திறந்து வைத்தல்

சென்னை மாவட்டம், புளியந்தோப்பில் புதிய 400

கி.வோ. வளிமகாப்புத் துணை மின் நிலையம் (Gas Insulated Substation), தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் புதிய 400 கி.வோ. துணை மின் நிலையம் என ரூ.1,718.95 கோடிச் செலவில் நிறுவப்பட்டுள்ள இரண்டு புதிய 400 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

அரியலூர் மாவட்டம் – நடுவலூர்; செங்கல்பட்டு மாவட்டம் – படூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் – பெண்ணேஸ்வரமடம் (விகிதாச்சார அறிமுகம்); மதுரை மாவட்டம் – தனியாமங்கலம் (விகிதாச்சார அறிமுகம்); நீலகிரி மாவட்டம் – மலர்பெட்டு; சேலம் மாவட்டம் – நத்தக்கரை, திருவள்ளூர் மாவட்டம் – அரசூர் ஆகிய இடங்களில் ரூ.94.20 கோடிச் செலவில் நிறுவப்பட்ட ஏழு புதிய 110 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம் – புதுப்பாக்கம்; சென்னை மாவட்டம் – ஆழ்வார்திருநகர்; காஞ்சிபுரம் மாவட்டம் – மாத்தூர்; புதுக்கோட்டை மாவட்டம் – நகரப்பட்டி; திருவள்ளூர் மாவட்டம் – திருமலைவாசன் நகர் மற்றும் திருவாரூர் மாவட்டம் – அடியக்கமங்கலம், எடமேலையூர் ஆகிய இடங்களில் ரூ.45.97 கோடிச் செலவில் நிறுவப்பட்ட ஏழு புதிய 33/11 கி.வோ. துணை மின் நிலையங்கள்;

என மொத்தம், ரூ.1,859.12 கோடிச் செலவில் நிறுவப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

65 துணை மின்நிலையங்களில் திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட்டினைத் தொடங்கி வைத்தல்

செங்கல்பட்டு மாவட்டம் – இந்தளூர், இல்லேடு, கடப்பேரி; கோயம்புத்தூர் மாவட்டம் – பவானி பேரேஜ், பட்டணம், ரேஸ் கோர்ஸ், காடுவெட்டிப்பாளையம்; கடலூர் மாவட்டம் – வெள்ளக்கரை; தருமபுரி மாவட்டம் – பொம்மிடி; திண்டுக்கல் மாவட்டம் – பாப்பம்பட்டி, இலட்சுமணப்பட்டி, நத்தம்; ஈரோடு மாவட்டம் – டி.என்.பாளையம், ந.மேட்டுப்பாளையம், காசிபாளையம், வெண்டிபாளையம்; கள்ளக்குறிச்சி மாவட்டம் – மூங்கில்பாடி, ஆசனூர்; காஞ்சிபுரம் மாவட்டம் – பள்ளிக்கரணை, சிங்காடிவாக்கம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட்; கரூர் மாவட்டம் – அய்யர்மலை, புலியூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் – குருபரப்பள்ளி, பாகலூர், காமன்தொட்டி, சூதுவாடி; மயிலாடுதுறை மாவட்டம் – மணல்மேடு, பாலையூர்;

நாமக்கல் மாவட்டம் – புதன்சந்தை, வளையப்பட்டி; புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடி, பாக்குடி, மலையூர், டி.நல்லூர்; இராமநாதபுரம் மாவட்டம் – கடலாடி; இராணிப்பேட்டை மாவட்டம் – புன்னை; சேலம் மாவட்டம் – மின்னம்பள்ளி; சிவகங்கை மாவட்டம் – இளையாங்குடி; தென்காசி மாவட்டம் – சங்கரன்கோவில்; தஞ்சாவூர் மாவட்டம் – மாரியம்மன்கோவில்; தேனி மாவட்டம் – வண்ணாத்திப்பாறை, மார்க்கையன்கோட்டை, தேவாரம்; திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி, திருவள்ளூர், பட்டாபிராம், கும்மிடிப்பூண்டி சிப்காட் – III, நொளம்பூர், தேர்வாய்கண்டிகை, மப்பேடு; திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர், சேத்துப்பட்டு, காஞ்சி; திருப்பூர் மாவட்டம் – பெரியார் நகர், நாரணபுரம், ஏரிப்பாளையம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – வையம்பட்டி; விழுப்புரம் மாவட்டம் – திண்டிவனம், மரக்காணம், தாயனூர், இளமங்கலம்; விருதுநகர் மாவட்டம் – வத்திராயிருப்பு, முத்துராமலிங்கபுரம், அனுப்பங்குளம் ஆகிய இடங்களில் உள்ள 65 துணை மின் நிலையங்களில் ரூ.143.88 கோடி மதிப்பீட்டில் 67 மின் மாற்றிகளின் திறனைக் கூடுதலாக 853 எம்.வி.ஏ. உயர்த்தி, அவற்றின் செயல்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

சென்னை மாநகராட்சியில் ரூ.35.79 கோடிச் செலவில் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 12.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.35.79 கோடிச் செலவில் பள்ளிகள் புதுப்பிக்கும் பணிகள், 19 புதிய பூங்காக்கள் அமைக்கும் பணிகள், ஒரு பூங்கா மறுசீரமைக்கும் பணி, 5 புதிய விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் பணிகள், 5 நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகள் ஆகிய முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்தார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சி, சென்னை மாநகரின் கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் புதிய சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல், சேதமடைந்த சாலைகளைச் சீரமைத்தல், சென்னை பள்ளிகளைத் தரம் உயர்த்தும் வகையில் நவீனக் கட்டமைப்புடன் கூடிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், மக்களின் நலனில் அக்கறை கொண்டு சுகாதாரம், ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் புதிய ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுதல், பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல், மக்களின் பொழுதுபோக்கிற்காகவும், மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையில் பசுமையான செடிகள், மரங்களுடன் கூடிய புதிய பூங்காக்கள் அமைத்தல், விளையாட்டை ஊக்கப்படுத்தும் வகையில் விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய விளையாட்டுத் திடல்கள் அமைத்தல், சென்னை மாநகரைத் தூய்மையாகப் பராமரிக்கும் வகையில் நாள்தோறும் சேகரிக்கப்படும் மக்கும், மக்காத குப்பைகளைத் தரம் பிரித்து மறுசுழற்சிக்கு உட்படுத்துதல், மழை வெள்ளக் காலங்களில் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல், நீர்நிலைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

பள்ளிகளைப் புதுப்பிக்கும் பணிகள்

பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டை - சர்மா நகரில் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி, சென்னை தொடக்கப் பள்ளிகளை ரூ.2.40 கோடிச் செலவிலும், இராயபுரம் - கல்லறைச் சாலையில், மணிகண்டன் தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளி மற்றும் சென்னை தொடக்கப் பள்ளிகளை ரூ.4.53 கோடிச் செலவிலும், அண்ணா நகர் - செனாய் நகர், சுப்பராயன் தெருவில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளி மற்றும் சென்னை தொடக்கப் பள்ளியை ரூ.4 கோடிச் செலவிலும், அடையாறு - காந்தி கிராமம், சென்னை நடுநிலைப் பள்ளியை ரூ.2.06 கோடிச் செலவிலும் புதுப்பிக்கப்பட்ட பள்ளிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

பூங்காக்கள் அமைக்கும் பணிகள்

அம்பத்தூர் - வானகரம் சாலை, அத்திப்பட்டில் உள்ள திறந்தவெளி நிலம், டி.ஐ. சைக்கிள் சாலை

இரயில் விஹார் குடியிருப்பில் திறந்தவெளி நிலம், தாமிரபரணி தெருவில் உள்ள புது செஞ்சுரி மருத்துவமனை திறந்தவெளி நிலம், எம்ரால்டு பிளாட்ஸ் மின்வாரிய அலுவலகம் அருகிலுள்ள திறந்தவெளி நிலம், நாராயணா நகர் திறந்தவெளி நிலம், டி.வி.எஸ் அவென்யு 34ஆவது தெருவிலுள்ள திறந்தவெளி நிலம், திருமங்கலம் ரோட்டின் HIG பிளாட்ஸ் திறந்தவெளி நிலம்;

சோழிங்கநல்லூர் - நூக்கம்பாளையம் இணைப்புச் சாலை (மைக்ரோ சிப் ஐ.டி நிறுவனம் அருகில்), விநாயகா நகர், ஒக்கியம் துரைப்பாக்கம் பவுண்டரி தெரு; வளசரவாக்கம் - நொளம்பூர் எஸ் & பி கார்டன் 8ஆவது தெரு, இராமாபுரத்தில் திருவள்ளுவர் சாலை; மாதவரம் – தாங்கல் கரை சாலை; மாதவரம் – மீனாம்பாள் அவென்யு (சாஸ்திரி நகர்), ஜெய் மாருதி நகர் (மேற்கு), மேட்டூர் இணைப்புச் சாலை (எஸ்.ஐ.எஸ்.) கேப்டவுன்; அடையாறு – லீலா பேலஸ், சோமர்செட், ஜெயின் சகாரீகா, ஆகிய இடங்களில் ரூ.9.12 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள 19 புதிய பூங்காக்களையும், சோழிங்கநல்லூர் – சக்தி நகரில் ரூ.81 இலட்சம் செலவில் மறுசீரமைக்கப்பட்ட ஒரு பூங்காவையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதிய விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் பணிகள்

இராயபுரம் – காத்படா பிரதான சாலையில் உள்ள திறந்தவெளி நிலம், மாதவரம் – மாதவரம் ரிங் ரோடு, எம்.ஜி.ஆர். 2ஆவது தெரு, ஆலந்தூர் – சேதுலட்சுமி அவென்யு, மதுரவாயல் – கங்கா நகரில் உள்ள காந்தி தெரு ஆகிய இடங்களில் ரூ.2.15 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 5 புதிய விளையாட்டுத் திடல்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

நகர்ப்புர ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டும் பணிகள்

கொடுங்கையூர் வார்டு 35, இராயபுரம் – ராட்லர் தெரு (பெருமாள்பேட்டை), கொண்டித்தோப்பு, திரு.வி.க. நகர் – வ.உ.சி. நகர் 1ஆவது தெருவில் புளியந்தோப்பு, அம்பத்தூர் – முகப்பேர் மேற்கு காளமேகம் சாலை ஆகிய இடங்களில் ரூ.10.72 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 5 நகர்ப்புர ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஜூலை 07 – ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த நாள்

‘ராவ் பகதூர்’

செங்கல்பட்டு மாவட்டம், கோழியாளம் கிராமத்தில் 07.07.1859 அன்று ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்தார். ரெட்டை மலை என்பது அவருடைய தந்தையின் பெயர், தந்தையின் பெயரையும் இணைத்து வைத்துக் கொண்டவர் ரெட்டைமலை சீனிவாசன், அதனால்தான் அவரை எல்லோரும் தாத்தா என்றுதான் அந்தச் சமுதாய மக்கள், பெரியவர்கள், படித்த இளைஞர்கள் எல்லாம் அழைப்பார்கள்.

தென்னிந்தியா முழுவதிலும் சுற்றுப்பயணம் செய்து மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைகளை நேரில் கண்டறிந்தார். அப்படிக் கண்டறிந்ததின் விளைவுதான் சமுதாயத் தொண்டில், பொதுத்தொண்டில் ஈடுபடத் தொடங்கினார்.

1895இல் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்து தனித்தன்மையோடு போராட வேண்டும் என்று ஒரு உணர்வை ஏற்படுத்தினார். அன்றைக்குச் சென்னையிலே இருந்த எல்ஜின் பிரபுவிடம் ஒரு குழுவாக ரெட்டைமலை சீனிவாசன் அவர்கள் தலைமையிலே சென்று “ஆதிதிராவிட மக்கள் சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட முறையிலும், அனைத்து சமூகத்தினருக்கும் சரிநிகர் சமானமாக வாழ வழி செய்துதர வேண்டும்” என்ற கோரிக்கை மனு ஒன்றைக் கொடுத்தார்கள். அதன் பின், 1903 வரை பல மாநாடுகளை நடத்தி, தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மக்களின் நலன்களைப் பாதுகாக்க ஆங்கில அரசுடன் தொடர்ந்து போராடினார்.

ராவ் பகதூர் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களுடைய புகழ் ஓங்குக, பரவுக, அவருடைய எண்ணங்கள் வென்றிடுக, அவருடைய கொள்கைகள் உறுதியோடு வென்றிடுக.

— முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்,
15.08.2000 அன்று, ரெட்டைமலை சீனிவாசன் அவர்களின்
நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டு
ஆற்றிய உரையிலிருந்து...

ரூ.314.89 கோடிச் செலவில்

மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்குதளங்கள், மீன் வளர்ப்புக் குளங்கள் மற்றும் பயிற்சி மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 15.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ.314.89 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகம், மீன் இறங்குதளங்கள், மீன் வளர்ப்புக் குளங்கள், பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடங்கள் போன்ற கட்டடங்களைத் திறந்து வைத்தார்.

மீன் வளத்தைப் பாதுகாத்தல், நிலையான மீன்பிடிப்பு, மீன் வளர்ப்பு நடைமுறைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல், மீன்பிடிப் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், மீன்பிடி இடத்திலிருந்து அதன் நுகர்வு வரை சுகாதாரமான முறையில் கையாளப்படுவதை உறுதி செய்வதற்கும் மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், கரையோர வசதிகள், மீன் சந்தைகள் போன்ற நவீன உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கடலூர் மாவட்டம், முதுநகரில் ரூ.100 கோடிச் செலவில் புனரமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகம், சி.புதுப்பேட்டையில் உள்ள மீன் இறங்குதளத்தில் ரூ.5 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம், மீன் உலர்தளம் மற்றும் சாலை வசதி, லால்பேட்டை அரசு மீன்பண்ணையில் ரூ.5 கோடிச் செலவில்

அமைக்கப்பட்டுள்ள சினைமீன் குளங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், கடலூரில் ரூ.5 கோடிச் செலவில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறைக்கான ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் மற்றும் பயிற்சி மையக் கட்டடம்;

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு, தெற்கு மீன் இறங்குதளத்தில் ரூ.20 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள டி-ஜெட்டிகள், மீன் ஏலக்கூடங்கள், ரோச்மா நகரிலுள்ள மீன் இறங்குதளத்தில் ரூ.9.91 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள கடலரிப்பைத் தடுப்பதற்கான நேர்கல் சுவர் மற்றும் மீன் ஏலக்கூடம்;

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் ரூ.120 கோடிச் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மீன்பிடித் துறைமுகம்; கன்னியாகுமரி மாவட்டம், மேலமணக்குடி கிராமத்தில் ரூ.29.50 கோடிச் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம்;

தூத்துக்குடி மாவட்டம், ஜீவா நகர் (திருச்செந்தூர்) கிராமத்தில் ரூ.3 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் இறங்குதளம், இனிகோ நகர் - மீனவர் குடியிருப்பில் ரூ.2 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் ஏலக்கூடம், சாலை வசதியுடன் கூடிய மீன் இறங்குதளம், ஆலந்தலைக் கிராமத்தில் ரூ.2 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள மீன் ஏலக்கூடம், சாலை வசதியுடன் கூடிய மீன் இறங்குதளம்;

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் ரூ.4.80 கோடிச் செலவில் கூடுதல் நீர் வழங்கல் ஏற்பாடுகளுடன் கூடிய நவீனப்படுத்தப்பட்ட மாநில மீன்விதைப் பண்ணை; ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் ரூ.3.68 கோடிச் செலவில் மேம்படுத்தப்பட்ட அரசு மீன் பண்ணை; தென்காசி மாவட்டம், ராமநதி அரசு மீன்பண்ணையில் ரூ.5 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள சினைமீன் குளங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்;

என மொத்தம், ரூ.314.89 கோடிச் செலவில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

படமும்/செய்தியும்

மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ளும்போது வீடுகளை இழந்தவர்களுக்கு வீடு ஒதுக்கீடு ஆணை

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வார்டு–116, வார்டு–114க்குட்பட்ட முப்தி அமீருல்லா தெருவில் மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளும்போது வீடுகளை இழந்த 20 நபர்களுக்குத் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை, 01.06.2023 அன்று, சென்னை முகாம் அலுவலகத்தில் வழங்கினார்.

செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூரில் ரூ.36.39 கோடிச் செலவில் காவல் அலுவலகக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் - 19.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 19.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் ரூ.36.39 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்களைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். மேலும், 3,271 இரண்டாம் நிலைக் காவலர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

காவல்துறை என்பது, குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல்துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல்நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், ரோந்து வாகனங்களைக் கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டம் – செங்கல்பட்டில் ரூ.12.25 கோடிச் செலவிலும், இராணிப்பேட்டை மாவட்டம் – இராணிப்பேட்டையில் ரூ.12.03 கோடிச் செலவிலும், திருப்பத்தூர் மாவட்டம் – திருப்பத்தூரில் ரூ.12.11 கோடிச் செலவிலும், என மொத்தம், ரூ.36.39 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

இம்மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்கள் தரை மற்றும் மூன்று தளங்களுடன் சுமார் 4,245 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறை, மாவட்டக் காவல் துணை கண்காணிப்பாளர் அறைகள்,

கட்டுப்பாட்டு அறை, பொதுமக்கள் காத்திருப்பு அறை, உணவருந்தும் கூடம், அலுவலக அறைகள், ரேடியோ ஸ்டேஷன், கூட்டரங்கம், கைரேகைப் பிரிவு, சைபர் லேப், சிசிடிவி கேமராக்கள், மின்தூக்கி, மின்னாக்கி, தீயணைப்புக் கருவிகள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் வாயிலாக இரண்டாம் நிலைக் காவலர் பணியிடத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட 2,617 ஆண்கள், 654 பெண்கள் என மொத்தம், 3,271 நபர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 நபர்களுக்கு இரண்டாம் நிலைக் காவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார். தேர்வு செய்யப்பட்ட இரண்டாம் நிலைக் காவலர்களுக்குத் திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் உள்ள நிரந்தரக் காவலர் பயிற்சிப் பள்ளிகளில் 01.06.2023 முதல் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.

ஜூலை 15 : பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த நாள்

“கருப்புக் காந்தி”

தனிமனிதன் வாழ்வல்ல உன்வாழ்வு
தன்மானச் சரித்திரத்தின் அத்தியாயம்!

குமரிமுதல் இமயம்வரை உன்கொடிபறக்கக்
கோலமிகு தமிழகத்தில் புகழ் பொறித்தாய்!

‘குணாளா! குலக்கொழுந்தே!’ என்று பண்பின்
மணாளர் எங்கள் அண்ணன் உனை அழைத்தார்!

பச்சைத் தமிழன்எனப் பகுத்தறிவுத் தந்தை
இச்சையுடன் உன் உச்சி முகர்ந்தார்!

கருப்புக் காந்தியென உன்னை- இந்தக்
கடல்சூழ் நாடு கைகூப்பித் தொழுததன்றோ!
வாழ்க்கையின் ஓரத்தில் நீ எம்மிடம்வாஞ்சையும் காட்டினாய்- உன்
வாழ்வையே ஒரு பாடமாய் அனைவருக்கும் நிலைநாட்டினாய்!
இன்றைக்கு உன்றன் பிறந்தநாள்;
என்றைக்கும் அது சிறந்தநாள்!

- முத்தமிழறிஞர் டாக்டர் **கலைஞர்** அவர்கள்,
15.07.1976 அன்று, பெருந்தலைவர் காமராசர்
பிறந்த நாளன்று எழுதிய கவிதை.

சென்னை, கொளத்தூரில்

✱ ரூ.116.48 கோடியில் புதிய திட்டப் பணிகள்
✱ ரூ.61.98 கோடியில் “மேயர் சிட்டிபாபு மேம்பாலம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 13.05.2023 அன்று, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகரில் ரூ.110.92 கோடி மதிப்பீட்டில் புதிய துணை மின்நிலையம் அமைக்கும் பணி, சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் பழைய குடிநீர்க் குழாயை மாற்றிப் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிகள், பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.96.16 இலட்சம் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகள் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, வில்லிவாக்கத்தில் ரூ.61.98 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள மேயர் சிட்டிபாபு மேம்பாலத்தைத் திறந்து வைத்தார்.

எரிசக்தித் துறை சார்பில் கணேஷ் நகரில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்

பெருநகரச் சென்னை மாநகராட்சியில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கணேஷ் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகள் மிக வேகமாக வளர்ந்துவரும் குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்த முக்கியப் பகுதியாக விளங்குகிறது. இப்பகுதியின் வளர்ச்சிக்கு உதவிடும் வகையில், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தால் கணேஷ் நகரில் ரூ.110.92 கோடி மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்படவுள்ள 230/33 கிலோ வோல்ட் வளிமகாப்பு துணை மின் நிலையத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்து அடிக்கல் நாட்டினார் - 13.05.2023

இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதன் மூலம் கொளத்தூர், பெரியார் நகர், அன்னை நகர், கணேஷ் நகர், நேர்மை நகர் ஆகிய பகுதிகளுக்கு மின் கட்டமைப்பை வலுப்படுத்தவும், அதிகரித்து வரும் மின் தேவையைச் சீராக வழங்கவும் இயலும்.

இதன்மூலம் 3,19,000 மின் நுகர்வோர்கள் பயன்பெறுவார்கள்.

சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெங்கடேசன் சாலை, அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழைய குடிநீர்க் குழாயை மாற்றி ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; கார்த்திகேயன் சாலை, அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழைய குடிநீர்க் குழாயை மாற்றி ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; மாதவரம் நெடுஞ்சாலை, அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழுதடைந்த பழைய குடிநீர்க் குழாயை மாற்றி ரூ.1.94 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி; ராஜா தெரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்களில் பழுதடைந்த பழைய குடிநீர்க் குழாயை மாற்றி ரூ.39.91 இலட்சம் மதிப்பீட்டில் புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணி என மொத்தம் ரூ.4.60 கோடி மதிப்பீட்டிலான புதிய குடிநீர்க் குழாய் பதிக்கும் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜி.கே.எம். காலனி 34ஆவது தெருவில் உள்ள காலி நிலத்தில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையக் கட்டடம் கட்டும் பணி; ஜி.கே.எம்.காலனி, ஜம்புலிங்கம் பிரதானச் சாலையில் 33ஆவது தெரு சந்திப்பில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் 16ஆம் நாள் காரிய கூடத்தில் கூடுதலாக உணவு அருந்தும் கூடம் கட்டும் பணி; ஜி.கே.எம். காலனி, ஜம்புலிங்கம் பிரதானச் சாலையில் அமைந்துள்ள மின்சார மயான பூமியை ரூ.41.16 இலட்சம் மதிப்பீட்டில் திரவ பெட்ரோலிய வாயு மயான பூமியாக மாற்றும் பணி என மொத்தம் ரூ.96.16 இலட்சம் மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

வில்லிவாக்கம் இரயில் நிலையம் அருகில் கட்டப்பட்டுள்ள "மேயர் சிட்டிபாபு மேம்பாலம்" திறந்து வைத்தல்

கொளத்தூர் மற்றும் வில்லிவாக்கம் பகுதியில் வசிக்கும் மக்கள் சந்திக்கடவு எண்.1 அடிக்கடி மூடப்படுவதால் அதனைக் கடப்பதற்கு மிகவும் சிரமப்பட்டு வந்தனர். எனவே, பொதுமக்களின் சிரமத்தை நீக்கும் வகையில் வில்லிவாக்கம் சந்திக்கடவு எண்.1-க்கு மாற்றாக வடக்கில் கொளத்தூர் பிரதானச் சாலையையும், தெற்கில் ஐ.சி.எப். சாலையையும் இணைக்கும் வண்ணம் ரூ.61.98 கோடிச் செலவில் 500 மீட்டர் நீளம் மற்றும் 8.50 மீட்டர் அகலத்தில் கட்டப்பட்டுள்ள இருவழி மேம்பாலத்திற்கு "மேயர் சிட்டிபாபு மேம்பாலம்" எனப் பெயர் சூட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேயர் சிட்டிபாபு என்று அழைக்கப்படும் சொக்கலிங்க சிட்டிபாபு அவர்கள் 1967 மற்றும் 1971ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகச் செங்கல்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னை மாநகராட்சிக்கு முதன்முதலில் 1958ஆம் ஆண்டு மாமன்ற உறுப்பினராகவும், பின்னர் 1964ஆம் ஆண்டு சென்னை மேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியினைச் சிறப்பாக மேற்கொண்டார். மேயர் சிட்டிபாபு அவர்கள் 1976ஆம் ஆண்டு மிசா சட்டத்தின்படி கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு, அங்கு ஏற்பட்ட காயங்களால் 1977ஆம் ஆண்டு உயிரிழந்தார். மறைந்த மேயர் சிட்டிபாபு அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் வில்லிவாக்கம் அருகில் கிழக்குச் சந்திக்கடவு சாலையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலத்திற்கு "மேயர் சிட்டிபாபு மேம்பாலம்" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இம்மேம்பாலமானது, கொளத்தூர் பகுதியை அண்ணாநகர் பகுதியுடன் இணைக்கும் முக்கிய இணைப்புப் பாலமாகும். இம்மேம்பாலத்தினால் கொளத்தூர் ஜி.கே.எம். காலனி, பெரியார் நகர், கொரட்டூர் பாடி, ஐ.சி.எப். அண்ணாநகர், பெரம்பூர் பகுதிகளைச் சார்ந்த சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கௌதமபுரம் திட்டப்பகுதியில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட 51 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வீடு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.

முன்னதாக, ரூ.8.90 கோடி மதிப்பீட்டில் கொளத்தூர், வீனஸ் நகர், ஜெயந்தி நகர் பகுதிகளில் விடுபட்ட தெருக்களுக்குப் பாதாளக் குழாய் மூலம் கழிவுநீர் அகற்றும் திட்டம், உந்து நிலையம் அமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்குரிய வகையில் அனைவருக்குமான முதலமைச்சர் என்கின்ற அந்தப் பொறுப்பில் நான் இருந்தாலும், நான் முதலமைச்சராக அந்தப் பொறுப்புக்கு வருவதற்குக் காரணமாக இருந்த கொளத்தூர் தொகுதி மக்களாகிய நீங்கள் அளித்த மகத்தான வெற்றிதான். ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, ஹாட்ரிக் அடிக்கக்கூடிய வகையில் மூன்று முறை தொடர்ச்சியாக, என்னை வெற்றி பெற வைத்திருக்கக்கூடியவர்கள் நீங்கள் தான். அதில் இரண்டு முறை எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றேன். அதைத் தொடர்ந்து என் மீது நீங்கள் வைத்த நம்பிக்கையின் காரணமாக,

மீண்டும் மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுத்து என்னை முதலமைச்சராகக்கூடிய வாய்ப்பையும் உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தமிழ்நாட்டில் உள்ள பல மாவட்டங்களுக்குச் சென்று பல பணிகளைச் செய்து, ஆய்வுகளைச் செய்து, திட்டங்களைத் தொடங்கி வைத்து, அந்தப் பணிகளை எல்லாம் தொடர்ந்துநான் ஆய்வுசெய்து கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அதை நீங்கள் தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள், படித்துக் கொண்டிருக்கிறீர்கள். கொளத்தூர் தொகுதிக்கு வரும்போது, கடமைகளை நிறைவு செய்துவிட்டு, ஒரு வீட்டிற்குள்ளே நுழைவதுபோல எனது வீட்டிற்குள்ளே நுழைவதுபோல, நிம்மதியை, ஒரு மனநிறைவை, மகிழ்ச்சியை, பூரிப்பை, புலங்காகித உணர்வை என்னையும் அறியாமல் நான் பெற்றுக்கொண்டிருக்கிறேன்.

எங்களுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று என்னிடம் உரிமையோடு கேட்கக்கூடியவர்கள் இந்த கொளத்தூர் தொகுதியில் இருக்கக்கூடிய மக்கள். அந்த உரிமையின் அடையாளமாகத்தான் கொளத்தூர் தொகுதியில் வரிசையாகப் பல திட்டங்களை நான் தொடங்கி வைத்திருக்கிறேன்.

அதில் குறிப்பாக, போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கக்கூடிய வகையில், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.61.98 கோடித் திட்ட மதிப்பீட்டிலான இந்த மேம்பாலம் மேயர் சிட்டிபாபு அவர்கள் பெயரால் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது.

இது கொளத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை. முதன்முதலாகக் கொளத்தூர் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்தில், இந்தக் கோரிக்கை வலுவாக, அழுத்தமாக என்னிடத்தில் எடுத்து வைக்கப்பட்டது, என்னுடைய கவனத்திற்கு வந்தது. காரணம், இரயில்வே கேட் மூடப்படுவதால், 15 நிமிடத்திற்கு ஒரு முறை போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுவிடுகிறது. அதனால், மக்களுடைய பணிகள் பாதிக்கப்படுகின்றன. மன உளைச்சல் ஏற்படுகிறது. இதையெல்லாம் அடிப்படையாக வைத்து, 2014ஆம் ஆண்டு, அதாவது ஆதாரத்தோடு சொல்ல வேண்டுமென்றால், 30.11.2014 அன்று தெற்கு இரயில்வே பொது மேலாளர் அவர்களுக்கு எல்சி-1 கேட் மேம்பாலம் அமைப்பது தொடர்பாகக் கடிதம் அனுப்பப்பட்டது. அதற்குப் பிறகு தொடர்ச்சியாக, 2015ஆம் ஆண்டிலும், அது வலியுறுத்தப்பட்டது. மேலும், மேலும் தொடர்ந்து அதை நாங்கள் குறிப்பிட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், உடனடியாகச் சென்னை மாநகராட்சியின் அனுமதி அப்போது கிடைக்கவில்லை என்ற பதில்

எங்களுக்குத் தெற்கு இரயில்வே பொது மேலாளரிடமிருந்து வந்தது. 2015இல் யாருடைய ஆட்சி என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, அதைப் பற்றியெல்லாம் நான் ஒரு நல்ல நிகழ்ச்சியில் விமர்சிக்க விரும்பவில்லை.

ஆனால், ஆட்சி யாருடையதாக இருந்தாலும், மக்களுக்குப் பாடுபடும் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நாங்கள் என்கிற காரணத்தால், அதிலும் குறிப்பாக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள் ஆளும் கட்சியாக இல்லை, அதற்காக விட்டுவிடாமல், எதிர்க்கட்சியாக இருந்த அந்த நேரத்தில் அன்றைய இரயில்வேத் துறை அமைச்சராக இருந்தவர் திரு. சுரேஷ்பிரபு. அப்போதெல்லாம் இரயில்வே பட்ஜெட் உண்டு. அதனுடைய விவாதமும் நாடாளுமன்றத்தில் உண்டு. அந்தச் சூழ்நிலையில், அந்தத் துறையினுடைய அமைச்சர் திரு. சுரேஷ்பிரபு அவர்களிடத்தில் நேரடியாகச் சென்று நான் வலியுறுத்திச் சொன்னேன். அதற்குப் பிறகு என்னுடைய கோரிக்கையை உணர்ந்து, நியாயம் என்பதைத் தெரிந்து, புரிந்து அவர் நான் எடுத்து வைத்த வாதத்தையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அப்போது நடைபெற்ற இரயில்வே பட்ஜெட்டில் ரூ.7.35 கோடி நிதியை ஒதுக்கி பட்ஜெட்டில் அறிவித்தார்கள். அது எல்லாம் ரெக்கார்டில் இருக்கிறது.

உங்களின் சட்டமன்ற உறுப்பினராக நான் எடுத்த முயற்சிகளைப் பாராட்டி இப்படிப்பட்ட பணிகளைச் சிறப்பாகச் செய்திருக்கிறீர்கள் என்று சொல்லி, இராஜாஜி நகர் நல்வாழ்வுச் சங்கத்தினர், மகிழ்ச்சியை வெளிப்படுத்தி எனக்கு நன்றி கடிதத்தைக்கூட என்னுடைய சட்டமன்ற உறுப்பினருடைய அலுவலகத்திற்கு 06.03.2015 அன்று அனுப்பி வைத்திருந்தார்கள்.

என்னைப் பொறுத்தவரைக்கும், நான் தேர்தல் நேரத்தில் மட்டும் உங்களைச் சந்திக்கக்கூடியவன் அல்ல. அப்போது மட்டும் உங்களையெல்லாம் சந்தித்துப் பேசுபவனல்ல. நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். எதிர்க்கட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில், “பேசலாம் வாங்க” என்ற தலைப்பில் நம்முடைய தொகுதி முழுவதும், அனைத்து வட்டங்களிலும், தொகுதி மக்களுடையத் தேவைகள் என்ன? பிரச்சினைகள் என்ன? என்பதை நேரடியாக மக்களிடத்தில் கேட்க வேண்டும் என்று முடிவு செய்து, “பேசலாம் வாங்க” என்ற தலைப்பில் நிகழ்ச்சியை நடத்தினோம். அதையெல்லாம், அரசு அதிகாரிகளிடம் கொண்டு சென்று முடிந்த அளவிற்கு எல்லாவற்றையும் நிறைவேற்றும் வாய்ப்பில்லை. அதில் எதை, எதையெல்லாம் நிறைவேற்ற முடியுமோ அந்த அதிகாரிகளைப் பயன்படுத்தி அந்த நிகழ்ச்சிகளை நாம் நிறைவேற்றினோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

2015 ஏப்ரல் 19 அன்றும், ஏப்ரல் 25 அன்றும் நடந்த "பேசலாம் வாங்க" நிகழ்வின்போது, எல்.சி.1 பாலப்பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்தார்கள். 30.04.2015 அன்று தெற்கு இரயில்வே பொது மேலாளர் திரு. அசோக் அகர்வால் அவர்களுக்கு மீண்டும் நினைவூட்டுக் கடிதத்தை அனுப்பி வைத்தோம். அதன்பிறகு இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பொதுநலச் சங்கத்தினர் சார்பிலும் கடிதங்கள் எல்லாம் இரயில்வேத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இத்தனை முயற்சிகளுக்குப் பிறகு, 14.09.2017 அன்று தெற்கு இரயில்வே பொதுமேலாளர் அனுப்பியக் கடிதம் மூலமாக எல்.சி.1 இரயில்வே மேம்பாலத்திற்கான சென்னை மாநகராட்சியின் ஒப்புகை அளிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டன. 2017இல் அதற்குரிய அனுமதி கிடைத்தது.

இந்தத் தொகுதியினுடைய முக்கியமானத் தேவையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக 2014இல் ஆய்வுப் பணியை மேற்கொண்டோம். 2017இல் ஆய்வுப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டோம்.

அதற்குப் பிறகு இரயில்வே துறையும், சென்னை மாநகராட்சியும் இணைந்து 50 சதவிகிதம், 50 சதவிகிதம் இந்தச் செலவினைப் பகிர்ந்துகொண்டு, மேற்கொள்ளும் இந்த மேம்பாலப் பணிக்கு 31.10.2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. எப்போது தொடங்கி, எப்போது வருகிறது பாருங்கள். ஆனாலும் பணிகள் விரைவாக நடைபெற்றனவா? இல்லை, தாமதமாகத்தான் நடந்து கொண்டிருந்தது.

அதற்குப் பின்னால், 2021இல் சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய கழகம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்று, நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றிருக்கிறது. நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, இந்தக் கனவு, இந்தப் பாலம் கட்டக்கூடிய கனவு விரைந்து நிறைவேற்றிட வேண்டும் என்பதில் அக்கறை செலுத்தி, பணிகளை வேகப்படுத்தியதன் காரணமாக, மேம்பாலப் பணிகள் நிறைவுக் கட்டத்திற்கு வந்தது. கடந்த மார்ச் மாதம் 8ஆம் தேதியன்று கூட மேம்பாலப் பணிகளை நான் ஆய்வு செய்தேன்.

உங்களின் நீண்டகால கனவு, இன்று நனவாகியிருக்கிறது. இது கொளத்தூர் தொகுதி மக்களுக்கு மட்டுமல்ல, அருகில் இருக்கக்கூடிய வில்லிவாக்கம் தொகுதி மக்களுக்கும் பெரும் பயனளிக்கக்கூடிய வகையில் இந்த மேம்பாலம் அமைந்திருக்கிறது. இந்த மேம்பாலத்திற்கு என்ன பெயர் சூட்டலாம் என்று நம்முடைய அமைச்சர் திரு. சேகர்பாபு அவர்களும், நம்முடைய அமைச்சர் திரு. நேரு அவர்களும் என்னிடத்தில் கேட்ட நேரத்தில், உடனே சொன்னேன். மேயர் சிட்டிபாபு பெயர் சூட்டவேண்டும் என்று நான் சொன்னேன். பெரம்பூர் மேம்பாலம் வரலாறு எல்லாம் உங்களுக்குத் தெரியும். நான் மேயராக இருந்தபோது 10 பாலங்களைக் கட்டவேண்டும் என்று சொல்லி, இங்கே திரு. நேரு அவர்கள் பேசுகிறபோது சொன்னார். 10 பாலங்களைக் கட்டுவதாக முடிவு செய்து, 9 பாலங்களைக் கட்டி முடித்தோம். அதுவும் குறித்த நேரத்திற்கு முன்பே. மிச்சப்படுத்திய தொகையைக் கூட கொஞ்சம் குறைத்துச் சொல்லிவிட்டார். ரூ.9 கோடி என்று சொன்னார். ரூ.94 கோடி மதிப்பிலான பாலங்களைக் கட்ட ரூ.33 கோடி மிச்சப்படுத்தியிருக்கிறோம். ஒரு வருடத்தில் கட்டவேண்டிய பாலத்தை 10 மாதத்தில் கட்டிமுடித்தோம்.

இன்றைக்குச் சென்னை மாநகரத்தில், அந்தப் பாலங்கள் எல்லாம் இல்லையென்றால், பாலங்கள் இருந்தே போக்குவரத்து நெரிசல் இருக்கிறது என்றால், பாலங்கள் இல்லையென்றால் என்னென்ன நிலையில் இருக்கும், சிந்தித்துப் பாருங்கள். முதன்முதலில் சென்னையில், மேம்பாலம் என்று கட்டியதே அண்ணா மேம்பாலம்தான், தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது. அந்த அண்ணா மேம்பாலம் இல்லையென்றால், என்ன நிலை? அண்ணா இல்லையென்றாலே நம்முடைய நிலை வேறு நிலையில் போயிருக்கும். அண்ணா மேம்பாலம் இல்லையென்றால் என்ன நிலை அதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த 10 பாலங்களை நான் மேயராக இருந்தபோது கட்டிய நேரத்தில், அதில் ஒரு தொழில்நுட்பப் பிரச்சினை வந்தது, எதில் பெரம்பூர் மேம்பாலத்தில். இங்கே இருக்கக்கூடிய திரு. ரங்கநாதனுக்கு நன்றாகத் தெரியும். நம்முடைய மத்திய அமைச்சராக இருந்த, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த மதிப்பிற்குரிய மறைந்த நம்முடைய முரசொலி மாறன் அவர்கள், எல்லாவற்றையும் கட்டிவிட்டீர்கள், இதைக் கட்டவேண்டும், கட்டவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். என்ன தொழில்நுட்பப் பிரச்சினைகள் இருந்தாலும் பரவாயில்லை, அது சரி செய்யவேண்டும், என்று சொல்லி, அவரே டெல்லிக்குப் பலமுறை சென்று, அங்கிருக்கக்கூடிய அதிகாரிகளிடத்தில் கலந்து பேசி, ஆய்வு நடத்தி, அதற்குப் பிறகு ஆட்சி போய்விட்டது. வேறு ஆட்சி வந்தது. அம்மையார் ஜெயலலிதா தலைமையில் ஆட்சி வந்தது. ஆட்சிக்கு வந்த அவர்கள் கட்டி முடித்திருந்தால் 2 மாதத்திலோ, 3 மாதத்திலோ கட்டி முடித்திருக்கலாம். கவலைப்படவில்லை. அதை விட்டுவிட்டார்கள். நம் மீது வழக்கு போட்டார்கள். அந்தப் பாலத்தில் ஊழல் நடந்தது. வழக்குப் போட்டார்களே தவிர, இன்னும், FIRகூட போடவில்லை. அதுதான் அந்த வழக்கு. எதற்காகச் சொல்கிறேன் என்றால், அந்தப் பாலங்கள் கட்டுகிற நேரத்தில், அந்த 10ஆவது பாலம் கட்டுவதில் ஏற்பட்ட சிக்கலை நம்முடைய மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்கள் தான் அதைத் தீர்த்து வைத்தார். அதற்குப் பிறகு, அந்த அடிக்கல் நாட்டு விழா எங்கே நடந்தது தெரியுமா? அந்த பெரம்பூர் பாலத்துக்கு அருகிலேதான் நடந்தது. முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர்தான் அடிக்கல் நாட்டி வைத்தார். 9 பாலங்களைத் திறந்து வைத்தார்.

அந்தப் பாலத்தில் மட்டும் தொழில்நுட்பப் பிரச்சினை ஏற்பட்ட காரணத்தினால்,காலம் தாழ்ந்து போனது. பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் செய்து முடித்திருக்க வேண்டும், கவலைப்படவில்லை. அதற்குப் பிறகு மீண்டும் நாம் ஆட்சிக்கு வந்து, யார் அடிக்கல் நாட்டி வைத்தார்களோ, அதே முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்தப் பாலத்தைத் திறந்து வைத்தார். அதுதான் வரலாறு.

அப்போது மேடையில் முதலமைச்சர் கலைஞரிடத்தில், மேயராக இருந்த நான் இந்த விஷயத்தை, இந்த வரலாறையெல்லாம் எடுத்துச் சொன்னேன். மறைந்த மாறன் அவர்கள்தான் இந்தப் பாலம் வருவதற்குக் காரணமாக இருந்தார் என்று சொன்னவுடன், அந்தப் பாலத்திற்குக்கீழே இருக்கக்கூடிய பூங்காவிற்கு முரசொலி மாறன் பூங்கா என்று பெயர் சூட்டினார். மேடையிலே சொன்னார். முரசொலி மாறன் அவர்கள் பாலம் வருவதற்குக் காரணமாக இருந்தாரோ, அதுமாதிரி, இந்தப் பாலம் வருவதற்குக் காரணமாக இருந்த இன்றைக்கு நான் உயிரோடு, இந்த மேடையில்

"மேயர் சிட்டிபாபு மேம்பாலம்"

நின்று பேசுகிற வாய்ப்பு, முதலமைச்சராக இருந்து, மக்களுக்கு ஆற்றுகிற அந்தக் கடமை, இந்த வாய்ப்பு எல்லாம் எனக்கு இருக்கிறது என்றால் அதற்கு முழுக் காரணம் அண்ணன் சிட்டிபாபுதான். நான் அதைத்தான் நினைத்துப் பார்த்து உடனே அவர் பெயரைச் சொன்னேன். இன்றைக்கு அவருடைய பெயரால், மேயர் சிட்டிபாபு என்ற அந்தப் பெயரில் இந்தப் பாலம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாலத்திற்கும் பெயர் வைப்பது உண்டு. எத்தனையோப் பாலங்களை பார்க்கிறோம். அதுமாதிரி ஒரு தியாக மறவராக, தியாகச் செம்மலாக, எமர்ஜென்சிக் காலத்தில் மிசா சிறையில் நான், முரசொலி மாறன் அவர்கள், மற்றவர்களெல்லாம் அடைக்கப்பட்டிருந்தபோது எங்களோடு அடைபட்டிருந்தவர் ஓர் ஆண்டுக் காலம் அண்ணன் சிட்டிபாபு அவர்கள். என் மீது விழ இருந்த அடிகளை அவர் மட்டும் குறுக்கே பாய்ந்து தடுத்திருக்காவிட்டால், நான் இல்லை. நீங்கள் அந்தக் கண்காட்சியெல்லாம் பார்த்திருப்பீர்கள். அந்த நன்றி உணர்வோடுதான் இன்றைக்கு உங்கள் முன்னால் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் இருக்கிறேன் என்று சொன்னால், அந்த நன்றி உணர்வு பெருக்கோடுதான் இந்தப் பாலத்திற்கு மேயர் சிட்டிபாபு என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது தவிர வேறு அல்ல.

ஏறத்தாழ 10 வருடங்களாக இந்தப் பாலத்திற்காக நாம் காத்துக் கொண்டிருந்தோம். நாம் எதிர்பார்த்திருந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேறியிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு அமையும்போதுதான் இத்தகைய திட்டங்கள் விரைந்து நிறைவேற்றப்படும் என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 1996இல் முதலமைச்சராக இருந்த நேரத்தில் சென்னை மாநகரத்தினுடைய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராக நான் பொறுப்பேற்றபோது, பல உறுதிமொழிகளை அதிலும் குறிப்பாகச் சென்னையைச் சிங்காரச் சென்னையாக மாற்றுவதற்கான உறுதிமொழி எடுத்தேன். அதையெல்லாம் எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டது. ஆனால், பின்னால் வந்தவர்கள் எப்படிச் சீரழித்தார்கள் என்பது எல்லாம் உங்களுக்குத் தெரியும்.

அதைத் தொடர்ந்து 2006-2011 கழக ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று நான் ஆற்றியிருக்கக்கூடியப் பணிகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். சிட்டிபாபு பெயரில் இன்றைக்கு இந்தப் பாலம் அமைந்திருப்பது என்பது அது மக்களுக்குப் பயன்படப்போகிறது என்பதை எண்ணிப்பார்த்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இன்னொரு செய்தியும் மறந்திருக்க மாட்டீர்கள், 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தை மறந்திருக்க மாட்டீர்கள். செம்பரம்பாக்கம் ஏரித் தண்ணீரை உரிய முறையில் திறந்துவிடாத காரணத்தினால், யாருடைய உத்தரவுக்காகக் காத்திருந்த காரணத்தினால், அந்த உத்தரவைப் பெறமுடியாத சூழ்நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்த காரணத்தினால், அது இயற்கை வெள்ளமில்லை, செயற்கை வெள்ளமே ஏற்பட்டது நம்முடைய சென்னை மாநகரத்தில். அப்போது ஏற்பட்ட உயிரிழப்புகள், பொருட்சேதங்கள், மக்கள் பட்ட துன்பங்கள் இதையெல்லாம் எண்ணிப்பார்த்துதான் ஸ்மார்ட் சிட்டி என்ற பெயரில் நடந்திருக்கக்கூடிய ஊழல்கள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அதனால் சென்னையின் பல பகுதிகள் மழையில் மிதந்தது. ஆனால், இப்போது கடந்த இரண்டாண்டு காலமாகத் திராவிட மாடல் ஆட்சியில் சென்னை எப்படி மாறியிருக்கிறது என்பதை நீங்கள் கண்கூடாகப் பார்க்கிறீர்கள். அந்தப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இன்னும், சில பணிகள் மீதம் இருக்கின்றன. அதையும் உடனடியாக நம்முடைய அமைச்சர் அவர்களும், மாநகராட்சி அதிகாரிகளும், மேயர், துணை மேயர் அவர்களும், மாநகராட்சி கவுன்சிலர்களும், வார்டு குழுத் தலைவர்களும் ஒருங்கிணைந்து அந்தப் பணிகளை எல்லாம் இன்னும் வேகப்படுத்தி, விரைவில் முடித்துச் சென்னை மாநகர மக்கள் எந்த மழை வந்தாலும், எந்தப் புயல் வந்தாலும், எங்களுக்குக் கவலையில்லை, நாங்கள் தைரியமாக இருக்கிறோம், திராவிட மாடல் ஆட்சி நடக்கிறது என்ற நம்பிக்கையை அவர்களுக்குத் தரவேண்டும். அதற்குரிய உறுதிமொழியை எடுத்துக் கொண்டு நீங்கள் எல்லாம் பணியாற்றிடவேண்டும்.

தலைவர் கலைஞர் அவர்கள், நான் மேயராகப் பொறுப்பேற்றபோது, ஒரு கருத்தைச் சொன்னார். நான் மேயர் பதவி ஏற்கப்போகிறேன் என்று தலைவரிடத்தில் சொன்னபோது, ஒரு திருத்தம், மேயர் பதவி என்று சொல்லாதே, மேயர் பொறுப்பென்று சொல் என்று சொன்னார்.

சொல்லிவிட்டுச் சொன்னார், ஏன் பொறுப்பு என்று சொன்னேன் என்றால், மக்கள் உனக்குத் தந்திருப்பது பதவி அல்ல, பொறுப்பு. எனவே, பொறுப்போடு இருந்து உன் கடமையை நிறைவேற்றிட வேண்டும் என்று அறிவுரையாக எனக்கு வழங்கிய அந்த வார்த்தைதான் எனக்கு எப்போதும் நினைவில் இருக்கிறது. நான் அதைத்தான் தொடர்ந்து அமைச்சர்களிடத்திலும், அதிகாரிகளிடத்திலும், அதேபோல மக்களுக்கு பணியாற்றக்கூடிய மக்கள் பிரதிநிதிகள், மேயர்களாக இருந்தாலும், துணை மேயராக இருந்தாலும், கவுன்சிலர்களாக இருந்தாலும், மக்களுக்கு ஆற்றக்கூடிய எந்தப் பொறுப்பில் இருக்கக்கூடியவர்களுக்கும் அதைத்தான் தொடர்ந்து நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஆகவேதான் இந்த நிகழ்ச்சியிலும் இதை எடுத்துச் சொல்கிறேன்.

இந்தப் பாலத்தை 10 வருடமாக கஷ்டப்பட்டு கட்டிமுடித்தோம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு, அப்படிப்பட்ட இப்பாலத்தை இப்போது எப்படிக் கம்பீரமாக அழகோடு காட்சியளிக்கிறதோ, தொடர்ந்து கடைசிவரையில், மக்கள் அதை நிம்மதியாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் இதே அழகோடு, பொலிவோடு இருக்க வேண்டும். அதற்கு இந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் ஒத்துழைக்க வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்து வைத்து, உங்கள் அத்தனை பேருக்கும் இந்தப் பாலத்தைக் காலம் கடந்து கட்டப்பட்டிருந்தாலும், ஒரு சினிமாவில் சூப்பர் ஸ்டார் சொல்லுவதைப்போல, லேட்டாக வந்தாலும் லேட்டஸ்ட்-ஆக வந்திருக்கிறது. அதுமாதிரி கொஞ்சம் லேட்டாக இருந்தாலும், லேட்டஸ்ட்-ஆக நீங்கள் பயன்படுத்தப் போகிறீர்கள். அதை நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். திராவிட மாடல் அரசு என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

ஜல்லிக்கட்டு போட்டிகள் நடத்த தடையில்லை என்ற தீர்ப்பு தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது

தமிழர்தம் வீரத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தும் விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தத் தடையில்லை என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்திருப்பது தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது!

தமிழ்நாடு அரசு கொண்டு வந்த அவசரச் சட்டம் செல்லும் என்பதை நிலைநாட்ட அரசு நடத்திய சட்டப் போராட்டத்துக்கு மகத்தான வெற்றி கிடைத்துள்ளது. அலங்காநல்லூரில் மாபெரும் ஜல்லிக்கட்டு மைதானத்தை நாம் கட்டி வருகிறோம். வரும் ஜனவரி மாதம் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளில் ஜல்லிக்கட்டு வெற்றி விழாவைக் கொண்டாடுவோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 18.05.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

ரூ.92.50 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டினார் - 19.05.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 19.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், ரூ.92.50 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைத்திட அடிக்கல் நாட்டினார்.

எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய அதீத வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு 1996-2001ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் சென்னையில் டைடல் பூங்காவை நிறுவினார். இது நம் மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத் துறையில் மாபெரும் வளர்ச்சி ஏற்பட வித்திட்டது.

'பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி, சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி' என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களது எண்ணத்திற்கேற்ப, தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பச் சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், தற்போது இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடிப் பரப்பளவில் ஏழு மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.05.2023 அன்று அடிக்கல் நாட்டினார்.

மினி டைடல் பூங்கா, தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டான்-II பகுதியில் 4.16 ஏக்கர் நிலப்பரப்பளவில் ரூ.32.50 கோடி மதிப்பீட்டில் 63,100 சதுர அடி பரப்பளவில் தரை, 4 தளங்கள் கொண்ட மினி டைடல் பூங்கா கட்டப்படவுள்ளது.

மினி டைடல் பூங்கா, தஞ்சாவூர்

தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டியில் 3.40 ஏக்கர் நிலப்பரப்பளவில், ரூ.30.50 கோடி மதிப்பீட்டில், 55,000 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் 3 தளங்கள் கொண்ட மினி டைடல் பூங்கா கட்டப்படவுள்ளது.

மினி டைடல் பூங்கா, சேலம்

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஆணைகௌண்டன்பட்டி, கருப்பூர் பகுதிகளை உள்ளடங்கிய நிலப்பரப்பளவில், ரூ.29.50 கோடி மதிப்பீட்டில், 55,000 சதுர அடி பரப்பளவில், தரை, 3 தளங்கள் கொண்ட மினி டைடல் பூங்கா கட்டப்படவுள்ளது.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம், தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்கள் மற்றும் அவற்றின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வசித்துவரும் ஆயிரக்கணக்கானப் படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு அவர்கள் வசித்துவரும் மாவட்டங்களிலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலை பெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். மேலும், இவை, அப்பகுதிகள் சமூக-பொருளாதார வளர்ச்சியடையவும், ஒட்டுமொத்தமாக மாநிலத்தின் வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

பகுப்பாய்வு செய்யப்பட்ட “செழிப்பு” இயற்கை உரம் விற்பனை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 12.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைக்கான “விரைவு துலங்கல் குறியீடு - QR Code” மென்பொருள் செயலியைத் தொடங்கி வைத்தார். மேலும், ஈரக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்குச் “செழிப்பு” எனப் பெயரிட்டு விற்பனைக்காக அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு அரசு நிருவாகச் செயல்பாடுகளில் டிஜிட்டல் மயமாக்குதல் என்பது வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் துறை தோறும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசு நடவடிக்கையில் நம்பகத் தன்மையை அதிகரிக்கும் விதத்தில் டிஜிட்டல் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கானச் சேவைகளை உறுதிப்படுத்திடவும், வெளிப்படைத் தன்மையோடு தகவல் பரிமாற்றம் செய்து அரசின் நிருவாகச் செயல்பாடுகளின் விவரங்களையும் சேவைகளையும் மக்கள் அடைந்திடவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"சீர்மிகு ஆளுமை" திட்டத்தின்கீழ் "விரைவு துலங்கல் குறியீடு – QR Code" மென்பொருள் செயலி தொடங்கி வைத்தல்

2022-2023ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் பணி மற்றும் சேவைகளை நிகர்நிலையில் கண்காணிக்கவும், பணிகள் குறித்த விவரங்களை மக்கள் தெரிந்துகொள்ளவும், பணி மற்றும் சேவை குறித்த மக்களின் கருத்துக்களை விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) போன்ற செயலிகள் மூலம், நிகர்நிலையில் தெரிவித்திடவும் சிறப்பான சீர்மிகு ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் - 12.05.2023

அந்த அறிவிப்பின்படி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தற்போது வலைச்செயலிமூலம்நகரில்உள்ளகட்டமைப்புக்களை உள்ளடக்கிய வரைபடம் தயாரிக்கப்பட்டு, தகவல் தொழில்நுட்ப முறையில் விரைவுத் துலங்கல் குறியீடு (QR Code) ஒவ்வொரு அரசு சார் கட்டமைப்புக்கள், தனியார் வரிவிதிப்புக் கட்டமைப்பிற்கும் உருவாக்கியுள்ளது.மாண்புமிகுதமிழ்நாடுமுதலமைச்சர் அவர்கள் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைக்கான “விரைவுத் துலங்கல் குறியீடு - QR Code” மென்பொருள் செயலியைத் தொடங்கி வைத்தார்.

இந்த விரைவுத் துலங்கல் குறியீடு ஒவ்வொரு கட்டமைப்புக்களின் முகப்புகளிலும் பயன்படுத்தத்தக்க வகையில் உள்ளாட்சி ஊழியர்களால் ஒட்டப்படும். இந்த விரைவுத் துலங்கல் குறியீடு மூலம் பொதுமக்கள் உள்ளாட்சி சேவைகளின் மீதான நிறைகுறைகளைத் தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால் உள்ளாட்சி ஊழியர்கள் தங்களதுப் பணியினை மேம்படுத்தி மக்களுக்குத் திருப்திகரமான சேவைகளைச் செய்திட வழிவகுக்கும்.

மேலும், சொத்து வரி உள்ளிட்ட அனைத்து வரி நிலுவைகளைப் பற்றிய அறிவிப்பைப் பெற்று செயலி மூலமே தொகையைச் செலுத்தலாம். பிறப்பு, இறப்பையும், வீட்டிலிருந்தவாறே விரைவுத் துலங்கல் குறியீடு ஸ்கேன் செய்து பதிவு செய்யலாம். இவ்வாறு பெறப்படும் புகார் / கோரிக்கைகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்த விவரங்கள், அவற்றின் நிலைப்பற்றியும் உடனுக்குடன் தெரிந்துகொள்ள முடியும்.

அத்துடன், உள்ளாட்சி கட்டமைப்புக்களான, பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், எரியூட்டு மயானம், மார்க்கெட், விளையாட்டு மைதானம், நகர்நல மையம், கழிப்பறைகள் உள்ளிட்ட பொதுமக்கள் பயன்படுத்தும் அனைத்து இடங்களிலும் பொருத்தப்பட்டுள்ள விரைவுத் துலங்கல் குறியீடு மூலம் பொதுமக்கள் தங்களது கருத்துக்களைப் பதிவு செய்தால் உள்ளாட்சிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டு அக்கட்டமைப்புக்களை மேலும் நல்ல முறையில் மக்கள் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மேம்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுமக்கள் விரைவுத் துலங்கல் குறியீடு மூலம் தெரிவிக்கும் கோரிக்கைகள் / புகார்கள் அனைத்தும் உள்ளாட்சி அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் ஒருங்கிணைந்த முறையில் பெறப்படும். பின்பு அவைத் தொடர்புடைய அலுவலர்கள் மூலம் தீர்வு காணப்படுவதால் பொதுமக்களுக்கானச் சேவைகள் அனைத்தும் இந்தச் "சீர்மிகு ஆளுமை" திட்டத்தின் மூலம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

"செழிப்பு" இயற்கை உரம் விற்பனைக்குத் தொடங்கி வைத்தல்

2023-2024ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில், நகர்ப்புரங்களில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகள் நுண்ணுரக் கூடங்களில் இயற்கை உரமாக மாற்றப்படுகின்றன. தரமான இயற்கை உரத்தை நுகர்வோருக்கு அளிக்கும் பொருட்டு, உரத்தின் தழை, மணி, சாம்பல் சத்து பகுப்பாய்வு செய்யப்படுகிறது. இவ்வாறு பகுப்பாய்வு செய்யப்பட்ட இயற்கை உரத்தினைச் "செழிப்பு" என்ற பெயரில் தரக்குறியீடு நிர்ணயம் செய்து அனைத்து நகரங்களிலும் விற்பனை செய்து வருமானம் ஈட்ட வழிவகை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, ஈரக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்குச் "செழிப்பு" எனப் பெயரிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விற்பனைக்காக அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புர உள்ளாட்சிகளிலும் சுமார் 15,000 டன் குப்பை நாளொன்றுக்கு சேகரம் ஆகிறது. இதில் சுமார் 55 சதவிகிதம் மக்கும் குப்பையாகும். மக்கும் குப்பையிலிருந்து சுமார் 15 சதவிகிதம் உரமாகப் பெறப்படுகிறது.

மாநகராட்சிகளில் 629 இடங்களில், நகராட்சிகளில் 334 இடங்களில், பேரூராட்சிகளில் 489 இடங்களிலும் உள்ள நுண் உர மையங்கள், காற்றாடல் மையங்களில் மக்கும் குப்பை அறிவியல் முறையில் செயலாக்கம் செய்யப்பட்டு இயற்கை உரமாக மாற்றப்படுகிறது. இவற்றில் நாள் ஒன்றுக்குச் சுமார் 870 மெ.டன் இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகள், பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

இந்த உரம் பயன்படுத்தும் பொழுது மண்ணின் காற்றோட்டம் மற்றும் நீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும் தன்மை மேம்படுத்தப்படுவதோடு, மண்ணில் இடப்படும் இரசாயன உரத்திலிருந்து சத்துக்களை விடுவிக்கும் தன்மை, அதனை பயிர் ஏற்றுக் கொள்ளும் வடிவில் சத்துக்களை மாற்றும் தன்மையும் ஏற்படும். ❖

சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் ரூ.54.61 கோடிச் செலவில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.05.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.54.61 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

2022-2023ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில், "செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), இயந்திர அறிவு (Machine Learning), நம்பிக்கை இணையம் (Block chain) போன்ற வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களின் முக்கியத்துவத்தை இந்த அரசு நன்கு அறிந்துள்ளது. இதனை ஊக்குவிப்பதற்காக, சென்னையில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT) அரசால் அமைக்கப்படும். மாநிலத்தின் பெரும் தொழில்நுட்ப சவால்களுக்குத் தீர்வு காணவும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைச் செயல்படுத்துவதற்கான பணிகளை ஒருங்கிணைக்கவும் இந்த மையம் செயல்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.54.61 கோடிச் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப (iTNT) மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

இம்மையம், புதுமைகளை (Innovations) ஒரு சேர அமைப்பதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க ஒரு ஊக்கியாகச் செயல்பட்டு,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார் – 15.05.2023

உலகளவில் தமிழ்நாட்டை முதல் 10 இடங்களில் நிலைநிறுத்துவதைத் நோக்கமாகக் கொண்டது. ஆழ்தொழில்நுட்ப (DeepTech), வளர்ந்துவரும் தொழில்நுட்ப முனைவோர்களை ஊக்குவித்து, பெரு நிறுவனங்கள், கல்வி நிறுவனங்களுடன் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் ஒருங்கிணைந்து, உயர்தொழில்நுட்ப முன்மாதிரி, வடிவமைப்பு வசதிகளை அமைத்து உலகளாவிய இணைப்புகளை இந்த மையம் உருவாக்கும்.

இந்தியாவிலேயே முதன்முறையாக நிறுவப்பட்டுள்ள இத்தகைய தொழில்நுட்ப மையம், கல்வி நிறுவனங்கள், ஸ்டார்ட்அப்கள் (start-ups), பெரு நிறுவனங்கள், அரசு ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும். இம்மையத்தின் தொடக்க விழாவின் ஒரு பகுதியாக, 19 ஸ்டார்ட்அப் (start-up) நிறுவனங்களுடன் இணைந்து வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டச் செலவிற்கு ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் 50 சதவிகிதம் நிதியினை வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு 37 சதவிகிதம் நிதியுதவியும், தொழில் நிறுவனங்கள் மூலம் 13 சதவிகிதம் நிதி உதவியும் பெறப்பட்டுள்ளது. இந்த மையம், தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பம், டிஜிட்டல் சேவைகள் துறையின்கீழ் ஒரு இலாப நோக்கமற்ற நிறுவனமாக அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.20,000 கோடி முதலீட்டில் தொழிற்சாலை நவீனமயமாக்கல், நவீன வகை கார்கள் உருவாக்குதல் போன்ற திட்டங்களுக்கானப் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 11.05.2023 அன்று, சென்னையில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தென் கொரியா நாட்டைச் சேர்ந்த ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்தின் நூறு சதவிகித துணை நிறுவனமான ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம் ரூ.20,000 கோடி முதலீட்டில், தொழிற்சாலையை நவீனமயமாக்கல் மற்றும் நவீன வகை கார்கள் (New Models Car) உருவாக்குதல், மின் வாகன மின்கலன் ஒன்று கூட்டப்பட்ட தொகுப்பு (EV Battery Assembly Pack), மின் வாகன மின்னேற்று நிலையங்கள் (EV charging Stations) அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ளத் தேவையான வசதிகளைச் செய்து தருவது குறித்துத் தமிழ்நாடு அரசின் வழிகாட்டி (Guidance) நிறுவனத்திற்கும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது - 11.05.2023

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. பன்நோக்குத் திட்டங்களைப் பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கவும், மாநிலப் பொருளாதாரத்தை வலுவடையச் செய்திடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்ற இலக்கினை அடைந்திட பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, 2024ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 10, 11 ஆகிய தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டினைச் சிறப்பான முறையில் நடத்தி, பெருமளவிலான முதலீட்டினை

ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசின் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு, வர்த்தகத் துறை மேற்கொண்டு வருகிறது.

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனப் புரிந்துணர்வு ஒப்பந்தம்

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனம், ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்திற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், இந்தியாவின் முதல் நுண்திறன் நகர்வு ஆற்றல் தீர்வுகள் (smart mobility solutions) வழங்குநராகவும், சீருந்து ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கும் நிறுவனமாகவும் உள்ளது. அதன் தொடக்கத்திலிருந்தே, 'மனிதகுலத்திற்கான முன்னேற்றம்' என்ற ஹூண்டாயின் உலகளாவிய தொலைநோக்குப் பார்வையுடன், தொழில்துறைக்கு முன்னணி தொழில்நுட்பத்துடன் நகர்வு ஆற்றல் தீர்வுகளை வழங்குவதன் மூலம் வருங்காலச் சந்ததியினருக்கு நிலையான கண்ணோட்டத்தை உருவாக்குகிறது.

சென்னையை அடுத்த இருங்காட்டுக் கோட்டையில் ஹூண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனத்தின் முதலாவது ஆலை அமைப்பதற்கு 10.12.1996 அன்று, முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிறுவனம் தற்போது இந்தியா முழுவதும் 1,340 விற்பனை மையங்களையும், 1,502 சேவை மையங்களையும் கொண்ட வலுவான வலையமைப்புடன் செயல்பட்டு வருகிறது. 12 பிரிவுகளில் வலுவான சீருந்து மாடல்களைக் கொண்டுள்ளதுடன் முழுமையான ஒருங்கிணைந்த அதிநவீன உற்பத்தி ஆலை, மேம்பட்ட உற்பத்தி, தரம், சோதனைத் திறன்களைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம், ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்கு, இலத்தீன் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆசியா, பசிபிக் போன்ற 85 வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்தின் உலகளாவிய ஏற்றுமதி மையத்தில் முக்கிய பங்களிப்பை அளித்து வருகிறது.

ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் (HMIL) நிறுவனம் ரூ.20,000 கோடி முதலீட்டில், தொழிற்சாலையை நவீனமயமாக்கல், நவீன வகைக் கார்கள் உருவாக்குதல், மின் வாகன மின்கலன் கூட்டப்பட்ட தொகுப்பு, மின் வாகன மின்னேற்று நிலையங்கள் அமைத்தல் போன்ற திட்டங்களை மேற்கொள்ள தேவையான வசதிகளை செய்து தருவது குறித்துத் தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்திற்கும் ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 11.05.2023 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

26 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் ஹூண்டாய் மோட்டார்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம், மேலும் ரூ.20,000 கோடி முதலீடு செய்து தனது தொழில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முன்வந்திருப்பது, உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புக்கள், தொழில் செய்வதற்கு உகந்த சூழலைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளதற்கும், தெற்காசியாவிலேயே முதலீட்டிற்கு மிகவும் உகந்த இடமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருவதற்கும் மேலும் ஒரு சான்றாகும்.

இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

1996ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஹூண்டாய் நிறுவனத்தினுடைய முதல் அலகிற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

ரூ.4,000 கோடி முதலீட்டில் இரண்டாவது தொழிற்சாலையையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் துவங்கப்பட்டது.

இதே ஹூண்டாய் நிறுவனத்தினுடைய ஒரு கோடியாவது காரை 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொழிற்சாலையில் இருந்து நான் அறிமுகம் செய்து வைத்ததை இந்த நேரத்தில் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிற்கும், ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்திற்கும் இடையே உள்ள நம்பிக்கை, கூட்டு முயற்சியின் காரணமாக இந்த நிறுவனத்தினுடைய மொத்த முதலீடு சுமார் ரூ.23,900 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இது நமக்கெல்லாம் பெருமை அளிக்கக்கூடிய விஷயமாக அமைந்திருக்கிறது. தற்போது ஹூண்டாய் நிறுவனம், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய கார் உற்பத்தி நிறுவனமாகவும், கார் ஏற்றுமதியில், இரண்டாவது இடத்தில் இருப்பதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது.

ஆட்டோமொபைல், அதன் பாகங்கள் தயாரிப்பில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தை வகிக்கிறது. அதன் அடுத்த பரிணாம வளர்ச்சியாக, மின்னூர்திகள் (Electrical vehicles) தயாரிப்பில் தற்போது தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உருவாகியுள்ளது உள்ளபடியே

பாராட்டுக்குரியது. இதற்கு, தமிழ்நாட்டில் உள்ள திறன் வாய்ந்த மனித வளம், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு ஆகியவற்றுடன், தமிழ்நாடு அரசின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் முக்கிய காரணங்களாக உள்ளன. அந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகத்தான், 2023ஆம் ஆண்டு பிப்ரவரியில் "தமிழ்நாடு மின்வாகனக் கொள்கை 2023" என்னால் வெளியிடப்பட்டது.

இதன் காரணமாக, ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம், இந்தியாவிற்கும், பிற உலக நாடுகளுக்கும், மின்னூர்தி தயாரித்தலுக்கான தனது நெடுங்கால முதலீட்டுத் திட்டத்திற்கு, முதன்மைத் தளமாக தமிழ்நாட்டைத் தேர்வு செய்துள்ளது உள்ளபடியே நமக்கெல்லாம் பெருமை அளிக்கக்கூடிய விஷயமாக அமைந்திருக்கிறது. அதற்காக, தமிழ்நாடு அரசின் சார்பாக எனது நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஹூண்டாய் நிறுவனம், இருங்காட்டுக் கோட்டையில் தற்போதுள்ள தொழிற்சாலையை, உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைக்கான மின்னூர்தி மையமாக மேம்படுத்தும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை. இந்நிறுவனம், சுற்றுச்சூழலுக்கு உகந்த, நீடித்து நிலைக்கத்தக்க தயாரிப்பினை முக்கிய கருப்பொருளாகக் கொண்டு, 15 ஆயிரம் நபர்களுக்கு நேரடியாகவும், 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கு அதிகமானோருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

முதலீடுகளை ஈர்த்து அதன் மூலம் அதிக அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக முனைந்து செயல்படும் இந்த அரசின் முயற்சிகளுக்கு இது உறுதுணையாக உள்ளது என்பதால் உங்களை நான் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்து வந்த, ஏற்கெனவே அந்தப் பொறுப்பில் இருந்த நம்முடைய மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு அவர்களும், அவருக்கு உதவியாக இருந்த தொழில் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களும், தொழில்துறை அதிகாரிகளும், இந்திய அளவில் மட்டும் இன்றி, பல்வேறு நாடுகளுக்கும் சென்று முன்னணி தொழில் துறையினரைச் சந்தித்து பெரும் முதலீடுகளை ஈர்த்து, தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்துள்ளனர். அதற்காக, நான் அவர்களை இந்த நேரத்தில் மனதாரப் பாராட்ட விரும்புகிறேன்.

மேலும், இன்றைய தினம், மாண்புமிகு தொழில்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள திரு. டி.ஆர்.பி.ராஜா அவர்களும், மிகவும் முனைப்புடன் செயல்பட்டு, அதிக முதலீடுகளை ஈர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலையில், உங்களுக்கு நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, நிருவாக காரணங்களுக்காக மாண்புமிகு அமைச்சர்களின் இலாக்காக்கள் மாறினாலும், தமிழ்நாடு அரசு, தொழில் துறையினருக்கு அளித்துவரக்கூடிய ஆதரவும், தொழில்துறை வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளும் என்றும் தொடரும் என்று இந்த தருணத்தில் நான் கூற விரும்புகிறேன்.

தலைவர் கலைஞருடைய ஆட்சியில் தொடங்கப்பட்டு, தமிழ்நாட்டில் பல விரிவாக்கங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு வரும் ஹூண்டாய் நிறுவனம், தற்போது ரூ.20,000 கோடி முதலீடு செய்ய முன்வந்திருப்பது இதுவே சாட்சியாக அமைந்திருக்கிறது. இந்த முதலீடு, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 2030ஆம் ஆண்டிற்குள், ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயர்த்திட வேண்டும் என்ற நமது இலட்சிய இலக்கினை அடைவதற்கு ஒரு பாய்ச்சலாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

இங்கே வெகு சிறப்பாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கக்கூடிய ஹூண்டாய் நிறுவன அலுவலர்களுக்கும், நமது அரசு அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் துறை நிச்சயமாக ஏற்கெனவே முன்னேறி வந்திருக்கிறது. இன்னும் முன்னேறப் போகிறது. அதற்கு இன்னுமொரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றுச் சொன்னால், நான் கடந்த ஆண்டும் சரி, இப்போது இந்த ஆண்டும் சரி, எந்த நிகழ்ச்சியில் அதிகம் கலந்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னால், தொழில்துறை நிகழ்ச்சியில்தான் அதிகம் கலந்து கொண்டிருக்கிறேன். அதுவே அதற்குச் சாட்சியாக அமைந்திருக்கிறது என்று கூறி, நமது அரசு அலுவலர்களுக்கும், ஹூண்டாய் நிறுவன அலுவலர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 128ஆவது பிறந்த நாள்

பட்டும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 05.06.2023 அன்று, கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 128ஆவது பிறந்தநாளை முன்னிட்டுத் தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மலர் போர்வை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழை ஆட்சிமொழியாக்க ஆணித்தரமாக வாதாடிய மொழிக்காவலர்

கல்லூரிப் படிப்பைக் கைவிட்டு இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைசிறந்த நாட்டுப்பற்றாளர்.

ஆட்சிமொழிப் பிரச்சினையில், தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என அரசியல் நிர்ணய அவையில் ஆணித்தரமாக வாதாடிய மொழிக்காவலர்.

தொகுதிக்குச் செல்லாமலேயே போட்டியிட்ட தேர்தல்களில் எல்லாம் வெற்றிபெறக் கூடிய அளவுக்குச் செல்வாக்குக் கொண்டிருந்த தனிப்பெரும் தலைவர்.

அரசியல் நிர்ணய அவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், தமிழர்களுக்காகவும் சிறுபான்மைச் சமுதாயத்தினரின் உரிமைகளுக்காகவும் உரக்கக் குரல் எழுப்பிய அரிமா.

"இவ்வளவு பெரிய முஸ்லிம் சமுதாயத்திற்கு இம்மாதிரி ஒரு தலைவர் மீண்டும் கிடைப்பது அரிது" என்று அவரது மறைவின்போது தந்தைப் பெரியாரால் உருக்கத்துடன் பாராட்டப்பட்ட மாசற்ற மாணிக்கம் – கண்ணியமிகு 'காயிதே மில்லத்' முகம்மது இஸ்மாயில் அவர்களின் பிறந்தநாளில் இந்நாட்டுக்காக அவர் ஆற்றிய ஒப்பற்றுப் பங்களிப்புக்களை நினைவுகூர்ந்து போற்றுகிறேன்.

– கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 128ஆவது பிறந்தநாளை முன்னிட்டு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு-05.06.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

ஜூலை 11 – வீரன் அழகு முத்துக்கோன் அவர்கள் பிறந்த நாள்

‘நெஞ்சுரம் மிக்க வீரர்’



பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டுவதைத் தடுத்து, ஆங்கிலேயர்களை எதிர்த்த கட்டாலங்குளம் சீமையின் மன்னராகத் திகழ்ந்தவர் வீர அழகு முத்துக்கோன்.

1710ஆம் ஆண்டு மன்னர் அழகு முத்துக்கோனுக்கு மகனாகப் பிறந்தவர் விடுதலை வீரர் வீரன் அழகு முத்துக்கோன், 1750இல் தன்னுடைய 22ஆவது வயதில் முடிசூடிக்கொண்டார். பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டுவதை எதிர்த்தும், தடுத்தும் வந்தமையால், ஆங்கிலேய அரசு யூசுப்கான் தலைமையில் கட்டாலங்குளம் பாளையம் மீது போர்த்தொடுத்தது. வீர அழகு முத்துக்கோனின் வலது காலில் குண்டு பாய்ந்தும் மூன்று மணி நேரம் தொடர்ந்து போர் புரிந்து, இறுதியில் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டு, இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு, நடுக்காட்டூர் என்னும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, 1759ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறு தளபதிகளுடன் பீரங்கியின் முன் நிறுத்தப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பீரங்கி முன் நின்று சாகும் தருவாயிலும் யாரையும் காட்டிக் கொடுக்காத நெஞ்சுரம் மிக்க வீரன் அழகு முத்துக்கோன் விடுதலைப் போராட்டத்தில் நீங்கா இடம் பெற்றார்.

நன்றி: *‘விடுதலைப் போராட்டத்தில் தமிழகம்’ என்னும் நூலிலிருந்து...*

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தலைமையில் பணி ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஆறு மண்டல இணை இயக்குநர்களின் பணி ஆய்வுக் கூட்டம் 06.06.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கம் வளாகத்தில் உள்ள மாநிலச் செய்தி நிலையக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. த.மோகன், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூரில் சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனங்களின் திட்டப் பணிகள்

சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனங்களின் திட்டப் பணிகள் குறித்துத் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு – 04.06.2023

தமிழ்நாடு அரசு தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறையின் சிப்காட் மற்றும் டிட்கோ நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப் பணிகளை, 04.06.2023 அன்று, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை வர்த்தக மைய விரிவாக்கம்

முதலாவதாக, சென்னை மாவட்டம், ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில் டிட்கோ நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் சென்னை வர்த்தக மைய விரிவாக்கப் பணிகளை ஆய்வு செய்தார். இவ்விரிவாக்கத் திட்டத்தில் 9,00,000 சதுரஅடி பரப்பளவில் ரூ.309 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும், 4,000 நபர்கள் அமரக்கூடிய மாநாட்டு அரங்கம் மற்றும் 5 பொருட்காட்சி அரங்கங்கள், பன்னடுக்கு வாகன நிறுத்தம் (Multi Level Car Parking) ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார். இக்கட்டுமானப் பணிகளை உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் முழுவதுமாக முடிக்கப்பட வேண்டும் எனத் தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஒருங்கிணைந்த பணியாளர் தங்கும் விடுதி, சிப்காட் வல்லம் வடகால்

அடுத்ததாக, சிப்காட் நிறுவனம் மூலம் காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகாலில், ரூ.680 கோடி மதிப்பீட்டில் 18,720 தொழிலாளர்கள், பணிபுரியும் தொழிற்சாலைகளின் அருகாமையில் தங்கும் வகையில் கட்டப்பட்டுவரும் ஒருங்கிணைந்த பணியாளர் விடுதியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பணியாளர் விடுதியின் கட்டுமானப் பணிகள், சாலை வசதி, குடிநீர் வசதி, விளையாட்டு அரங்கம், கழிவு நீர்ச் சுத்திகரிப்பு, மழைநீர்ச் சேகரிப்பு, சூரிய சக்தியின் மூலம் மின் உற்பத்தி போன்ற பல்வேறு வசதிகள் ஏற்படுத்துதல் தொடர்பாகவும் ஆய்வு செய்தார். இப்பணிகளைக் குறித்த காலத்திற்குள் கட்டி முடிக்குமாறு அறிவுறுத்தினார்.

சிப்காட் தொழில் புத்தாக்க மையம் (ஃபோர்ட்)

திருப்பெரும்புதூர் சிப்காட் தொழில் பூங்காவைப் பார்வையிட்டப் பின் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர், மாம்பாக்கத்தில், ரூ.16.45 கோடியில் தொழில் தொடங்குவோர், கண்டுபிடிப்பாளர்கள் பயன்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ள சிப்காட் தொழில் புத்தாக்க மையத்தை (ஃபோர்ட்), ஆய்வு மேற்கொண்டார். இம்மையத்தில் அமைக்கப்பட்டுள்ள உடன் பணிபுரியும் இடம் (co-working space), தொழில் 4.0 உபகரணங்கள், தயாரிப்புகள் மேம்பாட்டு மையம், முன்மாதிரி தயாரிப்பு வசதி (proto typing facilitation), பயிற்சி மையம் போன்ற பல்வேறு வசதிகள் குறித்து ஆய்வு செய்து சிறந்த முறையில் பராமரிக்கக் கேட்டுக்கொண்டார்.

டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, பட்டாபிராம்

நிறைவாக, திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம் பட்டாபிராமில் டிட்கோ நிறுவனம் மூலம் ரூ.327 கோடி மதிப்பீட்டில் 5,62,000 சதுரஅடியில் கட்டப்பட்டு வரும் டைடல் தொழில்நுட்பப் பூங்காவைத் (TIDEL PARK) தலைமைச் செயலாளர் அவர்கள் ஆய்வு செய்தார். இப்பூங்காவில் கட்டப்பட்டுவரும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா, 2 உணவகக் கட்டடம் (Food Court) ஆகிய கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு இப்பணிகளைத் துரிதமாக முடிக்குமாறு தலைமைச் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தினார்.

வெற்றிக்கதை

விழுப்புரம் மாவட்டம்

நலிவுற்ற குடும்பங்களுக்கு ஏற்றம் தந்து பெண்களின் வாழ்க்கை நிலை உயர்வதற்குக் காரணமாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு நன்றி!

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்ற வள்ளுவரின் வரிகளுக்கு வலுசேர்க்கும் விதமாக நாட்டின் வளர்ச்சி, பொருளாதாரத்தில் உள்ளது. பொருளாதாரம் பெருக வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கம். அந்த வகையில் தனிநபரின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்புக் கவனம் எடுத்துச் செயலாற்றும் தலைவராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருந்து வருகிறார்.

வறுமையிலுள்ள குடும்பங்கள் பயன்பெறும் வகையில் 1989ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இத்திட்டம் இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மேலும் இத்திட்டத்தைப் பாதுகாத்திடும் வகையில் பல்வேறு உதவிகள் செய்து பல இலட்சம் குடும்பங்கள் இதன்மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

அந்த வகையில், கிராமப்புறங்களிலுள்ள வறுமையிலுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து, அவர்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்குடன், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்கள் சுயதொழில் துவங்கிப் பொருளாதாரம் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற நோக்குடன் தேவையான தொழிற் பயிற்சியுடன் கூடிய வங்கிக் கடனுதவித் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார். அந்தவகையில் தற்பொழுது, நடப்பாண்டிற்கு ஏழைகளின் வாழ்வாதாரம் ஏற்றம் காண ரூ.20,000 கோடி நிதி ஒதுக்கீட்டை வழங்கி ஆணையிட்டுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 14.12.2021 அன்று, மகளிர்களுக்கான மாபெரும் வங்கிக்கடன், பல்வேறு வகையான நலத்திட்ட உதவிகளை வழங்கித் துவக்கி வைத்துள்ளார். அதனையொட்டி, விழுப்புரம் மாவட்டத்தில் மகளிர் குழுக்கள் பயன்பெறும் வகையில் 40,772 உறுப்பினர்கள் அடங்கிய 2,675 மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு ரூ.127.18 கோடி மதிப்பிலான கடனுதவிகள், நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதுபோல் மேலும், அவ்வப்போது மாவட்டத்தில் மகளிர் குழுக்களுக்குத் தேவையான பல்வேறு

நலத்திட்ட உதவிகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வரும் பயனாளிகள் கோமகள் மகளிர் குழு உறுப்பினர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், சிறுவந்தாடு ஊராட்சியில் 16 உறுப்பினர்கள் இணைந்து கோமகள் மகளிர் குழு நடத்தி வருகிறோம். குழு ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பக் காலத்தில் தமிழ்நாடு அரசு மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருவதை அறிந்தோம். எங்கள் ஊர் பட்டுக்கெனத் தனிச்சிறப்பு மிக்க பெயர் பெற்ற ஊர் என்பதை அறிந்த நாங்கள், பட்டுத் தொழில் செய்யலாம் என்று முடிவு செய்து, முதலீடு செய்வதற்குக் குழுவின் கூட்டமைப்பில் இணைந்து கூட்டமைப்புக் கடன் பெற்று முன்முதலீடு செய்து மனோரஞ்சிதம் பட்டு சென்டர் என்ற பெயர் வைத்துத் தொழிலைத் தொடங்கினோம். எங்கள் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் பட்டுத் தொழிலில் அதிக ஈடுபாடு இருந்தமையால் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் வங்கிக்கடன் ரூ.9 இலட்சம் பெற்று பட்டுத் தொழிலை விரிவுபடுத்தினோம். இதன் மூலமாகக் குழுவில் உள்ள அனைவருக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்தது மட்டுமல்லாமல் போதிய வருமானமும் கிடைக்கப்பெற்று வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் அடைந்தோம். இதன் மூலமாகக் கிடைக்கப்பெற்ற வருவாயின் மூலமாக எங்கள் குழு உறுப்பினர்களின் குடும்ப வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொண்டோம். இத்திட்டத்தினை அறிவித்துச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எங்கள் குழுவின் சார்பாகவும், அனைத்து மகளிர் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்று வரும் பயனாளிகள் அன்னை தெரசா மகளிர் சுயஉதவிக் குழுவினர் நம்மிடம் தெரிவித்ததாவது,

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், முட்ராம்பட்டு ஊராட்சியில் 16 உறுப்பினர்கள் இணைந்து அன்னை தெரசா மகளிர் குழு நடத்தி வருகிறோம். ஆரம்பக் காலத்தில் சாதாரணமாகத் துவங்கப்பட்டு எங்கள் குழுவில் வாரந்தோறும் சேமிப்புத் தொகை செலுத்துவது அவற்றில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டியினைப் பிரித்துக்கொள்வது என்றே சுயஉதவிக்குழு செயல்பட்டுவந்தது. தமிழ்நாடு அரசு,

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் குழு மூலம் ரூ.25,000 கடனும், வங்கிக் கடன் இணைப்பாக ரூ.3 இலட்சம் பெறப்பட்டுக் கரும்பு ஜூஸ் கடை நடத்தி வருகிறோம். இதன்மூலம், மாதம் ரூ.5,000 கிடைக்கப்பெறுகிறது. இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறப் பகுதிகளில் உள்ள ஏழை, எளிய குடும்பப் பெண்களின் வாழ்க்கை நிலை உயருவதற்குக் காரணமாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எங்கள் குழு சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
விழுப்புரம் மாவட்டம்

தமிழரசு

செய்தித்துறையின் வெளியீடு

தமிழரசு (தமிழ்) மாத இதழ்		தமிழரசு (ஆங்கிலம்) மாத இதழ்	
தனி இதழ்	: ரூ.30	தனி இதழ்	: ரூ.30
ஆண்டுச் சந்தா	: ரூ.360	ஆண்டுச் சந்தா	: ரூ.360
ஆயுள் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட)	: ரூ.3,200 (10 ஆண்டுகள்)	ஆயுள் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட)	: ரூ.3,600 (10 ஆண்டுகள்)

படிக்க! பயனடைய!! பாதுகாக்க!!!

“ நான்கு வண்ண வெப் ஆப்செட் என்ற புதிய நவீன இயந்திரத்தின் மூலம் அச்சிடப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கும் தமிழரசு மாத இதழ் தற்போதைய சந்தை நிலவரப்படி மூலப்பொருட்களின் விலையேற்றத்தைக் கருத்தில்கொண்டு ஜூன் 2023 முதல் மேற்கண்டவாறு சந்தாத்தொகை உயர்த்தப்படுகிறது என்பதைச் சந்தாதாரர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.”

இ-சேவை மையங்கள் வாயிலாகத் தமிழரசு சந்தாத் தொகை செலுத்தும் வசதி!

மேலும், தமிழரசு சந்தாத் தொகையினை வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ
இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை-600 113
என்ற முகவரிக்குத் தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர்,
ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண்,
கைப்பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்பித்
தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.



தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்தில் சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

களஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 09.06.2023 அன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆலங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்களிடம் கலந்துரையாடி அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழாவினையொட்டி
செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில்
நடைபெற்ற நிகழ்ச்சியில்,
சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட
மேற்கு வங்க மாநில முன்னாள் ஆளுநர்
திரு. **கோபாலகிருஷ்ண காந்தி** அவர்கள்
முன்னிலையில், முத்தமிழறிஞர் கலைஞர்
நூற்றாண்டு இலச்சினையை,
சென்னை கலைவாணர் அரங்கத்தில்
02.06.2023 அன்று வெளியிட்டார்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,